பனூ நுளைர் ஆகிய கோத்திரத்தார் நிராகரித்தார்கள். அதற்குப் பிறகு கைபரிலுள்ள யூதர்கள் இவர்களைப் பின்பற்றி நிராகரித்தனர். அதற்குப் பிறகு மற்ற யூதர்கள் இவர்களைப் பின்பற்றி நிராகரித்தனர். ஆகவே இவர்கள் முதல் முதலாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நிராகரிக்காமல் இருந்திருந்தால் மற்ற யூதர்களும் ஒருவரைப் பார்த்து ஒருவராக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நிராகரிக்காமல் இருந்திருப்பர். ஆகவே, பிந்தியவர்கள் செய்த பாவமும் முந்தியர்கள் மீது ஏற்பட்டு விடுகிறது. இதனைக் குறித்துத் தான் அல்லாஹு தஆலா யூதர்களை நோக்கி **"திருக்குர்ஆனை நிராகரிப்பவர்களில் முதன்மையானவர் களாகி விட வேண்டாம்"** என்று கூறி இருக்கிறான்.

ثَمَنًا قَلِيلًا **அற்பக் கிரயத்திற்கு** என்பது இவ்வுலகத்திலுள்ள பொருள்களைக் குறிக்கிறது. இவ்வுலகத்துச் செல்வம் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் அவர்கள் ஈமான் கொள்ளாமலிருந்தால் அவர்களுக்குத் தப்பி விட்ட மறு உலகப் பாக்கியங்களின் முன்னிலையில் இவ்வுலகத்துச் செல்வம் மிகவும் சொற்பமானதாகவே இருக்கிறது.

யூதர்களிலுள்ள பொது மக்கள் அவர்களில் கற்றவர்(களாக இருந்த அஹ்பார்)களுக்குத் தங்கள் விவசாயங்களிலும், கனிகளிலும் இருந்து பங்கு கொடுத்துக் கொண்டிருந்தனர். இன்னும் அவர்களுக்குக் காணிக்கைகளும் கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களுடைய ஷரீஅத்தில் அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கின்றவற்றை மாற்றிக் கூறுவதற்காக அந்த அஹ்பார்களுக்கு அவர்கள் லஞ்சம் கொடுத்துக் கொண்டும் இருந்தனர். ஆகவே, அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி தவ்ராத் வேதத்திலுள்ளதை உள்ளபடி சொன்னால் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விசுவாசங் கொண்டு முஸ்லிமாகி விடுவார்கள். அவர்கள் அப்படி முஸ்லிமாகி விட்டால் தங்களுக்குக் கிடைக்கும் பொருட்கள், ஆடுமாடுகள் வெகுமதிகள் கிடைக்காமல் தவறிப் போகும் என்று பயந்தார்கள்.

وَلَا تَلْبِسُوا الْحَقَّ بِالْبَاطِلِ وَتَكْتُمُوا الْحَقَّ وَأَنْتُمْ

تَعْلَمُونَ ﴿٤٢﴾

42. மேலும் நீங்கள் (இவ்விஷயத்தை) அறிந்து கொண்டே உண்மையை மறைத்து பொய்யை உண்மையென மாற்றி விடாதீர்கள்.

இந்த ஆயத்தில் இரண்டு வகைக் காரியங்கள் விலக்கப் பட்டிருக்கின்றன. நீங்கள் இட்டுக் கட்டி இருக்கிறவைகளுடன் உண்மையாகவே இறக்கப்பட்டுள்ள வேத வாக்கியங்களையும் கலந்து விடாதீர்கள் என்றும், உண்மையைக் கூறாமல் மறைத்து விடாதீர்கள் என்றும் இறைவன் இந்த ஆயத்தில் கூறி இருக்கிறான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி தவ்ராத் வேதத்தில் வர்ணித்திருப்பதை நாங்கள் பார்க்கவே இல்லை என்று யூதர்களிலுள்ள அஹ்பார்களும் தலைவர்களும் கூறிக் கொண்டிருந் தார்கள். இன்னும் சிலர் வேத வாக்கியத்திற்குத் தப்பான அர்த்தத்தை ஏற்படுத்தி அதிலுள்ள கருத்தை மாற்றிக் கூறி வந்தனர். ஆகவே, (ஹக்கை) உண்மையை மறைத்தல் என்பதும் ஹக்குடன் பாத்திலைக் (உண்மையை பொய்யுடன்) கலக்குதல் என்பதும் வெவ்வேறு காரியங்களாகுமென்பது இதனால் நன்கு தெரிய வருகிறது.

பனீ இஸ்ராயீல்களைக் குறித்து இந்த ஆயத்து இறக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களது செயல்களைப் போல் செய்கிற அனைவருக்கும் இந்த விலக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சத்தியமாக காரியத்தைப் பேதம் செய்து அதனை இல்லாமலாக்குவதற்காக லஞ்சம் வாங்குபவர்கள், தம் மீது கடமையாக உள்ளதை கொடுக்கமாட்டேன் என்று விலகிக் கொள்பவர்கள், அல்லது கல்வி கற்றுக் கொடுப்பதற்கென்று ஒருவரை நியமித்து அதற்காக அவர் சம்பளமும் வாங்கிக் கொண்டு, தாங்கள் கற்றதை நிறைவேற்றாமல் விலகிக் கொள்பவர்கள் ஆகிய யாவருக்கும் இந்த ஆயத்து பொதுவானதாகும். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருவன் "அல்லாஹு தஆலாவினுடைய

பொருத்தத்தை நாடாமல் உலகினுடைய பிரயோஜனத்தை பெற இல்மை (கல்வியை)ப் படித்தால் அவன் கியாமத்தில் சுவர்க்கத்துடைய வாடையைப் பெற்றுக் கொள்ள மாட்டான்'' என்று கூறி இருக்கிறார்கள்.

وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ ۝

43. இன்னும், நீங்கள் தொழுகையை நிறைவேற்றி 'ஜகாத்' (மார்க்க வரி விகிதத்)தையுங் கொடுத்து, 'ருக்கூஹ்' செய்பவர்களுடன் 'ருக்கூஹ்' செய்யுங்கள்.

اَقِيْمُوا الصَّلٰوةَ **(யூதர்களே) நீங்கள் தொழுகையை நிறைவேற்றி** என்று அல்லாஹு தஆலா கூறி இருப்பதற்கு விசேஷமான கருத்துகளுண்டு. தொழுகையினுடைய ஃபர்லு, ஷர்த்து, சுன்னத்து முதலியவற்றை பயபக்தியுடன் நிறைவேற்றுவதுடன், அதனை விடாமல் தொடர்ந்து நிறைவேற்றுவதற்குத்தான் தொழுகையை நிறைவேற்றல் என்று பெயர். மறந்தவர்கள் அஜாக்கிரதையாக, பயபக்தியில்லாமல் ஒரு நேரம் தொழுது இன்னொரு நேரம் தொழுகாமலும் இருப்பதற்கு தொழுகையை நிறைவேற்றல் என்று சொல்வதில்லை.

ஜக்காத்து என்பது **சுத்தம்** என்று பெயர். தன்னுடைய வெள்ளாண்மையில் களை முதலியவை இல்லாமல் சுத்தப் படுத்துவதற்கும் அறபியில் **ஜக்காத்** என்று பெயர் சொல்லப்படுகிறது. இதுபோல் தனது வருமானத்திலிருந்து கணக்குப் படியுள்ள தொகையை எடுத்து ஷரீஅத்தின் கட்டளைப்படி ஜக்காத்துக் கொடுத்து விட்டால் அந்தப் பொருளை அது சுத்தப்படுத்தி விடுகிறது. பணத்திலிருந்து ஜக்காத்துக் கொடுக்கிற அதே நொடியில் அவனது மனதிலுள்ள கஞ்சத்தனமும் அவனை விட்டு நீங்கிவிடுகிறது.

وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ **ருக்கூஉ செய்பவர்களுடன் நீங்களும் ருக்கூஉ செய்யுங்கள்** என்று இறைவன் கூறி இருப்பதற்கு இந்த இடத்தில் இரண்டு விதமான கருத்துகள் இருக்கின்றன.

1. யூதர்களுக்கும் தொழுகை கடமைய(ஃபர்ல)ாக்கப் பட்டிருந்தது. ஆனால், அவர்களுடைய தொழுகையில் ருக்கூஉ இல்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஷரீஅத்தில்தான் ருக்கூஉ செய்வது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தொழுகையை நிறை வேற்றுங்கள் என்று மேலே கூறப்பட்டுள்ள வாக்கியம் யூதர்களுடைய தொழுகையைக் குறிப்பிடவில்லை என்றும் முஸ்லிம்களுடைய தொழுகையையே குறிப்பிட்டிருக்கிறது என்றும் இந்த வாக்கியத்தில் இருந்து நன்கு தெரியவருகிறது.

2. ருக்கூஉ செய்பவர்களுடன் சேர்ந்து ருக்கூஉ செய்யுங்கள் என்பதால் தொழுகையை இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றும்படி அல்லாஹு தஆலா கட்டளையிட்டிருக்கிறான் என்றும் நமக்குத் தெரிய வருகிறது.

தொழுகையை இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றுவது தனித்துத் தொழுவதைப் பார்க்கினும் இருபத்து ஏழு மடங்கு அதிகம் நன்மையுள்ளதாக இருக்கிறது. மேலும், இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது தன் மனதுடன் யுத்தம் செய்வது போலிருக்கிறது. அதாவது, தொழுகை யுத்தத்தைப் போன்றும் மிஹ்ராபு யுத்தம் செய்யுமிடத்தை போன்றும் இருக்கிறது. யுத்தம் செய்யுமிடத்தில் அணிவகுத்து நின்று ஒன்று போல் தாக்கினால் எதிரியை வெல்ல அதிக வசதியாக இருக்கும். இதுபோல இமாம் ஜமாஅத்திலும் தொழுகையாளிகள் வரிசை வரிசையாக நின்று தொழுகின்றார்கள். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''முஸ்லிம்களில் 40 பேர் கொண்ட ஒரு கூட்டத்தில் பிழைபொறுக்கப்பட்ட மனிதர் ஒருவர் அவசியம் இருப்பார்'' என்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

ஹதீஸ்:- தவ்ஹீதுக்குப் பிறகு, தொழுகையைப் பார்க்கினும் அதிகப் பிரியமான கடமை (ஃபர்லு). எதையும் அல்லாஹு தஆலா தனது படைப்புகளின் மீது கடமைய(ஃபர்ல)ாக்கவில்லை. தொழுகையைப் பார்க்கினும் அல்லாஹுதஆலாவுக்கு அதிகப் பிரியமுள்ளது இருக்குமாயின் அதைக் கொண்டு மலக்குகள் அவனை வணங்கி இருப்பர். ஆனால், அந்த மலக்குகளில் ருக்கூஉ செய்பவரும்

சுஜூது செய்பவரும் நிலையில் இருப்பவரும், இருப்பில் இருப்பவரும்தான் இருக்கிறார்கள்".

ஆகவே, தொழுபவர்கள் மனதில் ஓர்மையுடன் (ஹுலூரியத்தாகதி) தொழுவதில் அதிகம் பிரயத்தனம் எடுத்துக் கொள்ள வேண்டும். முற்காலத்திலிருந்த பெரியோர்களுக்குச் சொத்துகள் பொருள்கள் ஆகியவற்றைப் பற்றிய கவலைகள் தொழுகையை விட்டு மறக்கடித்து விடுமாயின், உடனே அவர்கள் அவற்றைத் தர்மம் செய்து விடுவார்கள். எனவே, தொழுகையில் அசல் அகத்தினுடைய காரியம்தான் என்பது பெரியோர்களின் செய்கையிலிருந்து தெரியவருகிறது.

اَتَاْمُرُوْنَ النَّاسَ بِالْبِرِّ وَتَنْسَوْنَ اَنْفُسَكُمْ وَاَنْتُمْ تَتْلُوْنَ الْكِتٰبَ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ۝

44. நீங்கள் வேதத்தை ஓதிக் கொண்டே உங்களையே மறந்து விட்டு (மற்ற) மனிதர்களை நன்மை செய்யும்படி ஏவுகின்றீர்களோ? (தாம் சொல்வது போற் செய்யாது மற்றவரை ஏமாற்றுவதென்பதை) நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா?

இந்த ஆயத்து யூதர்களிலுள்ள உலமாக்களின் செய்கையைக் குறித்து கூறப்பட்டிருக்கிறது. ஆயினும், எல்லா மக்கட்கும் பொதுவான போதனையே யாகும். பனீ இஸ்ராயீல்களிலுள்ள ஏழைகள், யாதொரு பிரயோஜனத்துக்கும் இடமில்லாதவர்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துத் தங்களிலுள்ள ஆலிம்களிடத்தில் கேட்டால் அவர்கள் "முஹம்மது உண்மையானவர், அவருடைய மார்க்கமும் உண்மையானது, அவருடைய மார்க்கத்திலேயே இருங்கள்" என்று சொல்வார்கள். ஆனால், அவர்கள் மட்டும் ஈமான் கொண்டு இஸ்லாத்தில் சேருவதில்லை. அத்துடன் அவர்களிலுள்ள செல்வந்தர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துக் கேட்டால் "நம்முடைய

வேதத்தில் சொல்லப்பட்ட அடையாளங்கள் முஹம்மதிடத்தில் காணப்படவில்லை" என்று கூறுவார்கள். இவர்கள் இப்படிச் செய்வதைக் கண்டித்து இந்த ஆயத்து இறக்கப்பட்டது.

"நான் மிஃராஜுக்குச் சென்ற இரவில் சில மனிதர்களின் பக்கமாகச் சென்றேன். அவர்களுடைய உதடுகள் நெருப்புக் கத்தரி கொண்டு துண்டிக்கப்படுவதைக் கண்டு ஜிப்ரயீலிடம் இவர்கள் யாரென்று கேட்டேன். அதற்கு, அவர் "இவர்கள் தங்கள் உம்மத்திலுள்ள உபதேசம் செய்கிறவர்கள்; இவர்கள் மற்ற மனிதரை நலவைக் கொண்டு ஏவுவார்கள். ஆனால் தங்களை மறந்திடுவார்கள். இவர்கள் (ஜஹன்னமெனும்) நரகத்தில் கூலி கொடுக்கப்படுவார்கள். அச்சமயம் "நீங்கள் யார்?" என்று இவர்களை விசாரித்தால் இவர்கள் "நாங்கள்தான் எங்களை மறந்து பிற மக்களை நன்மை செய்யும்படி ஏவியவர்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

"உபதேசம் செய்கிறவனை கியாமத்து நாளில் நீ எதை நாடி உபதேசம் செய்தாயென்று அல்லாஹு தஆலா கேட்காமல் விடமாட்டான்" என்றும் மற்றொரு ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

தன்னைக் கவனியாமல் பிறரை மட்டும் ஏவுவதும், தான் மட்டும் கெட்ட காரியத்தைச் செய்வதும் பெரும் தவறு என்பது இந்த ஹதீஸிலிருந்து தெரியவருகிறது. ஆனால், தான் செய்யாத காரியத்தைப் பிறருக்குச் சொல்லக்கூடாது என்று உபதேசம் செய்யாமல் இருந்து விடுவது கூடாது. பிறருக்கு உபதேசம் செய்வதுபோல் தாங்களும் நடக்க வேண்டும் என்பதுதான் இந்த ஹதீஸினுடையவும் ஆயத்தினுடையவும் நோக்கமாகும். ஆகவே, ஒருவர் பிறருக்கு உபதேசஞ் செய்தால், உபதேசம் செய்கிறவர் அதன்படி நடக்கிறாரா இல்லையா? என்பதை மற்றவர்கள் கவனிக்க வேண்டியதுமில்லை, உபதேசம் செய்பவர் அதன்படி நடக்காமல் இருந்தால் அதற்காக அவர் மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய உரிமையுள்ளவரில்லை என்று ஆட்சேபிக்க வேண்டியதுமில்லை. அவர் கூறும் வார்த்தைகள் நல்ல விஷயங்களாக இருந்தால் அதன்படி

நடப்பதுதான் ஒழுங்குமுறை யாகும். இதனைக் குறித்துத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீங்கள் நன்மையான காரியத்தைச் செய்யும்படி பிறரை ஏவுங்கள். அந்தக் காரியத்தை நீங்கள் செய்யாமலிருந்தாலும் சரியே. இன்னும் தீய காரியங்களை விட்டு மனிதர்களை விலக்குங்கள்; அதன்படி நீங்கள் விலகிக் கொள்ளாதவர்களாக இருந்தாலும் சரியே" என்றுங் கூறி இருக்கிறார்கள்.

ஒரு நல்ல காரியத்தை ஒருவர் செய்யாமலிருந்து கொண்டு, அதைச் செய்யும்படி அவர் மற்றவருக்கு ஏவுவாராயின் அவர் தனது மீது ஏற்பட்ட ஒரு கடமையைச் செய்யாத குற்றத்திற்கு மட்டும் ஆளாவார். ஆனால், ஒரு நல்ல காரியத்தைத் தெரிந்து அதன்படி தானும் செய்யாமலும் பிறரை ஏவாமலும் இருந்து விடுவாராயின் அவர் இரண்டு கடமையைச் செய்யாதவராகி விடுகிறார். அதாவது நல்ல காரியத்தைச் செய்யாதது ஒரு குற்றம், அதனைப் பிறருக்குச் சொல்லாதது மற்றொரு குற்றம். ஆக இரட்டைக் குற்றவாளியாகின்றார். எனவே, நன்மையான காரியத்தைச் செய்யாவிடினும் அதனைப் பிறருக்கு ஏவுவது நல்லதேயாகும் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. ஆனாலும், தான் செய்யாத ஒரு காரியத்தைப் பிறருக்கு ஏவி, அது மற்றவருக்குப் பிரயோஜனம் செய்வது அபூர்வம். ஆதலின், ஒருவர் ஒரு காரியத்தைச் செய்யும்படி பிறரை ஏவுவாராயின், ஏவுகிற அந்த மனிதரே அதனைச் செய்வதில் மிகத் தீவிரமாக இருக்க வேண்டும். இதுபோல ஒரு தீயகாரியத்தைச் செய்ய வேண்டாமென்று பிறரை விலக்குவாராயின் அந்தத் தீய காரியத்தைச் செய்யாமல் விலகிக் கொள்வதில் அவர் முதன்மையாக இருக்க வேண்டும்.

وَاسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ ۚ وَإِنَّهَا لَكَبِيرَةٌ
إِلَّا عَلَى الْخٰشِعِينَ ۝

45. எனவே, நீங்கள் பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் (என்னிடம்) உதவி தேடுங்கள்; நிச்சயமாக

உள்ளச்சமுடையவர்களுக்கன்றி (மற்றையோருக்கு) இது பளுவாகவே இருக்கும்.

ரிவாயத்து:- "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஒரு வருத்தமான காரியம் நேர்ந்தால் உடனே தொழுகையின் பால் விரைந்து கொள்வார்கள்" என்று ரிவாயத்து வந்திருக்கிறது.

ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் (பிரயாணத்தில்) இருக்கும் போது அவர்களுடைய புதல்விகளில் ஒருவர் இறந்த செய்தி அறிவிக்கப்பட்டது. உடனே அவர்கள் (நிச்சயமாக நாம் அல்லாஹு தஆலாவுக்கு உரியவர்கள். இன்னும் நிச்சயமாக நாம் அவனளவிலேயே மீளுகிறவர்களாயிருக்கிறோம்) என்று கூறி, அல்லாஹு தஆலா மானத்தை மறைத்தான், செலவைக் காத்தான், கூலியைத் தந்தான் என்று சொல்லி, அந்தப் பாதையை விட்டுக் கொஞ்சம் விலகிச் சென்று, தொழுது விட்டு வந்தார்கள். அவர்கள் வரும்போது وَاسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ என்ற இந்த ஆயத்தை ஓதிக் கொண்டு வந்தார்கள்.

ஸபுர் பொறுமை என்பது மனதுக்கு வெறுப்பாயிருக்கும் காரியத்தைச் செய்யும்படி அதனை அடக்குவதாகும். அதாவது, வணக்கத்தில் சிரமம் எடுத்துக் கொள்ளுதல், கோபத்தை அடக்குதல், தீங்கு செய்தவனுக்கு உபகாரஞ் செய்தல் முதலியனவாகும். பொறுமை மூன்று பங்காகும். 1. கஷ்டம், நஷ்டம், விபத்து முதலியவற்றிற்கு பொறுமையுடன் இருத்தல், 2. இறைவனுடைய வழிபாட்டில் பொறுமையுடன் இருத்தல். இது முந்தினதைவிடச் சிறந்தது. 3. பாவத்தைச் செய்யாமல் பொறுமையுடன் இருத்தல், இது முந்திய இரண்டையும் விடக் கஷ்டமானது. ஆகையால். இதன் நற்கூலி அவற்றைவிட மிக அதிகமானது. ஆனால், இந்த இடத்தில் அல்லாஹு தஆலாவின் மீது தவக்கல் செய்து கொண்டு வெற்றியையும் சந்தோஷத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருத்தல், அல்லது நோன்பு நோற்றுத் தனது அகத்திலுள்ள இச்சைகளைக் குறைத்து மனதைச் சுத்தப்படுத்தல் என்று கருத்து வைக்கலாம்.

நோவினைகள் ஏற்படும் போது பொறுமையுடன் இருந்து, அல்லாஹு தஆலாவுக்கு வழிபடுதல் தனது மனதுடன் போரிட்டு அதனுடைய இச்சைகளை அடக்கி ஒடுக்குவதைச் சேர்ந்தது பொறுமையாகும். இது நபிமார்கள் ஸாலிஹீன்களின் குணங்களில் ஒன்று.

ஹளரத் யஹ்யப்னுல் யமான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "உனக்கு அல்லாஹு தஆலா கொடுத்திருப்பதைத் தவிர்த்து வேறு எதிலும் மேலெண்ணம் வைக்காமல், உனது இம்மையுடையவும் மறுமையுடையவும் காரியங்களில் அவன் உனக்கு ஏற்படுத்தி இருப்பதைக் கொண்டு பொருந்தி இருப்பதுதான் பொறுமை என்றும், என்ஜான் உடம்பிற்குச் சிரசே பிரதானம் என்பதுபோல் நற்செயல்களுக்கு இது பிரதானமாக இருக்கிறது என்றும் கூறி இருக்கிறார்கள்.

உள்ளச்சமுள்ளவர்கள் அல்லாஹு தஆலாவிடம் முனாஜாத்து செய்வதிலும் அவனிடம் கெஞ்சிக் கேட்பதிலுமே மூழ்கி இருப்பார்கள். ஆதலால் அவர்களுக்குக் கஷ்டம் வருவது தெரியாது. இதனைத்தான் இறைவன் இந்த இடத்தில் "தொழுகையைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் அவனிடம் உதவி தேடுவது உள்ளச்சம் உள்ளவர்களைத் தவிர மற்றவர்களுக்கு பளுவாக இருக்கும்" என்று கூறி இருக்கிறான்.

நன்மைகளைத் தாராளமாகச் செய்யவேண்டுமாயின், அவ்விதம் செய்ய முடியாமல் தடுக்கும் மனோ இச்சைகளை அடக்கும் பொறுமையைக் கொண்டு உதவி தேட வேண்டும். அப்பொறுமை கைகூடுவதற்கு மனதை இறைவன் பக்கம் பிடித்திழுக்கக் கூடிய தொழுகையை நிலை நிறுத்திக் கொண்டு உதவி தேடவேண்டும் என்பதுதான் இந்த ஆயத்தின் சாராம்சமாகும். தொழுகையை நிலை நிறுத்துதல் உள்ளச்சமுள்ளவர்களுக்கேயன்றி வேறு யாருக்கும் இலகுவாகாது. உள்ளச்சமுள்ளார் மூன்று வகையினராக இருக்கின்றனர். முதலாவது:- இறைவனைப் பயந்து அவன் வழியில் நடந்து அவனை யடைந்தவர். இவர்கள் தொழுகையில் இறைவனைத் தரிசிப்பவர்கள். ஆகையால் அத்தொழுகை அவர்களுக்குக் கண் குளிர்வாகவும், மிக இலகுவாகவுமே இருக்கிறது. இரண்டாவது:-

தொழுகையில் இறைவனைத் தரிசிக்காது போனாலும் அவனைத் தரிசிப்போமென்று நம்பி இருப்பவர். ஆகையால் அவருக்கும் தொழுகை பளுவாக இருக்கமாட்டாது. மூன்றாவது கியாமத்தில் அவனைத் தரிசிப்போம் என்ற நம்பிக்கையில்லாது போனாலும், இறைவனிடத்திற்கு மீளுவோம், நாம் செய்த அமலுக்கு நற்கூலி தருவான் என்று நம்பி இருப்பவர். ஆகையால் இவருக்கும் தொழுகை பளுவாக இருக்க மாட்டாது. **(தஃப்ஸீர் மஹாயிம்)**

الَّذِينَ يَظُنُّونَ أَنَّهُم مُّلَاقُوا رَبِّهِمْ وَأَنَّهُمْ إِلَيْهِ رَاجِعُونَ ۝

46. (உள்ளச்சமுடையோர்களாகிய) அவர்கள் நிச்சயமாகத் தங்களுடைய 'ரப்' பைச் சந்திப்போம் என்றும், நிச்சயமாக அவனிடமே செல்வோம் என்றும் நம்புவார்கள்.

லன்னு என்ற பதத்திற்கு இரண்டு விதமாக அர்த்தமுண்டு. உறுதியாக நம்புவது ஒரு அர்த்தம். உறுதியில்லாமல் சந்தேகங் கொள்வது மற்றொரு அர்த்தம். இந்த இடத்தில் அல்லாஹு தஆலாவின் மீது உள்ளச்சங் கொண்டவர்கள் நாளை கியாமத்து நாளில் அவனைச் சந்திப்போம் என்று உறுதியாக நம்புகிறார்கள் என்பதுதான் பொருத்தமான அர்த்தமாகும்.

مُّلَاقُوا رَبِّهِمْ என்பதற்கு **முஆயினூஹு** என்று திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் எழுதி இருக்கிறார்கள். சந்திப்பார்கள் அதாவது நேருக்கு நேராகக் காண்பார்கள் என்பது கருத்து. இது கியாமத்து நாளில் கேள்வி கணக்குக் கேட்பதற்காக நிறுத்தப்படும் வேளையைச் சுட்டிக் காட்டுகிறது.

يَظُنُّونَ أَنَّهُم مُّلَاقُوا رَبِّهِمْ என்பதற்கு அவர்கள் மரணம் அடைவார்கள் என்று அறிந்திருக்கிறார்கள் என்றும் சிலர் கருத்துக் கூறி இருக்கிறார்கள்.

يٰبَنِىٓ اِسۡرَآءِيۡلَ اذۡكُرُوۡا نِعۡمَتِىَ الَّتِىۡٓ اَنۡعَمۡتُ عَلَيۡكُمۡ وَاَنِّىۡ فَضَّلۡتُكُمۡ عَلَى الۡعٰلَمِيۡنَ ﴿٤٧﴾

47. இஸ்ராயீலின் சந்ததிகளே! நான் உங்க(ள் முன்னோர்க)ளுக்கு அளித்த என்னுடைய அருட்கொடையையும், இன்னும் நான் உங்களை உலகத்தா(ரனைவ)ரைப் பார்க்கினும் மேன்மையாக்கி வைத்திருந்தேன் என்பதையும் எண்ணிப் பாருங்கள்.

அல்லாஹு தஆலா பனீ இஸ்ராயீல்களை நோக்கி "உங்களுக்கு நான் செய்துள்ள அருட்கொடைகளை எண்ணிப் பாருங்கள்" என்று இந்த ஆயத்திலும் கூறி இருக்கிறான். இதற்கு முந்திய 40வது ஆயத்திலும் கூறி இருக்கிறான். அவர்களிடம் இவ்வண்ணம் மடக்கி மடக்கி இறைவன் ஞாபகம் மூட்டுவது அவர்களுக்கு அவன் செய்துள்ள அருட்கொடைகளை அடியுடன் மறந்து விட்டார்கள், அவற்றை அவர்கள் மனதிலும்கூட நினைப்பதே இல்லை என்பதை அறிவிக்கிறது.

பனீ இஸ்ராயீல்கள் எகிப்து தேசத்தில் இருந்து வெளியேறிய காலத்தில் அவர்களது உணவுக்காக மன்னு, ஸல்வா என்ற உணவை இறக்கி வைத்தான். மேகத்தை நிழலிடும்படி செய்தான், கல்லிலிருந்து தண்ணீரை ஒலித்தோடும் படி செய்தான். இவ்விதமாக இன்னும் பல அருட்கொடைகளைச் செய்தான். இவற்றைப் பற்றிய விபரத்தை அல்லாஹு தஆலா ஆங்காங்கு விபரமாகக் கூறியுள்ளான். அதன் விபரம் இதனைத் தொடர்ந்து சொல்லப்படும்.

தவிரவும் அல்லாஹு தஆலா மேற்கண்டவாறு செய்த அருட்கொடைக்கு எல்லாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த யூதர்களுக்கல்ல. இவர்களுடைய முன்னோர்களுக்கே இவ்வாறு செய்தான். எனினும் இவர்களது முன்னோர்களுக்கு இவ்வண்ணம் உபகாரம் செய்து காப்பாற்றியதனாலேயே இந்த யூதர்கள் மற்றவர்களால் நன்கு

மதிக்கப்பட்டு கௌரவமாக வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே அவர்கள் தங்கள் மூதாதையருக்குச் செய்த இந்த அருட்கொடைகளுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றனர். இதனால்தான் அல்லாஹு தஆலா இவர்களை நோக்கி "உங்களுக்குச் செய்த தனது அருட்கொடைகளை எண்ணிப் பாருங்கள்" என்று கூறி இருக்கிறான். "உங்கள் மூதாதையருக்கு நான் செய்த அருட்கொடைகளை எண்ணிப் பாருங்கள்" என்று வெளிப்படையாகக் கூறவில்லை. ஏனெனில் தங்கள் முன்னோர்கள் கௌரவமாக வாழ்ந்திருப்பது தங்களுக்கும் கௌரவத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. ஒருவருடைய மூதாதையர் மிகவும் கேவலமான நிலைமையில் இருந்திருப்பாராயின் அவர் எவ்வளவு நல்ல காரியத்தைச் செய்தாலும் அவருக்குக் கிடைக்க வேண்டிய முழு கௌரவமும் கிடைத்து விடுவதில்லை. இது உலகில் சகஜமாக இருந்து வருகிறது. ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த யூதர்கள் தங்கள் முன்னோர்களுக்கு இறைவன் செய்துள்ள அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

اَنِّىۡ فَضَّلۡتُكُمۡ عَلَى الۡعٰلَمِيۡنَ நிச்சயமாக நான் உங்களை உலகத்தாரைப் பார்க்கினும் மேன்மையாக்கி வைத்திருக்கிறேன் என்று அல்லாஹு தஆலா அவர்களிடம் திரும்பவும் கூறி இருக்கிறான். உலகத்தாரைப் பார்க்கினும் மேன்மையாக்கி வைத்தல் என்றால் எல்லாக் காலத்திலும் அவர்களுக்குத்தான் அதிகமான சங்கையும் கண்ணியமும் இருந்தது என்பதும் மற்றவர்களில் எவருக்கும் அம்மாதிரியான சங்கையும் கண்ணியமும் ஒரு காலத்திலும் இருந்ததில்லை என்பதும் கருத்தல்ல. அவர்களுடைய காலத்தில் இருந்த மற்றவர்களைப் பார்க்கினும் அவர்களுக்கு அதிகமான மேன்மையை அல்லாஹு தஆலா அளித்திருந்தான் என்பது கருத்து.

அல்லாஹு தஆலா பனி இஸ்ராயீல்களில் நபிமார்களையும், நீதமான அரசர்களையும், கற்றபடி நடக்கும் உலமாக்களையும்

மிகுதியாக்கினான். இவ்விதமான பாக்கியங்களை அல்லாஹு தஆலா பனீ இஸ்ராயீல்களிடம் பூரணமாகக் கொடுத்தது மட்டுமின்றி இவைகளெல்லாம் ஒன்றாக ஏக காலத்தில் அவர்களிடம் அமைந்திருக்கும் படியும் செய்தான். பனீ இஸ்ராயீல்கள் காலத்தில் மற்றவர்களுக்கு இவ்வண்ணம் எல்லாப் பாக்கியங்களையும் ஏக காலத்தில் அமைத்து வைக்கவில்லை. நன்றி செலுத்துவதற்கு மேற்கூறிய பொறுமையைக் கொண்டு உதவி தேடுதல் கஷ்டமாக இருந்தால் நன்றி செலுத்துவதைக் கொண்டு உதவி தேட வேண்டும் என்று இந்த ஆயத்தில் சமிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது. இதன் கீழ்வரும் ஆயத்து பொறுமையுடனிருப்பது உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் நன்றி செலுத்துவதைக் கொண்டு என்றும் (கவ்ஃப்) அச்சப்படுதல் கொண்டு உதவி தேடவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

وَاتَّقُوا يَوْمًا لَّا تَجْزِي نَفْسٌ عَن نَّفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا شَفَاعَةٌ وَلَا يُؤْخَذُ مِنْهَا عَدْلٌ وَلَا هُمْ يُنصَرُونَ ﴿٤٨﴾

48. இன்னும், எந்த ஆத்மாவும் மற்றோர் ஆத்மாவிற்கு எந்தப் பலனையும் அளிக்க முடியாத, அதற்காக எந்த ஷஃபாஅத்தும் ஏற்றுக் கொள்ளப்படாத, அதற்காக எந்த நஷ்ட ஈடும் பெற்றுக் கொள்ளப்படாத, இன்னும் அவர்கள் உதவியும் செய்யப்பட மாட்டார்களே அத்தகைய (இறுதித் தீர்ப்பு) நாளை பயந்து (நடந்து) கொள்ளுங்கள்.

யூதர்கள் அல்லாஹு தஆலாவுடைய கட்டளைக்கு மாறாக நடந்து கொண்டு, அவனது கோபத்திற்கு ஆளாகிக் கொண்டே வந்தனர். ஆனாலும் அவர்களிடம் ஜாதித் திமிர் அதாவது பிறவிலேயே தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற அகம்பாவமான எண்ணமிருந்து கொண்டிருந்தது. நாங்கள் இப்ராஹீம் கலீலுர் ரஹ்மானுடைய சந்ததிகள். இன்னும் இஸ்ஹாக்கினுடைய சந்ததியினர். ஆதலின், அவர்களிருவரும் எங்களுக்கு ஷஃபாஅத்து செய்வார்கள். அவர்களது

ஷஃபாஅத்தின் மூலமாக நாங்கள் ஈடேற்றம் பெற்று விடுவோம் என்று கூறிக் கொண்டிருந்தனர். இதனை அல்லாஹு தஆலா மறுத்து இந்த ஆயத்தில் கூறியுள்ளான். இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்கள் நபிமார்களாக இருந்தார்கள். மூமின்களாக இருந்தார்கள். ஆனால், நீங்களோ காஃபிர்களாக இருக்கிறீர்கள். ஆதலின், மூமின்கள் நிராகரிப்பாளர்களுக்கு கியாமத்து நாளில் எவ்விதமான உதவியும் பரிகாரமும் செய்ய முடியாது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

மேலும், இந்த ஆயத்தைக் கொண்டு முஃதசிலாக்கள் என்ற கூட்டத்தார் "பாவிகளுக்கு ஷஃபாஅத்துக் கிடையாது" என்று ஆதாரம் சொல்வது ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆயத்து காஃபிர்களைப் பற்றி இறங்கிய ஆயத்தாகும். மூமின் முஸ்லிம்களைப் பற்றி இந்த ஆயத்து இறக்கி வைக்கப்பட வில்லை. மூமின் முஸ்லிம்களுக்கு ஷஃபாஅத்துகள் இருக்கின்றன. அவர்களில் ஒருவருக்கொருவர் கியாமத்து நாளில் உதவி செய்து கொள்வார்கள்.

அதாவது, **(ஷிர்க்கு இல்லாமல்) பரிசுத்தமான இதயத்தைக் கொண்டு அல்லாஹ்விடம் வந்தவரைத் தவிர மற்றவர்களுக்கு பொருளும் மக்களும் பலனளிக்காத நாளில் 26:88,89** என்பதாக அல்லாஹு தஆலா கூறி இருக்கிறான்.

ஹதீஸ்:- "என்னுடைய உம்மத்தில் பெரும்பாவம் செய்தவர் களுக்கு எனது ஷஃபாஅத்து இருக்கிறது" என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது ஷஃபா அத்தை இல்லையென்று எவன் மறுக்கின்றானோ அவன் அதனைப் பெற்றுக் கொள்ள மாட்டான். ஆகவே, இந்த ஆயத்தில் அல்லாஹு தஆலா கூறி இருப்பது நிராகரிப்பாளர்களைப் பற்றி மட்டுமேயாகும்.

தவிர, உலகில் ஒருவருக்குச் சம்பவிக்கும் கஷ்டத்தை விட்டு அவர் மீள்வதற்கு நான்கு விதமான முறைகள்தான் இருக்கின்றன. 1.

ஒருவருக்காக மற்றொருவர் பொறுப்பேற்றுக் கொள்ளுதல், 2. ஒருவருக்காக நஷ்டஈடு கொடுத்துப் பரிகாரம் செய்து கொள்ளுதல், 3. ஒருவருக்காக இன்னொருவர் சிபாரிஷ் செய்தல், 4. உதவி செய்தவர்கள் உபகாரம் செய்தல் ஆகிய இந்த நான்கு விதங்களையும் இறைவன் இந்த ஆயத்தில் கூறி உலகில் நீங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தி இருக்கிற நான்கு வகை உபாயங்களில் எதன் மூலமாகவும் நீங்கள் கியாமத்து நாளில் உங்கள் குற்றத்தை விட்டுத் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை அறிவித்திருக்கிறான்.

وَإِذْ نَجَّيْنَٰكُم مِّنْ ءَالِ فِرْعَوْنَ يَسُومُونَكُمْ سُوٓءَ ٱلْعَذَابِ
يُذَبِّحُونَ أَبْنَآءَكُمْ وَيَسْتَحْيُونَ نِسَآءَكُمْ ۚ وَفِى ذَٰلِكُم
بَلَآءٌ مِّن رَّبِّكُمْ عَظِيمٌ ﴿٤٩﴾

49. மேலும் உங்கள் ஆண், மக்களைக் கொன்றுவிட்டு உங்கள் பெண்(மக்)களை ஜீவித்திருக்கச் செய்து உங்களுக்குத் தீய நோவினை செய்து கொண்டிருந்த 'ஃபிர்அவ்ன்' உடைய கூட்டத்தாரை விட்டு உங்களை நாம் காப்பாற்றிய நாளை (எண்ணிப் பாருங்கள்) அதில் உங்கள் 'ரப்'பிடமிருந்து பெருஞ் சோதனை ஏற்பட்டிருந்தது.

இதற்கு முந்தின ஆயத்துகளில் அல்லாஹு தஆலா பனீ இஸ்ராயில்களுக்குச் செய்த அருட்கொடைகளைப் பற்றி விபரம் இல்லாமல் பொதுவாகக் கூறி இருக்கிறான். இதிலிருந்து அந்த அருட்கொடைகளில் சிலவற்றை ஒவ்வொன்றாக விபரித்துக் கூறி இருக்கிறான்.

கஷ்டமான எவ்வளவு வணக்கமும் இந்த அருட்கொடைக்கு நன்றியாக முடியாது. மேலும், உங்கள் முன்னோர்கள் அவர்களின் பகைவர்களால் இவ்வளவு கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்திருக்க இறைவன் இந்த மார்க்கத்தில் வணக்கங்களை மிக இலகுவாக்கித் தந்திருந்தும் இம்மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு இதிலுள்ள

வணக்கங்களின் கஷ்டங்களை ஏன் சுமந்து கொள்கிறீர்களில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும்.

ஆலஃபிர்அவ்ன என்பதற்கு **ஃபிர்அவ்ன்** குடும்பத்தார் என்று பொருள் கொள்வதுபோல **ஃபிர்அவ்னைப்** பின்பற்றியவர்களுக்கும், அவனது மதத்தார்களுக்கும் சொல்லப்படுகிறது.

ஃபிர்அவ்ன் என்பது குறிப்பிட்ட ஒருவரின் சொந்தப் பெயரல்ல. ஈரான் தேசத்திலுள்ள பாரஸீக அரசர்களுக்கு **கிஸ்ரா** என்றும், ரூம் தேசத்து அரசர்களுக்கு **கைஸர்** என்றும், துருக்கி அரசர்களுக்கு **காக்கான்** என்றும், அபிஸினியா அரசர்களுக்கு **நஜ்ஜாஷீ** என்றும், யமன் தேசத்து அரசர்களுக்கு **துப்பஉ** என்றும் பட்டப்பெயர் இருப்பதுபோல அமாலிக்கா என்ற கூட்டத்தாரின் அரசர்களுக்கு **ஃபிர்அவ்ன்** எனப் பட்டப் பெயர் இருந்து வந்தது.

அமலிக்காக்கா கூட்டத்தார்கள் ஷாம் தேசத்தில் வசித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் ஹளரத் **நூஹ்** அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புதல்வரான **ஸாம்** என்பவரின் புதல்வர் **இரம்**, இவரது புதல்வர் **லாவித்**. இவரது புதல்வர் **அம்லீக்**. இந்த அம்லீக்குடைய சந்ததியினர் அனைவருக்கும் **அமாலிக்கா** என்று பெயர். இவர்களுக்கு **ஜபாபிரத்து** என்ற பட்டப் பெயர் உண்டு. இவர்களில் எகிப்து தேசத்திற்கு வந்து ஆட்சி செய்து கொண்டிருந்த அரசர்களுக்கு ஃபிர்அவ்ன் என்று பெயர். ஆகவே, **ஃபிர்அவ்ன்** என்றால் அமாலிக்காவைச் சேர்ந்த எல்லோருக்கும் பெயரல்ல. எகிப்து தேசத்திலிருந்தவர்களுக்கு மட்டும்தான் இந்தப் பெயர். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் எகிப்து தேசத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த ஃபிர்அவ்னுடைய இயற் பெயர் **வலீது** என்பது. இவன் **முஸ்அபு** என்பவரின் மகன். முஸ்அபு என்பவரின் தந்தையின் பெயர் **ரய்யான்** என்பது. இந்த ரய்யான்தான் ஹளரத் யூசுஃப்பு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் எகிப்துக்கு ஃபிர்அவ்னாக இருந்து கொண்டிருந்தார்.

ஹளரத் யூசுஃப்பு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் இருந்த ஃபிர்அவ்னாகிய ரய்யானுக்கும், ஹளரத் மூஸா

அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்திலிருந்த ஃபிர்அவ்னாகிய வலீதுக்குமிடையில் 400 வருடங்களுக்கு அதிகமான காலவித்தியாசம் உண்டு. இந்த வலீது என்பவனுக்கு வயது 400க்கு அதிகமானது. இவன் கிப்தீ வகுப்பைச் சேர்ந்தவன். எகிப்து தேசத்தில் உள்ளவர்களுக்கு கிப்திகள் என்றும் பெயர்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்திலிருந்த ஃபிர்அவ்னைப் பற்றி வேறு விதமாகவும் சொல்லப்படுகிறது அதாவது.

இவன் இஸ்பஹானிலுள்ள அத்தர் வியாபாரி. இவனுக்குக் கடன் அதிகமாகி விட்டது. தரித்திரனானான். ஆகவே, அவன் இஸ்பஹானை விட்டுக் கடனுக்குத் தப்பி ஓடி ஷாம் தேசத்திற்கு வந்தான். அங்கு அவனுக்குச் சரியான வசதி கிடைக்க வில்லை. எனவே, அவன் ஷாம் தேசத்திலிருந்து எகிப்து தேசத்திற்கு வந்தான்.

எகிப்து நகரில் வத்தக்காய் ஒன்றுக்கு ஒரு திர்ஹம் கிரயமாகவும், நாட்டுப்புறத்தில் ஒரு சுமை வத்தக்காய்களுக்கு ஒரு திர்ஹம் கிரயமாகவும் இருந்தது. ஆதலின், வத்தக்காய் வியாபாரம் செய்து கடனை அடைக்கலாம் தனது மனதிற்குள் சொல்லிக் கொண்டு கிராமப் புரத்தில் ஒரு சுமை வத்தக்காயை ஒரு திர்ஹம் கிரயங் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்டு மிஸ்ரு நகருக்குள் கொண்டு வந்தான். அனால், வழியில் கண்ட வரி வசூலிப்பவர்கள் எல்லோரும் வரிப்பணத் திற்காக ஒவ்வொரு காயை எடுத்துக் கொண்டார்கள். கடைசியாக கடைத்தெருவுக்கு வந்தபோது ஒரு வத்தக்காய் மட்டும்தான் அவனுக்கு மிச்சமாயிற்று. ஆகவே, அதனை ஒரு திர்ஹமுக்கு விற்று விட்டு, இது நமக்கு நல்ல தொழிலன்று என்பதாக அந்த வியாபாரத்தை விட்டு விட்டான்.

பிறகு, அந்த மிஸ்ரு நகரத்து ஆட்சி ஒழுங்கில்லாமல் ஜனங்கள் தங்கள் தங்கள் இஷ்டம்போல் நடந்து வந்தனர். அது சமயம் அங்கு (வபா என்னும்) வாந்திபேதி மிகவும் அதிகமாக இருந்து கொண்டிருந்தது. அந்த ஊரிலுள்ள அடக்கஸ்தலத்துக்குச் சென்றான். அங்கு ஒரு பிரேதத்தை ஜனங்கள் அடக்கிக் கொண்டிருந்தனர். அவன்

அந்த பிரேதத்திற்கு உரிமையாளர்களிடம் சென்று "நான் இந்த அடக்கஸ்தலத்துக்கு மேலதிகாரி. எனக்கு 5 திர்ஹம் பணம் கொடுக்காவிடில் இந்த அடக்கஸ்தலத்தில் பிரேதத்தை அடக்க விடமாட்டேன்" என்று கூறினான். அவனது சொற்படி அவனுக்கு 5 திர்ஹம் வெள்ளிக்காசு கொடுத்து விட்டு அந்த பிரேதத்தை அங்கு அடக்கிவிட்டுச் சென்றார்கள். இவ்விதமாகச் சுமார் 3 மாதகாலம் கழிந்தது. பிரேதத்துக்கு ஒன்றுக்கு 5 வெள்ளிக்காசுவீதம் வசூல் செய்ததில் அவன் ஏராளமான பணத்தைச் சேர்த்து வைத்திருந்தான். இவ்விதமாக வசூல் செய்து கொண்டிருக்கும் போது ஒருநாள் அவன் ஒரு பிரேதத்திற்கு உரிமையாளரிடம் சென்று வழக்கப்படி பணம் கேட்டான். அவர்கள் அப்படிப் பணம் கொடுக்க முடியாதென்று மறுத்தது மட்டுமில்லாமல் அவனை நோக்கி "உன்னை யார் இந்த வேலைக்கு நியமித்தது?" என்று அவனைக் கேட்டு, இவ்விஷயத்தை அந்த ஊர் அரசனான ஃபிர்அவ்னிடமும் கொண்டு போனான். அரசன் அவனை அழைத்து "நீ யார்? உன்னை இந்த வேலையில் அமர்த்தியது யார்?" என்று வினவினான். அதற்கு அவன் "என்னை ஒருவரும் நியமிக்கவில்லை. நானாகவேதான் இதனைச் செய்தேன். எவரேனும் ஒருவர் இதனைப்பற்றி புகார் செய்து என்னை உம்மிடம் அழைத்து வரட்டும் என்றும், அப்படி அழைத்து வந்தால் உமது பிரஜைகளின் நிலைமையை உமக்கு நான் அறிவிக்கச் சமயம் வாய்க்கும் என்றும் எண்ணி இப்படிச் செய்தேன். நான் இப்படி வசூல் செய்ததின் மூலமாக நான் இவ்வளவு தொகை சேர்த்து வைத்திருக்கிறேன்" என்று கூறி அவற்றை அரசனான ஃபிர்அவ்னிடம் கொடுத்து, உமது காரியங்களில் என்னை நிர்வாகியாக நியமித்தால் நான் மிகவும் நம்பிக்கையுள்ள வனாகவும் திறமையுள்ளவனாகவும் இருப்பதை நீ காண்பாய் என்று கூறினான்.

அரசன் அவன் மீது சந்தோஷமடைந்து அவனைத் தனது காரியங்களைக் கவனிக்க மேலதிகாரியாக நியமித்தான். அவன் அந்த மேலதிகாரி பதவியை ஏற்றதும் அவ்விடத்து படைகளைத் திருத்தியமைத்து பிரஜைகளின் நிலைமையையும் ஒழுங்கு செய்து சீர்திருத்தினான். இப்படி வெகுகாலம் வரை வேலை பார்த்து நீதியாகவும்

சீர்திருத்தமாகவும் அவன் காரியங்களைச் செய்து வந்தான். இப்படி இருக்கும் போது அவனுடைய எஜமானனும் ஊருக்கு அரசனான ஃபிர்அவ்ன் இறந்துவிட்டான். ஜனங்களெல்லோரும் அந்த அரசனுக்குப் பிறகு இவனைத் தங்கள் ஃபிர்அவ்ன் என்பதாக ஏற்படுத்திக் கொண்டார்கள். அப்படியே இவன் இஸ்பஹானுக்குச் செல்லாமல் மிஸ்ரு நகரில் அரசனாக இருந்து விட்டான்.

இவன்தான் மூஸா நபியவர்கள் காலத்திலுள்ள ஃபிர்அவ்ன் என்றுஞ் சொல்லப்படுகிறது. சிலர் யூசுஃபு நபியுடைய காலத்து ஃபிர்அவ்னே மூஸா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காலத்து ஃபிர்அவ்னாகுமென்று சொன்னது சரியில்லையென்றும், யூசுபு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காலத்திற்கு நானூறு வருடத்திற்கு மேற்பட்டே மூஸா அலைஹிஸ்ஸலாம் மிஸ்ருக்கு வந்தார்கள் என்றும் இமாம் ராஜீ சொல்லியிருக் கிறார்கள். மூஸா நபியுடைய ஃபிர்அவ்ன் எகிப்திலுள்ளவன் என்பதும் முன்னிருந்த ஃபிர்அவ்னுடைய சந்ததியிலுள்ளவன் என்பதுமே பலமான சொல்லாகும்.

இவ்வாறு ஃபிர்அவ்ன் என்ற பட்டத்துடன் எகிப்து தேசத்தை அரசாட்சி புரிந்து கொண்டிருந்தபோதுதான் பனீ இஸ்ராயீல்களை வேலை யாட்களாக்கி சிலரை மலையில் தூண் அடிக்கவும், சிலைக் கல் உருட்டவும், சிலரைச் செங்கல் அறுக்கவும், மாளிகை கட்டவும் இப்படிப் பல விதமாக வேலைகளை வாங்கிக் கொண்டிருந்தது மல்லாமல் வேலைக்கு வரத்தகுதியில்லாதவர்கள் தினந்தோறும் பொழுது அடைவதற்குள் அபராதம் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறினால் உடனே அவரைப் பிடித்து ஒரு மாத காலம் வரை கையை கழுத்தோடு கட்டிவிடுவான். பெண்கள் கித்தான் துணிகள் நெய்து கொடுக்கும்படியும், அதற்கான நூல் நூற்கும்படியும் கட்டளையிடப்பட்டிருந்தார்கள்.

அப்படி இருக்கும் போது ஒருநாள் அவன் தூங்கும் போது பைத்துல் முகத்திஸிலிருந்து ஒரு நெருப்பு வருவது போலவும், தன்னுடைய மிஸ்ரு நகரைச் சூழ்ந்து கொண்டு அதிலிருக்கும் தனது

கூட்டத்தாராகிய கிப்தியர்களைக் கரிப்பது போலவும் கனவு கண்டு, அங்கிருந்த தனது ஜோஷியர்களை அழைத்து இதற்குரிய விளக்கம் என்னவெனக் கேட்டான். அதற்கு அவர்கள் "பனீ இஸ்ராயீல் கூட்டத்தில் ஒரு ஆண் குழந்தை பிறக்கும், அந்தக் குழந்தையின் காரணமாக உனக்கும், உன் அரசாங்கத்திற்கும் அழிவு வரும்" என்று கூறினார்கள். அப்பொழுது அவன் மருத்துவச்சிகளை அழைத்து "பனீ இஸ்ராயீல்களில் பிறக்கிற ஆண் குழந்தைகளை எல்லாம் கொன்று விடுங்கள். பெண் குழந்தைகளை எல்லாம் விட்டுவையுங்கள்" என்று உத்தரவிட்டான்.

இந்த உத்திரவின்படி தொண்ணூராயிரம் ஆண் குழந்தைகள் அறுக்கப்பட்டன. இந்தத் தொண்ணூராயிரம் குழந்தைகளும் உயிரோடிருந்தால் அவர்களுக்கு எவ்வளவு ஆற்றல் இருக்குமோ அவ்வளவு ஆற்றலும் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு, பனீ இஸ்ராயீல்களிலுள்ள முதியோர்களுக்கு மரணம் வர ஆரம்பித்தது. எனவே, கிப்தீகள் ஃபிர்அவ்னிடம் சென்று பனீ இஸ்ராயீல்களில் பிறக்கும் ஆண் குழந்தைகள் அறுக்கப் பட்டு விடுகின்றனர். முதியோர்களாக இருந்தவர்கள் மரணமடைந்து கொண்டு வருகிறார்கள். இப்படி இருந்தால் அவர்கள் செய்யும் வேலைகளெல்லாம் நம்முடைய தலையிலல்லவா வரும் என்று முறையிட்டார்கள். அப்படியானால் ஒருவருடம் பிறக்கும் ஆண் குழந்தைகளை அறுக்காமல் விட்டு விடலாம் என்றும் மற்றொரு வருடம் பிறக்கும் ஆண் குழந்தைகளை அறுத்துக் கொன்று விடலாம் என்றும் கட்டளையிட்டான். ஹளரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அறுக்காத வருடத்தில் பிறந்தவர்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் எவ்விதம் பிறந்து எவ்விதம் வளர்ந்தார்கள் என்ற விபரம் சூரத்து தாஹா 39,40 வது ஆயத்தின் விரிவுரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்தில் இறைவன் கூறி இருக்கிற அளவிற்கு இது போதுமானது. இதனைக் குறித்துத்தான் இறைவன் **"உங்களது ஆண் மக்களை அவர்கள் கொன்று விட்டு உங்களது பெண் (மக்)களை ஜீவித்திருக்கவுமாகச் செய்தார்கள்"** என்று கூறி இருக்கிறான்.

وَفِي ذَٰلِكُم **வஃபீதாலிகும்** என்றதற்கு இவ்விதமாக ஆண் குழந்தைகளைக் கொன்று விட்டு, பெண் குழந்தைகளைக் கொலை செய்யாமல் விட்டு வைப்பதிலும் என்பதாக அர்த்தம் செய்துள்ளனர். இதன் படி இது அந்த பனீ இஸ்ராயீல்களுக்கு மிகப் பெரிய சோதனை என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், பெண்மக்கள் இருப்பார் களாயின் அது கஷ்ட ஜீவனம் செய்து கொண்டிருப்பவர்களான தந்தையருக்கு பெரும் கஷ்டத்தையும் கவலையையும் கொடுக்கக் கூடியதுதான்.

இன்னும் இவ்விதமான கஷ்டத்திற்குள்ளிருந்தவர்களை விடுவித்ததையே மேலே கண்ட **தாலிகும்** என்ற வார்த்தை சுட்டிக் காட்டுகிறது என்றும் பொருள் கொள்ளலாம். இப்படிப் பொருள் கொள்ளும்போது சிலருக்கு ஒரு சிறு சந்தேகம் ஏற்படலாம். அதாவது.

பலாஉன் என்பது கஷ்டம் சோதனை. அப்படி இருக்கக் கஷ்டத்திலிருந்து விடுதலை யடைவது எப்படிச் சோதனையாக இருக்க முடியும் என்று சந்தேகம் உண்டாகிறது. ரஹ்மான் கொடுத்தும் சோதிப்பான். கெடுத்தும் சோதிப்பான். ஆகவே, சோதனை என்பது நல்ல விஷயத்திலும் ஏற்படும், கெட்ட விஷயத்திலும் ஏற்படும். ரஹ்மான் தனது சில அடியார்களுக்கு அருட்கொடைகளைக் கொடுத்து, அவர்கள் தனக்கு நன்றி செலுத்துகிறார்களா? இல்லையா? என்று சோதிப்பான். சில அடியார்களுக்குக் கஷ்டத்தைக் கொடுத்து, அவர்கள் பொறுமையுடன் இருக்கிறார்களா? இல்லையா? என்று சோதிப்பான். இதற்காகத்தான் இறைவன், **நாம் உங்களைத் தீமையைக் கொண்டும் நன்மையைக் கொண்டும் சோதிப்போம்** என்று கூறியுள்ளான். தவிரவும், அல்லாஹு தஆலா தனது அடியார்களை இவ்விதம் சோதிப்பது அவர்களுக்கு இன்னும் அருட்கொடைகளைக் கொடுப்பதற் காகத்தான். அவர்களுக்கு கெடுதி செய்வதற்காகவல்ல. இதனைக் குறித்துத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ''அல்லாஹு தஆலா ஒரு அடியானை நேசித்தால் அவனைச் சோதிக்கிறான். அந்தச் சோதனையில் அந்த அடியான் பொறுமையுடன் இருந்து விட்டால் அவனைத் தெரிந்தெடுத்துக் கொள்கிறான். இன்னும் அவ்வடியான் அந்தச் சோதனையைப் பொருந்திக் கொண்டால் அவனைத் தெளித்து வடித்தெடுத்துக் கொள்கிறான்'' என்று கூறி இருக்கிறார்கள். ஆகவே, உலகில் தரித்திரத்தாலோ, நோயாலோ அல்லது வேறுவிதமாகவோ கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் மீது அல்லாஹு தஆலாவுக்குக் கோபம் என்பதோ செல்வமும் மதிப்பும் செல்வாக்கும் பெற்றிருப்பவர்கள் மீது அல்லாஹு தஆலாவுக்கு சந்தோஷம் என்பதோ இல்லை என்றும், எல்லோரும் வெவ்வேறு விதமான சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

وَإِذْ فَرَقْنَا بِكُمُ الْبَحْرَ فَأَنجَيْنَاكُمْ وَأَغْرَقْنَا آلَ فِرْعَوْنَ وَأَنتُمْ تَنظُرُونَ ۞

50. இன்னும், உங்களுக்காகக் கடலைப் பிளந்து நாம் உங்களை விடுவித்தும் 'ஃபிர்அவ்ன்' உடைய கூட்டத்தாரை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே முழுகடித்த நாளை (எண்ணிப் பாருங்கள்).

இந்த ஆயத்தில் அல்லாஹு தஆலா பனீ இஸ்ராயீல்களின் காரணமாகக் கடலைப் பிளந்ததாகவும், கடலில் மூழ்காமல் பனீ இஸ்ராயீல்களைக் காப்பாற்றியதாகவும், ஃபிர்அவ்னையும் அவனது கூட்டத்தினரையும் கடலில் மூழ்கி இறந்து போகும்படி செய்ததாகவும், சுருக்கமாகக் கூறி இருக்கிறான். இச்சம்பவத்தை சிறிது விபரமாகக் கூறுவோம்.

அல்லாஹு தஆலா ஃபிர்அவ்னை அழித்துவிட வேண்டும் என்று நாடியபோது ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு பனீ இஸ்ராயீல்களை அழைத்துக் கொண்டு போகும்படி வஹி அறிவித்தான். அதன்படி ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனூ இஸ்ராயீல்களை அழைத்துக் கொண்டு இரவில் போனார்கள். அன்றைய தினம் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம்

அவர்களுடன் வந்த பனீ இஸ்ராயீல்கள் மொத்தம் ஆறு லட்சத்து இருபதாயிரம் பேர். அன்றைய இரவில் அல்லாஹு தஆலா கிப்திகளிடம் மரணத்தை ஏவியிருந்தான். ஆதலின், அவர்கள் பிரேதங்களை அடக்குவதிலேயே கவனம் செலுத்தி இருந்தார்கள். ஆதலால், பனீ இஸ்ராயீல்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் மிஸ்ரை விட்டு வெளியேறுவதை அவர்கள் கவனிக்கவில்லை.

ஆனால், ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் பனீ இஸ்ராயீல்களும் மிஸ்ரு நகரை விட்டு வெளியேறியவுடன் பாதையைத் தவறவிட்டு விட்டார்கள். இப்படிப் பாதை தவறிப் போனதற்குக் காரணமென்ன வென்று பனீ இஸ்ராயீல்களிலுள்ள வயது முதிர்ந்தவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் "ஹளரத் யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடையும்போது தங்களது உடன் பிறந்தவர்களிடம் அவர்கள் மிஸ்ரு நகரை விட்டுப் புறப்பட்டால் அவர்களுடைய கப்ரையும் கொண்டுபோக வேண்டுமென்று சொன்னார்கள், நாம் இப்பொழுது மிஸ்ரை விட்டுப் போகிறோம், ஆனால், ஹளரத் யூசுஃபு அலைஹிஸ்ஸலாம் அவர்களது கப்ரைக் கொண்டு போகவில்லை. அதுதான் நமக்கு வழிதப்பிவிட்டதற்குக் காரணம்" என்று கூறினார்கள்.

அப்பொழுது ஹளரத் யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கப்ரைக் குறித்துக் கேட்டதில் அது இருக்குமிடம் ஒருவருக்கும் தெரியவில்லை. ஆனால், ஒரு கிழவி மட்டும் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் "நான் அந்த கப்ரு இருக்குமிடத்தை அறிவித்துக் கொடுத்தால் நான் கேட்டதைக் கொடுப்பீர்களா?" என்று வினவினாள். அதற்கு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் கேட்டு அவளுக்குத் தருகிறதாகச் சொன்னார். "நான் கிழவியாக இருப்பதால் என்னால் நடக்க முடியாது, என்னைச் சுமக்க வேண்டும், மறுமையில் தாங்கள் போகிற மாளிகைகளுக்கெல்லாம் நானும் வரவேண்டும்" என்று கூறினாள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

இக்கிழவியின் இவ்வேண்டுகோளை ஒப்புக் கொண்டார்கள். அப்பொழுது அக்கிழவி "அந்தக் கப்ரு நீல நதிக்குள்ளிருக்கிறது. அதிலுள்ள தண்ணீர் வற்றினால் அது இருக்குமிடத்தைக் காண்பிக்கிறேன். நீல நதியின் தண்ணீர் வற்றிவிட வேண்டுமென்று இறைவனிடம் துஆச் செய்யும்படி ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் கூறினாள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆச் செய்ததுடன், அந்தக் கப்ரை எடுக்கும் வரை பொழுது விடியாமலிருக்க வேண்டுமென்றும் துஆச் செய்தார்கள். நீல நதியின் தண்ணீர் வற்றிற்று, கப்ரு இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து அதனைத் தோண்டிய போது சங்கேமர்மர் கல்லினால் செய்யப்பட்ட பெட்டிக்குள் ஹளரத் யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது பூத உடல் வைக்கப்பட்டிருந்தது வெளியாயிற்று. அப்பெட்டியுடன் ஜனாஸாவை எடுத்துக் கொண்டு வெளியேறவும் பாதையும் தெளிவாகத் தெரிந்தது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனீ இஸ்ராயீல்களுக்கு முன்னும், ஹளரத் ஹாரூன் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பனீ இஸ்ராயீல்களுக்குப் பின்னுமாக நடந்தார்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் பனீ இஸ்ராயீல்கள் மிஸ்ரை விட்டுப் போவதை அந்த இரவிலேயே ஃபிர்அவ்ன் அறிந்துகொண்டு, உடனே அவர்களைப் பிடிப்பதற்காக 70 லட்சம் பேருடன் புறப்படவும் விரும்பினான். ஆனாலும், இரவாக இருப்பதால் சேவல் கூவிய பிறகு புறப்படலாம் என்று தாமதித்திருந்தான். ஆனால், அன்றைய இரவில் சேவல் கூவவுமில்லை. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவரது கூட்டத்தினரான பனீ இஸ்ராயீல்களும் நடந்து கொண்டே இருந்தார்கள். கடைசியாக செங்கடலுக்கு வந்து சேர்ந்தார்கள். எதிரில் கடல் இருக்கிறது. அப்புறம் நடந்து செல்ல முடியாமல் பனீ இஸ்ராயீல் நின்று கொண்டிருந்தார்கள். இதற்குள் ஃபிர்அவ்னும், அவனுடைய கூட்டத்தாரும் அதிகாலையில் புறப்பட்டு வந்து இவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

அப்பொழுது பனீ இஸ்ராயீல்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் "மூஸாவே! நாம் என்ன செய்வோம்?" ஃபிர்அவ்ன் பின்தொடர்ந்து வருகிறான். கடல் நம்மை

முன் செல்ல விடாமல் மறுக்கிறது'' என்று சொன்னார்கள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கையில் வைத்திருக்கிற அஸா என்னும் தடியைக் கடலின் மீது அடிக்கும்படி அல்லாஹு தஆலா கட்டளையிட்டான். அதன்படி ஹளரத் மூஸா அடித்தார்கள். கடல் பிளக்கவில்லை. அப்போது அல்லாஹு தஆலா கடலை நோக்கி, ''மூஸாவுக்கு வழிவிடு'' என்று கூறினான். பிறகு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கடலின் மீது தமது தடியால் அடிக்கவே கடலில் 12 பாதைகள் ஏற்பட்டன. அந்தப் பாதைகள் வழியாக பனீ இஸ்ராயீல்களிலுள்ள 12 கூட்டத்தாரும் நடந்தார்கள். ஒவ்வொரு பாதைக்கு இரண்டு புறத்திலும் கடல் தண்ணீர் மலைபோல் அடைத்திருந்தது. ஆதலால், ஒரு பாதையில் செல்பவர்களை இன்னொரு பாதையில் செல்பவர்கள் பார்க்க முடியவில்லை. ஒவ்வொரு கூட்டத்தாரும் மற்றைய கூட்டத்தார் ஃபிர்அவ்ன் கையில் அகப்பட்டுக் கொண்டார்கள் என்று எண்ணிப் பயந்தார்கள். பிறகு, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பொருட்டால் அந்தப் பாதைகளுக்கிடையிலுள்ள தண்ணீர் மலையில் ஜன்னல்கள் உண்டாயின. ஆகவே, ஒருவரை ஒருவர் பார்த்தவர்களாக நலமுடன் அக்கரை போய்ச் சேர்ந்தார்கள்.

பிறகு, ஃபிர்அவ்ன் கடல்கரைக்கு வந்து பார்த்த போது கடல் பிளந்திருந்தது அப்படியே இருப்பதைப் பார்த்து, தனது ஜனங்களிடம் ''ஒளித்துக் கொண்டு ஓடும் அடிமைகளைப் பிடிக்க எனக்குக் கடல் பிளந்து வழிவிட்டுக் கொடுத்திருக்கிறது. அதற்குள் புகுந்து செல்லுங்கள்'' என்று கூறினான். அப்பொழுது ஜனங்கள் ''நீர் இறைவனாக இருப்பதால் மூஸாவைப்போல் நீர் முதலில் அதற்குள் செல்ல வேண்டும்'' என்றார்கள். அப்பொழுது அவன் ஆண் குதிரையின் மீது ஏறி வந்தான். ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பெட்டைக் குதிரையிலேறி கடலிலுள்ள நுழைந்தார்கள். பெட்டை குதிரையின் வாடையை ஃபிர்அவ்னுடைய குதிரை உணர்ந்து அதை பின்பற்றி ஃபிர்அவ்னுடைய கைக்கு அடங்காமல் கடலுக்குள் இருந்த பாதையில் இறங்கியது. அவனது ஜனங்கள் ஏறி வந்திருந்த மற்றைய குதிரைகளும் அதனைப் பின்தொடர்ந்து கடலினுள்

இறங்கின. ஃபிர்அவ்னுடைய குதிரைக்கு முன் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது குதிரை சென்றது. ஃபிர்அவ்னுடைய ஆட்களுக்குக் கடைசியில் ஹளரத் மீக்காயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சென்றார்கள். இவ்வண்ணமாக ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஜனங்களில் கடைசி மனிதர் கடலிலிருந்து அக்கரை ஏறினார். ஃபிர்அவ்னுடைய ஆட்களில் கடைசி மனிதர் கடலுக்குள் இறங்கினார். பிறகு, கடல் ஒன்று சேரவே ஃபிர்அவ்னும் அவனுடைய ஆட்களும் மடிந்தனர். இதனை ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும், பனீ இஸ்ராயீல்களும் அக்கரையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஃபிர்அவ்ன் கடலில் மூழ்கும்போது, லாஇலாஹ இல்லல்லதீ ஆமன்து பிஹி பனூ இஸ்ராயீல் வஅன மினல் முஸ்லிமீன்

அதாவது ''பனீ இஸ்ராயீல்கள் ஈமான் கொண்ட தெய்வத்தைத் தவிர வேறு நாயனில்லை. நான் முஸ்லிமில் உள்ளவனாக இருக்கிறேன்'' என்று கூறினான். ஆனால், பனீ இஸ்ராயீல்கள் அக்கரையிலிருந்து கொண்டு ''இப்பொழுது வந்து நம்மைப் பிடித்துக் கொன்று விடுவார்கள்'' என்று சொல்லிக் கொண்டிருந்தனர். பிறகு கடலிலிருந்து ஆறு லட்சத்து இருபது ஆயிரம் பிரேதங்கள் வெளியில் வந்தன. அவர்களது உடலில் ஆயுதங்கள் அணியப்பட்டிருந்தன. ஃபிர்அவ்னுடைய பிரேதம் சிவந்த காளை மாட்டைப் போலிருந்தது. அன்றைய தினத்திலிருந்து கடலில் மூழ்கியவர்களின் பிரேதங்களை கடல் வெளியில் தள்ளிவிடுகிறது வழக்கம் என்று சொல்லப்படுகிறது.

இந்த விபரத்தில் ஆயத்தில் கண்ட எட்டு விஷயங்களும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. தவிர, இது ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு நிகழ்ந்த முஃஜிஸாவாகும். இதுபோல இவ்விபரத்தை எழுதப்படிக்க தெரியாத நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதும் முஃஜிஸாவாகும். இந்தச் சம்பவம் இதற்கு முன் அரபியர் களுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவர்களைப் பொருத்தவரையில் இது மறைவான செய்திகளில் உள்ளது. அப்படி இருக்க இதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

வெளிப்படுத்திக் கூறியது இதனை அல்லாஹு தஆலா மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவித்தான் என்பதை தெளிவு படுத்துகிறது. இவ்வண்ணம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஜனங்கள் விடுதலையான நாள் முஹர்ரம் மாதம் பத்தாவது நாளாக இருந்தது. எனவேதான் யூதர்கள் முஹர்ரம் மாதம் பத்தாவது நாளாகிய ஆஷூரா நாளைப் பெருநாளாகக் கொண்டாடு கிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு வந்த காலத்தில் அங்குள்ள யூதர்கள் ஆஷூரா நாளில் நோன்பு நோற்றிருப்பதைப் பார்த்து, "இது என்ன நாள்? இதில் நீங்கள் நோன்பு நோற்றிருக்கிறீர்களே" என்று வினவினார்கள். அதற்கு யூதர்கள் "இன்றைய தினத்தில்தான் ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது ஜனங்கள் ஃபிர்அவ்னை விட்டு விடுதலை யடைந்தனர். ஃபிர்அவ்ன் கடலில் மூழ்க்கடிக்கப்பட்டான். ஆகவே, மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனுக்கு நன்றியாக இந்த நாளில் நோன்பு நோற்றார்கள். நாங்களும் அவரைப் பின்பற்றி நோன்பு நோற்கிறோம்" என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "உங்களைப் பார்க்கினும் நாங்கள் மூஸாவைப் பின்பற்றுவதற்கு மிகவும் அருகதை யுள்ளவர்களாகவும், மேலானவர்களாகவும் இருக்கிறோம்" என்று கூறி தாங்களும் நோன்பு நோற்றார்கள். இந்த நாளில் நோன்பு நோற்கும்படி முஸ்லிம்களுக்கும் கட்டளையிட்டார்கள் என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்களுடைய ரிவாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஆஷூராவுடைய பகலில் 4 ரக்கஅத்து நஃபில் தொழுது, ஒவ்வொரு ரக்கஅத்திலும் சூரத்துல் ஃபாத்திஹாவுக்குப் பின் சூரத்துல் இக்லாஸ் அதாவது, குல்ஹு வல்லாஹு அஹது என்ற சூராவை 50 விடுத்தம் ஓதித் தொழுபவர்களுக்கு 50 வருடத்துப் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன வென்றும், மேலுலகில் அவருக்காக ஒளியினால் ஆயிரம் மிம்பர்கள் கட்டப்படுகின்றன என்றும் ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருப்பதாக ஷெய்கு அப்துல் காதிர் குத்திஸ ஸிர்ருஹு கூறி இருக்கிறார்கள்.

ஒருவர் ஆஷூரா நாளின் இரவில் தூங்காமலிருந்து அந்த இரவை ஹயாத்தாக்கி வைப்பாராயின் அவர் முகர்ரபான மலக்குகளின் வணக்கங்களைக் கொண்டு அல்லாஹு தஆலாவை வணங்கியது போலாகி விடுகிறார் என்று மற்றொரு ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

وَإِذْ وَٰعَدْنَا مُوسَىٰٓ أَرْبَعِينَ لَيْلَةً ثُمَّ ٱتَّخَذْتُمُ ٱلْعِجْلَ مِنۢ بَعْدِهِۦ وَأَنتُمْ ظَٰلِمُونَ ٥١

51. இன்னும், (பனீ இஸ்ராயீல்களே) நாம் 'மூஸாவுக்கு' நாற்பது இரவுகளை வாக்களித்ததையும் (எண்ணிப் பாருங்கள்) பின்னர், நீங்கள் அவருக்குப் பிறகு காளை மாட்டை (தெய்வமாக) எடுத்துக் கொண்டீர்கள்; எனவே, (காளை மாட்டை தெய்வமாக எடுத்துக் கொண்டு இணை வைத்ததால் உங்களுக்கு நீங்களே) அநியாயம் செய்து விட்டீர்கள்.

மூஸா என்ற வார்த்தை அப்ரானிப் பாஷையாகும். அது இரண்டு வார்த்தைகள் கொண்டது. **மூ** என்பது அவற்றில் ஒன்று. இதற்கு தண்ணீர் என்பது பொருள். **ஷா** என்பது மற்றொரு வார்த்தை. இதற்கு மரம் என்பது பொருள். அறபியில் ஷ என்பது ஸீன் ஆக மாற்றப்பட்டது. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அவர் களுடைய தாயார் பிரசவித்த பிறகு மரப்பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டு விட்டார்கள். அந்தப் பெட்டி ஃபிர்அவ்னுடைய வீட்டிற்கு அருகிலுள்ள மரத்தடியில் வந்து சேர்ந்ததால் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மூஸா என்ற பெயர் வந்தது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது 7வது தலைமுறை ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் வந்து சேருகிறது. அதன் விபரம் வருமாறு 1. ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம், 2. அவர்களது தந்தை இம்ரான், 3. அவருடைய தந்தை யஸ்ஹர், 4. அவருடைய தந்தை பாஹத், 5. அவருடைய தந்தை லாவி, 6. அவருடைய தந்தை ஹளரத் யாக்கூப் (இஸ்ராயீல்) அலைஹிஸ்ஸலாம் 7. அவருடைய தந்தை ஹளரத் இஸ்ஹாக்

அலைஹிஸ்ஸலாம் 8. அவருடைய தந்தை ஹளரத் இப்ராஹீம் கலீலுல்லாஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

மூஸாவுடன் ஒருவருக்கொருவர் வாக்குறுதி செய்து கொண்டோம். அதாவது, மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நாற்பது நாள் நோன்பு நோற்க வேண்டும் என்றும், நாற்பது நாள் பூர்த்தியானபின் அல்லாஹு தஆலா தவ்ராத் வேதத்தைக் கொடுப்ப தென்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. இதில் நோன்பு நோற்பதாக ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும், தவ்ராத் வேதம் தருவதாக அல்லாஹு தஆலாவும் வாக்குறுதிகள் செய்து கொண்டனர். இரண்டு பேரும் வாக்குறுதிகள் செய்து கொண்டதால்தான் **வாஅத்னா** என்பதாக அல்லாஹு தஆலா தனது திருமறையில் கூறி இருக்கிறான்.

நாற்பது இரவுகள் என்பதாக அல்லாஹு தஆலா கூறிஇருக்கிறான். நோன்பு நோற்பது பகல் காலமாக இருக்க இந்த இடத்தில் இரவுகளைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அரபு நாடுகளில் வருடம், மாதம், தேதி முதலிய கணக்குகள் சந்திரனின் நடமாட்டத்தைக் கணித்து எடுக்கப்படுகின்றன. ஆகவே, சந்திர வருடங்களில் இரவுதான் முந்தியும் பகல் பிந்தியுமிருக்கிறது. இதன்படி 40 இரவுகள் என்றதிலிருந்து 40 நாட்கள் என்று கருத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. தவிரவும், உலகில் இருள் முந்தியா அல்லது பிரகாசம் முந்தியா என்று கவனித்ததில் இருள்தான் முந்தியது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி இரவுதான் பகலைப் பார்க்கினும் முந்தியது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தவ்ராத் வேதத்தை வாங்குவதற்காக தூர்ஸீனா மலைக்குச் சென்று நாற்பது நாள் தங்கி இருந்தது துல்கஃதா மாதமும், துல்ஹஜ்ஜு மாதத்தில் முதல் 10 நாட்களும் என்று திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அழைப்பதற்காக ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஃபர்ஸேஹயாத் என்னும் ஜீவ குதிரையில் ஏறி வந்தார்கள். அப்போது ஸாமிரி என்னும் (பித்தளை பாத்திரம் செய்யும்) ஒரு கன்னான் அந்தக்

குதிரையின் கால்பட்ட இடம் பசுமையாகுவதைக் கண்டு இந்தக் குதிரையில் ஏதோ விசேஷமிருக்கிற தென்று எண்ணி அதன் கால்பட்ட இடத்தில் ஒரு பிடிமண் எடுத்து வைத்துக் கொண்டான். பிறகு அவன் தங்கத்தினால் காளை மாட்டைப்போல் ஒரு உருவத்தைச் செய்து அதில் அந்த மண்ணைப் போட்டான். அது காளை மாட்டைப்போல் சப்தமிட்டது. அதைக்கண்ட ஸாமிரி பனீ இஸ்ராயீல்களிடம், "இதுதான் உங்களுக்கும் மூஸாவுக்கும் இறைவன். அவர் இறைவனை இவ்விடம் விட்டு விட்டு தூர்ஸீனா மலைக்குப் போயிருக்கிறார்" என்று கூறினான். தவிரவும், பனீ இஸ்ராயீல்களில் சிலர் நாற்பது நாளை ஒரு இரவும் பகலும் சேர்ந்ததை ஒருநாள் என்று கணித்துக் கொள்ளாமல், ஒரு இரவை ஒரு நாள் என்றும் ஒரு பகலை இன்னொரு நாள் என்றும் கணித்துக் கொண்டார்கள், ஆகவே, 20 நாட்கள் பூரணமாகக் கழிந்து விடவே அவர்கள் நாற்பது நாள் முடிந்து விட்டது. அவர் திரும்பி வராததால் தூர்ஸீனா மலையில் இறந்து விட்டார் என்று எண்ணிக் கொண்டு ஸாமிரி செய்து வைத்திருந்த காளை மாட்டின் உருவத்தை வணங்க ஆரம்பித்தனர். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூர்ஸீனா மலைக்குச் சென்றபோது ஹளரத் ஹாரூன் அலைஹிஸ் ஸலாம் அவர்களை கலீஃபாவாக நியமித்துச் சென்றிருந்தார்கள். காளை மாட்டை வணங்கக் கூடாது என்று ஹளரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் வணங்க ஆரம்பித்தனர். ஆனாலும், ஹளரத் ஹாரூன் அலைஹிஸ் ஸலாம் அவர்களும் பனீ இஸ்ராயீல்களில் பலரும் அதனை வணங்காமல் விலகி இருந்தனர்.

ثُمَّ عَفَوْنَا عَنكُم مِّن بَعْدِ ذَٰلِكَ لَعَلَّكُمْ تَشْكُرُونَ ﴿٥٢﴾

52. நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு (நீங்கள் காளை மாட்டின் உருவத்தை வணங்கிய) அதற்குப் பின்னரும் உங்களை (விட்டு உங்கள் பாவத்தை அழித்து) மன்னித்தோம்.

ஃபிர்அவ்னை விட்டு இவர்களுக்கு விடுதலை யளித்த தனக்கு இவர்கள் நன்றி செலுத்தாமல் காளை மாட்டின் உருவத்தை வணங்கி

யதற்காக அல்லாஹு தஆலா அவர்களின் மீது கோபமடைந்தான். ஆயினும், அவர்களை உடனே அழித்து விடாமல், அவர்கள் செய்த பாவத்தை உணர்ந்து அவர்கள் தவ்பாச் செய்யட்டும் என்பதற்காக ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திரும்பவும் அவர்களிடம் வரும்வரை அவர்களை வேதனையில் பிடிக்காமல் அவன் விட்டு வைத்திருந்தான். இதுவும் அவன் அவர்களுக்குச் செய்த ஒரு அருட்கொடையாகும். இந்த அருட்கொடைக்கு நன்றி செலுத்து வதற்கும் அவர்களுக்கு அல்லாஹு தஆலா சந்தர்ப்பம் அளித்திருந்தான்.

وَاِذْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ وَ الْفُرْقَانَ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ﴿٥٣﴾

53. மேலும், நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு (சத்தியம் அசத்தியமாகியவைகளைப்) பிரித்தரிவிக்கக் கூடிய வேதத்தை நாம் மூஸாவுக்குக் கொடுத்த நாளை (எண்ணிப் பாருங்கள்).

கித்தாபு என்பதும் ஃபுருக்கான் என்பதும் இந்த இடத்தில் தவ்ராத் வேதத்தைக் குறிக்கும். கித்தாபு என்பதற்கு வேதப் புத்தகம் என்பது பொருள். ஃபுருக்கான் என்பதற்கு ஹக்கையும் பாத்திலையும் (உண்மையையும் பொய்யையும்) பிரித்தறிவிக்கிறது என்பது பொருள். ஆகவே, தவ்ராத் வேதப் புத்தகமாகவும், ஹக்கையும் பாத்திலையும் பிரித்தறிவிப்பதாகவும் இருப்பதால் அதற்கு இந்தப் பெயர்கள் வந்தன.

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖ يٰقَوْمِ اِنَّكُمْ ظَلَمْتُمْ اَنْفُسَكُمْ
بِاتِّخَاذِكُمُ الْعِجْلَ فَتُوْبُوْۤا اِلٰى بَارِئِكُمْ فَاقْتُلُوْۤا اَنْفُسَكُمْ
ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ عِنْدَ بَارِئِكُمْ فَتَابَ عَلَيْكُمْ اِنَّهٗ هُوَ
التَّوَّابُ الرَّحِيْمُ ﴿٥٤﴾

54. இன்னும் ‘மூஸா தன் சமூகத்தாரை நோக்கி, “என்னுடைய சமூகத்தினரே! நீங்கள் காளைமாட்டை (தெய்வமாக) எடுத்துக் கொண்டதால், நிச்சயமாக நீங்கள் உங்களுக்கே அநியாயஞ் செய்து கொண்டீர்கள்; ஆதலால், உங்களைச் சிருஷ்டித்தவனிடத்தில் (அச்செய்கைக்காக தவ்பா செய்து) மீண்டு உங்களை நீங்களே வெட்டிக்கொள்ளுங்கள்; அது உங்களைச் சிருஷ்டித்தவனிடம் உங்களுக்கு நன்மையாயிருக்கும்”, என்று சொன்ன வேளையை நினைத்துப்பாரும் (அவ்வாறே நீங்களும் செய்ததனால்) அவனும் உங்களை மன்னித்தான். நிச்சயமாக அவன்தான் மன்னிப்போனும், பேரன்புடையோனுமாக இருக்கின்றான்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூர்ஸினா மலையிலிருந்து திரும்ப வந்தபோது அவர்கள் ஸாமிரி செய்து கொடுத்திருந்த காளை மாட்டின் உருவத்தை தெய்வம் என எண்ணி அதனை வணங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, நீங்கள் காளை மாட்டை வணங்கியதால் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொண்டீர்கள். ஆதலால், நீங்கள் காளைமாட்டை வணங்கிய குற்றத்திற்காக அல்லாஹு தஆலாவிடம் தவ்பாச் செய்து மீள வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். அப்பொழுது அவர்கள் எப்படி தவ்பாச் செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு, உங்களில் காளை மாட்டை வணங்கியவர்களைக் காளை மாட்டை வணங்காதவர் வெட்ட வேண்டும் என்று கூறினார்கள்.

அவர்கள் தவ்பாச் செய்வது என்பது அவர்களை வெட்டுவதுதான் என்று **தஃப்ஸீர் கஷ்ஷாஃபில்** எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், **தஃப்ஸீர் கபீரில்** தவ்பாச் செய்தல் என்பதற்கு அவர்களை அவர்கள் வெட்டிக் கொள்தல் என்பது கருத்து இல்லை. அவர்களுடைய தவ்பா அவர்களை வெட்டிக் கொண்டால்தான் பூர்த்தியாகும் என்றும், முர்த்தத்தாகி விட்டவர்களுடைய தவ்பா வெட்டிக் கொள்வதால்தான் பூர்த்தியடையும் என்றும் அல்லாஹு தஆலா ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வஹி அறிவித்திருந்தான் என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

فَاقْتُلُوْٓا اَنْفُسَكُمْ ஃபக்துலூ அன்ஃபுஸகும் '**உங்களை நீங்கள் வெட்டிக் கொள்ளுங்கள்**' என்று மேலே சொல்லப்பட்டிருப்பதில் இருந்து குற்றம் செய்தவரே தன்னை வெட்டிக் கொள்ள வேண்டும். அதாவது தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று கூறியதாகத் தெரிகிறது. உண்மை அப்படி அல்ல. ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது ஜனங்களை நோக்கி "நீங்கள் தற்கொலை செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லவில்லை. பாவம் செய்தவர் களைப் பாவம் செய்யாதவர்கள் வெட்டவேண்டும் என்றே கூறி இருந்தார்கள். ஏனெனில் மூமின் அனைவரும் ஒருவருக் கொருவர் சகோதரர்களாவார்கள். ஒருவருடைய சகோதரர் அவராகவே இருப்பதால் அல்லாஹூ தஆலா "உங்களை நீங்களே வெட்டிக் கொள்ள வேண்டும்" என்று கட்டளை யிட்டிருக்கிறான்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தங்கள் ஜனங்களைப் பார்த்து "நீங்கள் உங்களை வெட்டிக் கொள்ள வேண்டும் என்று சொல்லவே, அவர்கள் "நாங்கள் இதை ஒப்புக் கொள்கிறோம் அல்லாஹூ தஆலாவுடைய கட்டளைக்கு கட்டுப் படுகிறோம்" என்று கூறினார்கள். பின்னர், அவர்கள் அனைவரும் ஒரு மைதானத்திற்குச் சென்று யோகப் பட்டை கட்டிக்கொண்டு, தலை கவிழ்ந்தவர்களாக உட்கார்ந்து கொண்டார்கள். அப்போது அவர்களுக்கு "உங்களில் ஒருவர் யோகப்பட்டையை அவிழ்த்தாலும், அல்லது வெட்டுகிறவர்களை ஏறிட்டுப் பார்த்தாலும் அல்லது காலாலோ கையாலோ அந்த வெட்டைத் தடுத்தாலும் அவர் சபிக்கப்பட்டவராகி விடுவார். அவருடைய தவ்பா ரத்துச் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது" என்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள். ஆகவே, வெட்டுகிறவர்களும் வெட்டப் படுகிறவர்களும் உடன் பிறந்த சகோதரர்களாகவோ, தந்தையும் பிள்ளையுமாகவோ, நண்பர் களாகவோ, பக்கத்து வீட்டுக்காரர் களாகவோ இருந்தார்கள். ஆதலால், வெட்டுகிறவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் "எங்களுக்கு வெட்ட மனம் துணிய வில்லை" என்று முறையிட்டுக் கொண்டார்கள். எனவே அல்லாஹூ தஆலா அவர்களிடம் மேகத்தை அனுப்பினான். அந்த மேகங்கள் வந்து கவிழ்ந்து கொண்டதால் ஒருவரை ஒருவர் இன்னார் என்று அடையாளம் தெரியாமலாகி விட்டது. அப்பால் காலை நேரத்திலிருந்து மாலை வரை கொன்றார்கள். ஜனங்கள் வெட்டுப்பட்டு அதிகமாக மடிவதைப் பார்த்து ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம், ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இருவரும் அழுது கவலையடைந்து அல்லாஹூ தஆலாவிடத்தில் "இறைவா! பனீ இஸ்ராயீல்கள் மடிந்து விட்டார்கள். எஞ்சியவர்களையேனும் காப்பாற்றுவாயாக" என்று துஆச் செய்தார்கள். உடனே மேகம் வெளிவாங்கிற்று. அவர்கள் வெட்டுவதை நிறுத்திக் கொள்ளும்படி கட்டளையிடப்பட்டது. பிறகு வெட்டுப்பட்டு மடிந்தவர்களைக் கணக்கு எடுத்ததில் 70 ஆயிரம் பேர் என்று தெரியவந்தது. ஆகவே, வெட்டுப்பட்டு இறந்தவர் ஷஹீதுகளானார்கள். வெட்டுப்படாமல் எஞ்சியவர்கள் மன்னிக்கப்பட்டார்கள்.

அல்லாஹூ தஆலாவால் அருளப்பட்ட ஒரு பெரும் அருட்கொடையாக இருக்கிறது. இது நான்கு வகைப்படும்.

முதலாவது வகை:- இது தவ்பா என்ற பெயருக்கு மட்டும் சொந்தமானது. இது ஸாலிக்கீன்களின் மன்ஜில்களில் முதலாவது மன்ஜிலாக (தங்குமிடமாக) இருக்கிறது. இது நஃப்சுல் அம்மாராவுக்குச் சம்மந்தப்பட்டது. இது மூமின் பொது மக்களுக்குரிய மர்த்தபாவாக (அந்தஸ்தாக) இருக்கிறது. அதாவது விலக்கப் பட்ட காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடுவதுடன், செய்யும்படி ஏவப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும். தவறிப்போன காரியங்களை நிறைவேற்ற வேண்டும். உரியவர்களுக்கு அவரவர்களுக்கு உரியதைத் திரும்பக் கொடுத்து விடவேண்டும். அநியாயம் செய்யப்பட்டவர்களிடம் சென்று அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். இன்னும் இதற்கு முன் சென்று போன காரியத்திற்காக கைசேதப்படவேண்டும். இனிமேல் அந்தப் பாவமான காரியங்களைச் செய்வதில்லை என்று உறுதி கொள்ள வேண்டும்.

இரண்டாவது வகை:- இதற்கு இனாபத்து என்று பெயர் இது நஃப்சுல் லவ்வாமாவுக்குச் சம்மந்தப்பட்ட தவ்பாவாகும். இது மூமின்களில் கவாஸ்களாக (முக்கியமானவர்களாக) இருக்கிற

வலிமார்களின் அந்தஸ்தாகும். உலகத்தைத் துறப்பதன் மூலமாகவும், உலகத்தினுடைய இன்பங்களை வெறுப்பதன் மூலமாகவும் அல்லாஹு தஆலாவின் பால் திரும்புவதும், ஒழுக்கங்களைச் சீர்த்திருத்தி, மனோ இச்சைகளுக்கு மாறு செய்து மனதைச் சுத்தப்படுத்துவதும், எப்பொழுதும் இந்தப் போராட்டத்தைச் செய்து கொண்டே இருப்பதுமாகும். எனவே, மனம் இவ்விதமான இனாபத்தில் கலந்து விட்டால் கல்புடைய மக்காமில் பிரவேசித்து அதனுடைய ஸிஃபத்துகள் என்னும் தன்மைகளை உடையதாக்கி விடுகிறது. ஏனெனில், இனாபத்து கல்புடைய லட்சணங்களில் ஒன்றாகும்.

மூன்றாவது வகை:- இதற்கு ஔபத்து என்று பெயர். இது நஃப்சுல் முல்ஹிமாவுக்குச் சம்மந்தப்பட்டது. இது வலிமார்களிலும் கவாஸ்ஸு களாகவுள்ளவர்களின் அந்தஸ்தாகும். அல்லாஹு தஆலாவின் (லிக்கா என்னும்) சந்திப்பின் பால் அதிக ஆவலுள்ளதாக இருக்கிறது என்பதற்குரிய அடையாளங்களின் மூலமாக அல்லாஹு தஆலாவின் பால் மீளவேண்டும். எனவே, நஃப்ஸானது ஔபத்தில் கலந்து விட்டால் ரூஹுடைய மக்காமில் பிரவேசித்து விடுகிறது. ஆகவே, ஔபத்துடைய மக்காமில் பிரவேசித்தவர்களின் அடையாளங்களானவை ஜனங்களுடன் கலந்திருப்பதற்குப் பதிலாக அவர்கள் தனித்திருப்பதை விரும்புவார்கள். சிருஷ்டிகளிடம் சேருவதை வெறுப்புக் கொண்டிருப்பார்கள். அல்லாஹு தஆலாவிடம் சேருவதைப் பிரியப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அல்லாஹுதஆலாவில் தனது நஃப்ஸுடன் முஜாஹதாச் செய்து கொண்டிருப்பார்.

நான்காவது வகை:- இது நஃப்சுல் முத்மஇன்னாவுக்குச் சம்மந்தப்பட்டது. இது நபிமார்களினுடையவும், வலிமார்களில் மிக மிக முக்கியமானவர்களினுடையவும் அந்தஸ்தாகும்.

அறிந்துகொள்:- ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒரு **காளை மாடு** இருந்து கொண்டிருக்கிறது. அல்லாஹு தஆலாவை விட்டுவிட்டு அதனை அந்த ஜனங்கள் வணங்குகிறார்கள். **திர்ஹம் தீனார்** அதாவது வெள்ளி தங்க நாணயங்கள் என்ற காளை மாட்டை வணங்குபவர்களும் இருக்கிறார்கள். **இச்சைகள்** என்ற காளை மாட்டை

வணங்குபவர்களும் இருக்கிறார்கள். **மதிப்பு, கௌரவம்** என்ற காளை மாட்டை வணங்குபவர்களும் இருக்கிறார்கள். **காம இச்சை** என்ற காளை மாடுதான் அல்லாஹுதஆலாவின் மீது அதிகக் கோபமுள்ளது. ஆகவே, ஒவ்வொரு சீதேவியினுடைய **கல்பு** என்கிற **மூஸா**விடம் அல்லாஹு தஆலா **"நிச்சயமாக நீங்கள் காளை மாட்டை தெய்வமாக ஏற்படுத்திக் கொண்டதனால், உங்களுக்கு நீங்களே கேடு செய்து கொண்டீர்கள். ஆதலின், உங்களை உண்டாக்கியவனின் பால் நீங்கள் மீளுங்கள்"** என்பதாக அறிவிக்கிறான். அதாவது அல்லாஹ் அல்லாத சகலத்தையும் விட்டு அவனின் பால் திரும்ப வேண்டும். இப்படித் திரும்பாமல் **மனோ இச்சையைக்** கொல்ல முடியாது. ஆதலால், (**ஹவா** என்னும்) **மனோ இச்சையை** அடக்குவதன் மூலம் நஃப்ஸைக் கொல்ல வேண்டும். ஏனெனில், மனோ இச்சைதான் **மனோ இச்சைக்கு ஹயாத்** என்னும் **ஜீவனாக** இருக்கிறது. இந்த ஹவா என்னும் மனோ இச்சையினால்தான் **ஃபிர்அவ்ன்** தன்னை **றப்பு** என்று தாவாச் செய்தான். **பனூ இஸ்ராயீல்** கூட்டத்தார் காளை மாட்டை வணங்கியதும் இந்த **மனோ இச்சை**யினால்தான். இந்த **மனோ இச்சை**யினால்தான் இப்லீஸ் அல்லாஹு தஆலாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் மீறி தற்பெருமை கொண்டான். ஆகவே, **மனோ இச்சைக்கு** வழிப்படாமல் அதனை விட்டு விலகுவது கொண்டு மனோ இச்சையைக் கொன்று உங்களுக்கு உதவி செய்து அல்லாஹு தஆலாவின் பக்கல் திரும்புங்கள். அல்லாஹு தஆலாவின் உதவியின் பேரில் உங்களது (நஃப்ஸு என்னும்) அகத்தைத் கொல்லுங்கள். வெளிரங்கத்தில் ஒரு உயிர் பிராணியைக் கொன்று விடுவதும் மூமின் காஃபிர் ஆகிய யாவருக்கும் சுலபமான காரியம். அனால், அகத்திலுள்ள மனோ இச்சையைக் கொன்று அதனை வெல்வது மிகவும் கஷ்டமான காரியம். ஸித்கு என்ற வாளைக் கொண்டு ஷுக்ருடைய உதவியின் பேரில் மனோ இச்சையை வெட்டுவது ஹக்குடைய கவாஸ்ஸுகளாக இருக்கிறவர்களைத் தவிர வேறு யாருக்கும் சுலபமான தன்று. இதனால்தான் **ஸித்தீக்கீன்**களின் அந்தஸ்து (மர்த்தபா) **ஷுஹதாக்**களுடைய (மர்த்தபாவை) அந்தஸ்தைப் பார்க்கினும் மேலானதாக இருக்கிறது.

இதனைக் குறித்துத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நாம் மிகச் சிறிய யுத்தத்திலிருந்து மிகப் பெரிய யுத்தத்தின் பால் திரும்பி இருக்கிறோம்" என்று கூறி இருக்கிறார்கள்.

எவ்வாறெனில், ஒரு முஜாஹிது (மார்க்க யுத்தம் செய்பவர்) காஃபிர்களைத் தமது வாளால் வெட்டி விடுவாராயின் ஒரே முறையில் கஷ்டத்திலிருந்து சுகம் பெற்றவராகி விடுகிறார். ஆனால், பரமார்த்திக வழியிற் செல்லும் உண்மை முஜாஹிதானவர் ஸித்கு என்ற வாளினால் தினந்தோறும் ஆயிரம் முறை மனோ இச்சையை வெட்டி வீழ்த்தினாலும் அது ஒவ்வொரு முறையிலும் உயிர் பெற்றெழும்பி விடும். அத்துடன் அது புதுப்புது முறையில் தனது விரோதமான காரியத்தைச் செய்து கொண்டே இருக்கும். ஆகவே, பரமார்த்திக வழியில் செல்லும் முஜாஹிதானவன் ஒரு கணப் பொழுதுங் கூட மனோ இச்சையை விட்டு அச்சந் தீர்ந்திருக்க முடியாது.

وَاِذْ قُلْتُمْ يٰمُوْسٰى لَنْ نُّؤْمِنَ لَكَ حَتّٰى نَرَى اللّٰهَ جَهْرَةً فَاَخَذَتْكُمُ الصّٰعِقَةُ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ ۝

55. மேலும் நீங்கள், "மூஸாவே! அல்லாஹ்வை நாங்கள் பிரத்தியட்சமாகக் (கண் கூடாகக்) காணும்வரையில் உம்மை நாங்கள் விசுவாசிக்க மாட்டோம்" என்று கூறினீர்கள். நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே உங்களை இடி முழக்கம் பிடித்துக் கொண்டது.

அஸ்ஸாஇகத் என்பது கரிக்கக்கூடிய ஒரு வகை நெருப்பு. அதில் சப்தமும் இருக்கும். வானத்திலிருந்து கீழே இறங்கும். புத்தியையும் அறிவையும் போக்கி, மரணத்தை உண்டாக்கக் கூடிய பயங்கரமான ஒவ்வொன்றுக்கும் **ஸாஇகத்** என்று சொல்கிறார்கள்.

பனீ இஸ்ராயீல்களுக்கு அல்லாஹு தஆலா அளித்த ஆறாவது அருட்கொடை இங்கிருந்து கூறப்படுகிறது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூர்ஸீனா மலைக்குச் சென்று தவ்ராத் வேதத்தை வாங்கி வந்தபோது, அந்த ஜனங்கள் காளை மாட்டை

வணங்கி அல்லாஹு தஆலாவுக்கு இணை வைத்ததைக் கண்டு ஹளரத் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஸாமிரியையும் கண்டித்து விட்டு, காளை மாட்டின் உருவம்போல் சிருஷ்டித்திருந்ததை எரித்துக் கடலில் போட்டார்கள். மேலும், அந்த ஜனங்கள் தாங்கள் இணை வைத்ததற்காக கைசேதமடைந்து "எங்களுடைய றப்பு எங்கள்பால் கிருபை செய்து எங்களை மன்னிக்காவிடில் நாங்கள் நஷ்டவாளர்களாகி விடுவோம்" என்று கூறினார்கள். அப்பொழுது அல்லாஹு தஆலா பனீ இஸ்ராயீல்கள் காளை மாட்டை வணங்கியதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் பொருட்டு அவர்களிலுள்ள சிலர் தன்னிடம் வரவேண்டும் என்று கட்டளையிட்டான். ஆகவே, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனீ இஸ்ராயீல்களில் 70 பிரபலமானவர்களைத் தெரிந்தெடுத்து தூர்ஸீனா மலைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் அப்படிச் செல்லும்போது அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் **அல்லாஹு தஆலாவின் வசனத்தை நாங்களும் கேட்க வேண்டுமென்று அவனிடம் கேளுங்கள்** என்பதாகக் கேட்டுக் கொண்டார்கள். இவர்களின் இவ்வேண்டுகோளை அல்லாஹு தஆலா ஒப்புக் கொண்டான். எனவே, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மலையை நெருங்கிச் சென்றபோது மேகத்தின் தூண்கள் அவர் மீது வந்து மலையை மூடிக் கொண்டன. இன்னும் அந்த மேகம் **ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம்** அவர்களிடமும் நெருங்கிற்று. அவரும் அதில் புகுந்ததுடன் தமது ஜனங்களையும் உள்ளே வரும்படி அழைத்துக் கொண்டார்கள். பிறகு, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவுடன் பேசினார்கள். அல்லாஹு தஆலா அவருடன் பேசும் போதெல்லாம் அவருடைய முகத்தில் இலங்கும் படியான பிரகாசம் இருந்து கொண்டிருந்தது. அந்த 70 பேரில் ஒருவர்கூட அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. ஆனால், அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் அல்லாஹு தஆலாவின் வசனங்களையும் செவியேற்றுக் கொண்டனர். அனால், அவர்களுக்கு அல்லாஹு தஆலாவையும் பார்க்க வேண்டும் என்ற ஆசையுண்டாகி

விட்டது. அப்பொழுதுதான் அந்த ஜனங்கள் لَنْ نُّؤْمِنَ لَكَ حَتّٰى نَرَى اللّٰهَ جَهْرَةً **“நாங்கள் அல்லாஹு தஆலாவை கண் கூடாகக் காணாமல் உம்மை விசுவாசிக்க மாட்டோம்”** என்று கூறினார்கள். அப்பொழுது அவர்களை கரிக்கக் கூடிய நெருப்புப் பிடித்துக் கொண்டது. ஆகவே, அவர்கள் ஒரு இரவும் பகலும் பிரேதமாகக் கிடந்தார்கள்.

ثُمَّ بَعَثْنٰكُمْ مِّنْ بَعْدِ مَوْتِكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ۝

56. பின்பு, நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு, மரணத்திற்குப் பின்(னும்) உங்களை நாம் எழுப்பினோம்.

இவர்கள் இப்படி பிரேதமாகக் கிடப்பதைப் பார்த்து ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் அழுது சலித்து “இறைவா! பனீ இஸ்ராயீல்களின் தவ்பா கபூலாகி விட்டது என்பதற்கு சாட்சிகளாக இருப்பதற்காக அவர்களிடமிருந்து 70 பேரைத் தெரிந்தெடுத்துக் கொண்டு வந்தேன். அவர்களிலுள்ள பிரபல மானவர்களை நீ இப்படி அறுத்துப் போட்டாய். நான் அவர்களிடம் திரும்பச் செல்லும்போது நான் அவர்களுக்கு என்ன சொல்ல முடியும்? நீ இஷ்டப்பட்டிருந்தால் இன்றைக்கு முன்பே அவர்களைக் காளை மாட்டுக்காரர்களுடன் சேர்த்து அழித்திருக்கலாம். எங்களிலுள்ள மடையர்கள் செய்ததற்காக எங்களை நீ அழிக்கிறாயா?” என்று துஆக் கேட்டார். அவர் துஆக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அல்லாஹு தஆலா அவர்களை எழுப்பி விட்டான். அவர்களது உயிர்கள் அவர்களிடம் திரும்ப வந்தன. பிறகு அவர்கள் காளைமாட்டை வணங்கியதற்காக அவர்கள் தவ்பாச் செய்ய வேண்டிய முறை என்ன வென்று கேட்கப்பட்டது. அதற்கு அல்லாஹு தஆலா ‘அவர்கள் தங்களையே வெட்டிக் கொள்ள வேண்டும்’ என்று கூறினான். இதனைக் குறித்துத்தான் அல்லாஹு தஆலா ثُمَّ بَعَثْنٰكُمْ مِّنْ بَعْدِ مَوْتِكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ **பின்னர் நீங்கள் நன்றி செலுத்துவதற்காக உங்களுடைய மரணத்திற்குப் பிறகு உங்களை நாம் எழுப்பினோம்** என்று கூறி இருக்கிறான்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இதற்கு முன் ஒரு முறை அல்லாஹு தஆலாவிடம் “அவனைப் பார்க்க வேண்டும்” என்று கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுதும் இம்மாதிரிதான் இடி முழக்கம் அல்லது கரி நெருப்புப் பிடித்துக் கொண்டது. ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அதனால் மயங்கிக் கிடந்தார்கள். மரண மடையவில்லை. ஏனெனில் அல்லாஹு தஆலாவின் மீதுள்ள (ஷௌக்கு என்னும்) பிரியத்தினாலேயே ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அப்படிக் கேட்டிருந்தார்கள். இதனால் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பற்றி **ஃபலம்மா ஆஃபாக் அவர் தெளிந்தபோது** (சூரத்துல் அஃராஃப் 143) என்று கூறி இருக்கிறான். ஆனால் பனீ இஸ்ராயீல்கள் அப்படி பிரியத்தால் கேட்கவில்லை. விஷயத்தைத் தெரிந்து நேர்வழி பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்திலும் கேட்கவுமில்லை. வேண்டு மென்றே வம்புக்காகவும், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பொய்ப்பிப்பதற்காகவும் அவர்கள் இப்படிக் கேட்டனர். இதனால்தான் இவர்கள் மரணமடைய வேண்டியதாயிற்று.

மேலும், அல்லாஹு தஆலா மனிதர்களைப் போல் ஜடலம் உள்ளவனாக இருப்பான் என்று எண்ணிக் கொண்டு இந்த புறக்கண்ணால் ஸ்தூலப் பொருள்களைப் பார்ப்பது போல அவனைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார்கள். இம்முறையில், அல்லாஹு தஆலாவைப் பார்ப்பது முஹாலான (சாத்தியமே இல்லாத) காரியமாகும்.

وَظَلَّلْنَا عَلَيْكُمُ الْغَمَامَ وَاَنْزَلْنَا عَلَيْكُمُ الْمَنَّ وَالسَّلْوٰى ؕ
كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ ؕ وَمَا ظَلَمُوْنَا وَلٰكِنْ كَانُوْۤا
اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ ۝

57. மேலும் உங்கள் மீது மேகத்தை நிழலிடும்படி செய்து உங்களுக்கு ‘மன்னு’வையும் ‘ஸல்வா’ வையும் இறக்கி வைத்தோம். எனவே, நாம் உங்களுக்கு அளித்திருக்கிற பரிசுத்தமான (மன்னுஸல்வாவாகிய) திலிருந்து புசியுங்கள். (என்று கூறியிருந்தும்

அவர்கள் அவற்றை அவ்வப்பொழுது புசித்து விடாமல் மீதப்படுத்தி வைத்ததினால்) அவர்கள் நமக்கு (நஷ்டப்படுத்தித் தீங்கிழைத்து விடவில்லை. எனினும் அவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொண்டனர்.

அல்லாஹூ தஆலா பனீ இஸ்ராயீல்களுக்கு அளித்த ஏழாவது அருட்கொடையை இந்த ஆயத்தில் கூறி இருக்கிறான். இது எகிப்துக்கும் ஷாமுக்குமிடையிலுள்ள பாலைவனத்தில் நிகழ்ந்தது. பனீ இஸ்ராயீல்கள் எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்டு, கடலைக் கடந்து வனாந்திரமான பாலை வனத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அல்லாஹூ தஆலா அவர்களை ஜப்பாரீன்கள் (கொடுங் கோலர்கள் வம்பர்கள்) இருக்கும் ஊருக்குச் சென்று அவர்களுடன் போரிடும்படி கட்டளையிட்டான். அவர்கள் முதலில் ஒப்புக் கொண்டிருந்தனர். ஆனால், அந்த ஊருக்குச் சமீபத்தில் வந்தபோது அந்த ஊரில் உள்ளவர்கள் வம்பர்கள் என்றும் மிகவும் பலமுள்ளவர்களென்றும், அவர்களுடைய உயரம் 700 முழம் என்றும் இன்னும் இது போன்றவைகளையும் கேள்விப்பட்டு அவர்கள் போரிடமாட்டோமென்று விலகிக் கொண்டதுடன் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி **“நீரும் உமது றப்பும் சென்று யுத்தம் செய்யுங்கள். நாங்கள் இந்த இடத்தில் உட்கார்ந்திருக்கிறோம்”** (சூரத்துல் மாயிதா 24) என்றுங் கூறினர். ஆகவே, அல்லாஹூ தஆலா அவர்களுடைய இந்தச் செய்கைக்காக அவர்களைக் கண்டித்ததுடன் 40 வருட காலம் வரை அந்த பூமியில் அலைந்து திரியும்படி செய்து விட்டான். ஆனால், அந்த வனாந்திரம் 12 பர்ஸகு (36 மைல்) தூரம்தான் இருந்தது. அவர்கள் அங்கு அலைந்து திரியும்போது அவர்களுக்குக் கடுமையான உஷ்ணமும், அளவுக்கு மீறிய பசியும் ஏற்பட்டது. ஆகவே, அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இதைப் பற்றி முறையிட்டுக் கொண்டார்கள். எனவே அல்லாஹூ தஆலா அவர்களுக்குக் கிருபை செய்து அவர்கள் இரவு நேரங்களில் நடக்க வானத்திலிருந்து பிரகாசத்தையும், பகலில் சூரிய உஷ்ணத்தைத் தடுக்க மேகத்தையும் இறைவன் அனுப்பினான். இந்த

மேகம் மழையுடைய மேகத்தைப் பார்க்கினும் மிக லேசானதும் தூய வெண்மையானதுமாயிருந்தது.

கமாம் என்று மேகத்திற்குப் பெயர் வந்ததற்குக் காரணம் என்னவென்றால். மனிதருக்கு (கும் என்னும்) துக்கம் வந்தால் (கல்பு என்னும்) இருதயத்திற்குத் திரையை ஏற்படுத்தி விடுகிறது. இதுபோல மேகம் வானத்தை மறைத்துத் திரையிடுகிறது. இந்தக் காரணத்தினால் மேகத்திற்கு **கமாம்** என்ற பெயர் வந்தது.

பிறகு அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் உணவைப் பற்றிக் கேட்டார்கள். அப்பொழுது அவர் அல்லாஹூ தஆலாவிடம் துஆச் செய்தார். அதனை அல்லாஹூ தஆலா ஒப்புக் கொண்டு மன்னு என்னும் ஒரு வகை உணவை அவர்களுக்கு இறக்கினான். இதனைக் குறித்துத்தான் அல்லாஹூ தஆலா وَأَنْزَلْنَا عَلَيْكُمُ الْمَنَّ என்று கூறி இருக்கிறான்.

மன் என்பது துரன்ஜபீன் என்னும் ஒருவகைப் பழம். இது பனியைப்போல் வெண்மையாக இருக்கும். ருசியில் நெய்யுடன் சேர்த்துக் குழைக்கப்பட்ட தேன் போலிருக்கும். எவ்விதக் கஷ்டமும் பிரயாசையும் எடுத்துக் கொள்ளாமலிருக்கும் போது அல்லாஹூ தஆலாவிடமிருந்து கிடைக்கும் ஒவ்வொன்றிற்கும் **மன்னு** என்று சொல்லப்படுகிறது. கொடைக்காளான் என்றும் சிலர் சொல்கிறார்கள். “கொடைக்காளான் மன்னில் நின்று முள்ளது. அதன் தண்ணீர் கண்ணுக்கு மருந்து” என்று நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கொடைக்காளான் தண்ணீரை மற்றொரு மருந்தில் கலப்பதைப் பற்றி ஒன்றும் கூறாமல் அதனை மட்டுமே மேலே கண்ட ஹதீஸில் கூறி இருப்பதால் கொடைக் காளானின் சுத்தமான கலப்பில்லாத நீரைப் பற்றித்தான் கூறியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

“என்னுடைய ஒரு அடிமைப் பெண்ணுக்கு மூன்று

கொடைக்காளான்களின் தண்ணீரைப் பளுங்கிப் பாத்திரத்தில் வைத்து அவளது கண்ணுக்கு சுருமா இடுவதுபோல் போட்டு வந்தேன். அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி அவளுக்குக் கண் வியாதி நீங்கிவிட்டது" என்று அபூஹுரைரா ரலியல்லாஹுதஆலா அன்ஹு கூறி இருக்கிறார்கள்.

"எங்கள் காலத்திலிருந்த ஒரு குருடர் தனது கண்ணுக்குக் காளானின் தண்ணீரை மட்டும் சுருமாவைப் போல் போட்டுவந்ததை நாங்கள் பார்த்திருக்கிறோம். அவருக்கு அது குணமாகி அவருடைய பார்வை மீண்டும் வந்து விட்டது" என்று இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் இதனைப் பற்றி கூறியிருக்கிறார்கள்.

பிறகு, பனீ இஸ்ராயீல்கள் மன் என்ற உணவையே எப்பொழுதும் சாப்பிட்டு வந்ததால் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சென்று "மூஸாவே! எங்களை இந்த மன்னு என்ற உணவின் ருசி கொன்று விட்டது. ஆதலால், எங்களுக்கு இறைச்சி தரும்படி உமது றப்பிடம் நீர் துஆச் செய்ய வேண்டும்" என்று முறையிட்டார்கள். எனவே அல்லாஹு தஆலா பனீ இஸ்ராயீல்களுக்கு **ஸல்வாவை** இறக்கி வைத்தான்.

ஸல்வா என்பது கொழுப்பான ஒரு வகைக் குருவி. இதனை **ஸமானி** என்றுஞ் சொல்வார்கள். இதனைச் சிலர் காடை என்று தமிழில் அர்த்தம் செய்திருக்கிறார்கள். பொன்னந்தட்டான் என்றும் சிலர் அர்த்தஞ் செய்கின்றனர். இந்தப் பறவைகளை தெற்கத்திக்காற்று அடித்துக் கொண்டு வந்து அவர்களிடம் ஒன்று சேர்க்கும். இந்தக் காற்றின் வேகத்தினாலேயே அந்தப் பறவைகளின் குரல்வளைகள் அறுபட்டும் வயிறு பிளந்தும் மயிர் உதிர்ந்தும் போய்விடும். வெய்யிலானாலேயே அவைகள் நன்றாய் வெந்து பொரிந்து விடும். பனீ இஸ்ராயீல்கள் இவற்றை மன்னு என்ற உணவுடன் சேர்த்துப் புசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், வேறு சில விரிவுரையாளர்கள் பின்வருமாறு கூறி இருக்கிறார்கள். பனீ இஸ்ராயீல்கள் **ஸல்வா** என்னும் அந்தப் பறவைகளைப் பிடித்து அறுத்துப் புசித்து வந்தார்கள். ஃபஜ்ரு உதயமான நேரத்திலிருந்து சூரியன் உதயமாகும் வரை பனி இறங்குவது போல் மன்னு என்ற உணவு இறங்கிக் கொண்டிருந்தது. பிறகு ஸல்வா என்னும் பறவை அவர்களிடம் வந்து கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் மறுநாள்வரை தங்களுக்குப் போதுமான அளவிற்கு அவற்றைப் பிடித்து வைத்துக் கொள்வார்கள். ஆனால், ஜும்ஆவுடைய நாளில் மட்டும் இரண்டு நாட்களுக்குப் போதுமான அளவிற்கு வைத்துக் கொள்வார்கள். ஏனெனில் சனிக்கிழமையன்று அவைகள் அவர்களுக்கு இறங்குவதில்லை. அன்றைய தினம் பனீ இஸ்ராயீல் களுக்கு வணக்கத்திற்குரிய நாளாக இருந்தது. அவர்கள் தங்களுக்குப் போதுமான அளவிற்கு மேல் எடுத்துக் கொள்வார்களாயின் அது புழுத்துக் கெட்டுப்போய் விடும்.

அல்லாஹு தஆலா அவர்களுக்கு கட்டளையிட்டிருந்தபடி அவர்கள் தங்களுக்குப் போதுமான அளவிற்கு மட்டும் எடுத்துக் கொள்ளாமல் அதிகமாகவும் சேர்த்துவைக்கத் தொடங்கினர். இதனால் மன்னும் ஸல்வா என்ற இரண்டு வகை உணவும் இறங்குவது நின்றுபோயிற்று. அவர்கள் அப்படிச் செய்யாமல் இருந்திருந்தால் அது அவர்களுக்கு எப்பொழுதும் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

தையிப் என்பது நாற்றமெடுக்காமலும் ஷரீஅத்தின்படி வெறுக்கத்தக்கதாக இல்லாமலுமிருப்பது. பனீ இஸ்ராயீல்கள் தங்களுக்கு இறைவன் அருளால் கிடைத்துக் கொண்டிருந்த அருட்கொடையை அவர்களாகவே கெடுத்துக் கொண்டனர். இதனைக் குறித்துதான் இறைவன் **"நமது கட்டளையின்படி நடக்காமல் அவர்கள் மீறி நடந்ததால் அவர்கள் நமக்கு தீங்கு செய்து விடவில்லை; என்றாலும் அவர்கள் அப்படிச் செய்து கொண்டதால் தங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருந்த அருட்கொடையை இழந்து தாங்களாகவே தங்களுக்குத் தீங்கு செய்து கொண்டார்கள்"** என்று அறிவித்துள்ளான்.

ஆகவே, அல்லாஹு தஆலா நமக்குக் கொடுத்துள்ள பாக்கியத்தைப் போலவே நமது துர்ப்பாக்கிய நிலைமைக்கும் அதுவே காரணமாக இருக்கவும் கூடும். ஆதலின் இறைவன் கூறிய கட்டளைக்கு இம்மியளவும் மாறாமல் நடப்பதே அறிவுடைமை என்றும் தமது மனப்போக்கின்படி நடக்குதல் நமக்குத் தீமை செய்யக் கூடும் என்றும் இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது. ஆகவே, மூமினாக வுள்ள ஒரு ஸாலிக்கானவன் தாத்து, ஸிஃபாத்து (தன்மைகள்) அஃப்ஆல் (செய்கைகள்) ஆகியவற்றில் எந்த நேரத்திலும் தன்னை பனாவாக்கி (இல்லாமலாக்கி) நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அப்படி நடந்துகொண்டால் அவர் ஸித்தீக்குகள், அஹ்லே யக்கீன்கள் (உறுதியுள்ளவர்கள்) கூட்டத்தில் சேர்ந்து விடுவார். அல்லாஹு தஆலா நம் அனைவரையும் அம்மாதிரி நடந்து கொள்ள அருள் புரிவானாகவும் ஆமீன்.

وَاِذْ قُلْنَا ادْخُلُوْا هٰذِهِ الْقَرْيَةَ فَكُلُوْا مِنْهَا حَيْثُ
شِئْتُمْ رَغَدًا وَّادْخُلُوا الْبَابَ سُجَّدًا وَّقُوْلُوْا حِطَّةٌ
نَّغْفِرْ لَكُمْ خَطٰيٰكُمْ ۚ وَسَنَزِيْدُ الْمُحْسِنِيْنَ ﴿٥٨﴾

58. மேலும், நீங்கள் இந்நகருக்குள் நுழைந்து அதில் உங்களுக்கு இஷ்டமான இடத்தில் தாராளமாகப் புசியுங்கள். ஆனால் (அந்நகர) வாயிலில் பணிந்தவர்களாக நுழையுங்கள். இன்னும் "ஹித்தத்தன்" (எங்கள் பாவங்கள் நீங்குக) என்று கூறுங்கள். (இவ்வாறு செய்வீர்களாயின்) நாம் உங்களுக்கு உங்கள் பாவங்களை மன்னிப்போம். இன்னும், (எனக்கு வழிப்பட்டு) நன்மை செய்வோருக்கு (நற்கூலியை) அண்மையில் அதிகப்படுத்தவும் செய்வோம் என்று (நாம்) கூறிய நாளை (நீங்கள் எண்ணிப் பாருங்கள்.)

அல்லாஹு தஆலா பனீ இஸ்ராயீல்களுக்கு அளித்த 8வது அருட்கொடையைப் பற்றி இந்த ஆயத்தில் சொல்லப்படுகிறது.

கர்யத்து என்பது ஜனங்கள் ஒன்று கூடும் இடம். **குரா** என்ற வார்த்தையிலிருந்து இது எடுக்கப்பட்டது. இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிற நகரம் பைத்துல் முகத்தஸ் என்னும் நகரமாகும். (இதனை அல்குதூஸ் என்றும் எருசலேம் என்றும் சொல்வார்கள்).

இந்த ஊரை அல்லாஹு தஆலா அவர்களுக்கு அளிப்பதாக வாக்களித்திருந்தான். இந்த ஊருக்கு 7 தலை வாசல்கள் இருந்தன. இதில் இரண்டாவது தலைவாசலுக்கு **பாபுல் ஹித்தா** என்று இன்னமும் பெயர் இருந்து வருகிறது. இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட நகரம் **'அரீஹா'** என்னும் நகரமாகும். இதில் மூஸா நபி நுழையும் முன் இறந்து விட்டார். மூஸா நபி அவர்களின் பிரதிநிதியான யூஷஉப்னு நூன் என்பவர் தலைமையில்தான் **'அரீஹா'** என்னும் நகரம் வெற்றி கொள்ளப்பட்டது.

இந்தத் தலைவாசலில் நுழையும் போது சுஜூது செய்தவர்களாக அல்லது குனிந்தவர்களாக நுழையும் படியும் **ஹித்தத்துன்** என்று சொல்லும்படியும் இறைவன் கட்டளை யிட்டிருந்தான்.

ஹித்தத்துன் என்பதற்கு "அல்லாஹு தஆலா எங்களுடைய பாவத்தை எங்களை விட்டு அழிப்பதுதான் எங்களது கேள்வி" என்பது பொருளாகும். இங்கு ஒரு வாக்கியத்தின் பயனிலை மட்டும்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

فَبَدَّلَ الَّذِيْنَ ظَلَمُوْا قَوْلًا غَيْرَ الَّذِىْ قِيْلَ لَهُمْ فَاَنْزَلْنَا
عَلَى الَّذِيْنَ ظَلَمُوْا رِجْزًا مِّنَ السَّمَآءِ بِمَا كَانُوْا
يَفْسُقُوْنَ ﴿٥٩﴾

59. ஆனால், அநியாயஞ் செய்தவர்கள், அவர்களுக்குக் கூறப்படாத (வேறு) வார்த்தையாக மாற்றி விட்டனர். அதனால் அந்த அநியாயக்காரர்கள் மீது "அவர்கள் பாவஞ் செய்து கொண்டே இருந்ததனால்" வானத்திலிருந்து வேதனையை (நாம்) இறக்கி வைத்தோம்.

பனீ இஸ்ராயீல்கள் தலைவாசலில் நுழையும் போது **ஹித்தத்துன்** என்று சொல்லும்படி கட்டளையிடப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் **ஹித்தத்துன்** என்று சொல்லாமல், **ஹின்தத்துன்** என்று கூறினார்கள். **ஹின்தத்துன்** என்பதற்கு கோதுமை என்பது பொருள். **ஹித்தத்துன்** என்பதற்கு என்ன கருத்து என்ற விபரம் மேலே 58வது ஆயத்தின் கீழில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், பனீ இஸ்ராயீல்களில் அநியாயம் செய்யாமல் நல்லோர்களாக இருந்தவர் (முஹ்ஸின்)கள் அவ்வார்த்தையை இப்படி மாற்றவில்லை. அவர்கள் தங்களுக்கு எப்படி ஏவப்பட்டிருந்ததோ அப்படியே செய்தார்கள். முன்பு காளை மாட்டின் உருவத்தை வணங்காமலிருந்தவர்களுக்குத்தான் இங்கு முஹ்ஸின்கள் என்று சொல்லப்படுகிறது.

தவிர, அல்லாஹு தஆலா மேலே கூறிய ஆயத்தில் அவர்கள் இரண்டு காரியம் செய்ய வேண்டும் என்று கூறி இருக்கிறான். ஒன்று **சுஜூது** செய்தவர்களாக அதாவது தலை வணங்கியவர்களாக நகருக்குள் நுழைய வேண்டும் என்பது. மற்றொன்று **ஹித்தத்துன்** என்று சொல்ல வேண்டும் என்பது. இந்த இரண்டு காரியங்களையும் பனீ இஸ்ராயீல்களிலுள்ள அநியாயக்காரர்கள் மீறினார்களா? அல்லது ஒரு காரியத்தை மட்டுமா? என்பதில் உலமாக்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கிறது. பனீ இஸ்ராயீல்கள் ஹித்தத்துன் என்று சொல்லும்படி ஏவப்பட்ட கட்டளையை மட்டும்தான் மீறினார்கள் என்பதாக பெரும்பாலோர் கூறுகின்றனர். இரண்டு கட்டளைகளையுமே அவர்கள் மீறினார்கள் என்பதாக மற்றவர்கள் கூறுகிறார்கள்.

சிறு பாவம் பெரும் பாவம் ஆகிய எந்த பாவத்தைச் செய்பவர்களுக்கும் **ளலம** "அநியாயம் செய்தான்" என்று சொல்லப்படும். **ளுல்மு** என்பது சிறு பாவம் பெரும் பாவம் ஆகிய இரண்டிற்குமே பொதுவானது. ஆனால், **ஃபிஸ்கு** என்பது அப்படி இல்லை. பெரும் பாவம் செய்பவர்களுக்கு மட்டுமே **ஃபாஸிக்** என்று சொல்லப்படும். இந்த ஆயத்தில் இரண்டிடத்தில் **ளலமூ** என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது சொல்லப்பட்ட **ளலமூ** என்ற

பதத்திற்கு சிறு பாவம் செய்தவர்கள் என்றும், இரண்டாவது முறை சொல்லப்பட்ட **ளலமூ** என்ற பதத்திற்கு பெரும்பாவம் செய்தவர்கள் என்றும் கருத்துக் கொள்ள வேண்டும் என்பதாக திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறி இருக்கிறார்கள். ஏனெனில், இரண்டாவது சொல்லப்பட்ட **ளலமூ** என்ற பதத்துடன் **யஃப்ஸகூன்** என்ற பதமும் சேர்ந்து வந்திருக்கிறது. ஆதலில் இரண்டாவது சொல்லப்பட்ட **ளலமூ** என்ற பதத்திற்கு பெரும்பாவம் செய்தவர்கள் என்று கருத்து கொள்ள வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். முதலாவது சொல்லப்பட்ட **ளலமூ** என்ற பதத்துடன் பெரும்பாவம் செய்ததைச் சுட்டிக் காட்டக் கூடிய பதம் சேர்க்கப்படாததால் அந்தப் பதத்திற்கு சிறு பாவம் செய்தவர்கள் என்று கருத்துக் கொள்ள வேண்டும் என்பதாகக் காரணமும் கூறி இருக்கிறார்கள்.

ரிஜ்ஸுன் என்பது ஆதியில் மன்னிக்கத்தக்கதாகவும் வெறுக்கத்தக்கதாகவும் உள்ளதற்கு கூறப்பட்டது. இந்த இடத்தில் "வேதனை" என்பது கருத்து. **ரிஜ்ஸுன்** என்ற பதத்திற்கும் இதுவே கருத்தாகும். அல்லாஹு தஆலா பனீ இஸ்ராயீல்களுக்கு அனுப்பிய வேதனை எது என்பதைப் பற்றிக் கவனித்து ரிஜ்ஸின் என்பதற்கு (தாஊன்) பேதி என்று கூறி இருக்கிறார்கள். ஒருமணி நேரத்திற்குள் அவர்களில் 24ஆயிரம் பேர் இந்த வியாதியால் பீடிக்கப்பட்டு இறந்தவர்கள் என்றும், மொத்தம் இந்த வியாதியால் பனீ இஸ்ராயீல்களில் 70 ஆயிரம் பேர் இறந்தார்கள் என்றும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- "பேதி என்பது ஒரு வேதனை (ரிஜ்ஸுன்) இது பனீ இஸ்ராயீல்கள் மீது அல்லது உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது அனுப்பப்பட்டது. ஒரு ஊரில் பேதி என்னும் வியாதி இருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அந்த ஊருக்கு நீங்கள் போக வேண்டாம். ஒரு ஊரில் நீங்கள் இருக்கும் போது அங்கு இந்த வியாதி வந்து விட்டால் அதனை விட்டு நீங்கள் வெளியேறாதீர்கள்" என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

ஹதீஸ்:- "என்னிடம் ஜிப்ரயீல் ஜுரத்தையும், பேதியையும் கொண்டு வந்தார். நான் மதீனாவுக்கு ஜுரத்தை நிறுத்திக் கொண்டு

ஷாம் தேசத்திற்கு பேதியை அனுப்பிவிட்டேன். ஆகவே, பேதியானது எனது உம்மத்துக்கு ஷஹாதத்தாகவும் (இறைவழியில் மரணமடைந்தவராகவும்) ரஹ்மத் என்னும் கருணையாகவும் இருக்கிறது. இன்னும் காஃபிர்களுக்கு (ரிஜ்ஸு என்னும்) வேதனையாகவும் இருக்கிறது'' என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- பேதியால் மரணமடைபவர் ஷஹீதாக (இறைவனின் பாதையில்) இறந்தவராகிறார், கப்ருடைய ஃபித்னாவை விட்டு அச்சந்தீர்ந்தவராகிறார்.

وَإِذِ اسْتَسْقَىٰ مُوسَىٰ لِقَوْمِهِ فَقُلْنَا اضْرِب بِّعَصَاكَ الْحَجَرَ ۖ فَانفَجَرَتْ مِنْهُ اثْنَتَا عَشْرَةَ عَيْنًا ۖ قَدْ عَلِمَ كُلُّ أُنَاسٍ مَّشْرَبَهُمْ ۖ كُلُوا وَاشْرَبُوا مِن رِّزْقِ اللَّهِ وَلَا تَعْثَوْا فِي الْأَرْضِ مُفْسِدِينَ ۝

60. இன்னும், மூஸா (ஃபிர்அவ்னைவிட்டுத் தப்பி தீஹ் என்ற பிரதேசத்தில் தனது வர்க்கத்தினருடனிருந்த காலத்தில்) தனது வர்க்கத்தினருக்காக (க் குடிக்க)த் தண்ணீர் கேட்ட பொழுது ''உம்முடைய தடியினால் கல்லில் அடியுமென்று கூறினோம்''. (அவர் அடிக்கவே) அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுகள் ஒலித்தோடின. (இஸ்ரவேலரின் பன்னிரண்டு பிரிவு) மனிதர்கள் யாவரும் தாங்கள் (தண்ணீர்) அருந்துந் துறையை (குடிக்குமிடத்தை) நிச்சயமாக அறிந்து கொண்டனர். (எனவே உணவிற்காகவும் தாகத்திற்காகவும்) உங்களுக்கு அல்லாஹ் அளித்ததிலிருந்து புசித்துப் பருகுங்கள். ஆனால் பூமியில் விஷமிகளாக அலையாதீர்கள்.

பனீ இஸ்ராயீல்களுக்கு அல்லாஹுதஆலா செய்த மற்றொரு அருட்கொடை இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பனீ இஸ்ராயீல்கள் வனாந்தரத்தில் இருந்து கொண்டிருந்த சமயம்

அவர்களுக்குச் சகிக்க முடியாத தாகம் ஏற்பட்டது. ஆகவே, அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் முறையிட்டுக் கொண்டார்கள். எனவே ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவிடம் துஆச் செய்தார்கள். அதற்கு இறைவன் இந்த ஆயத்தில் கூறப்பட்ட விதமாகச் செய்யும்படி கட்டளையிட்டான்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வைத்திருந்த (அஸா என்னும்) கைத்தடி சுவர்க்கத்திலுள்ள ஆசனி மரத்துத் தடியாகும். அந்த (அஸா) கைத்தடி 10 முழம் உயரமிருந்தது. அதாவது ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது உயரத்திற்குச் சரியாக இருந்தது. ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவர்க்கத்தில் இருந்து வந்தபோது அதைக் கொண்டு வந்தார்கள். ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின் வந்த நபிமார்களிடம் அது இருந்து வந்தது. கடைசியாக ஹளரத் ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடமிருந்தது ஹளரத் ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கிலாஃபத் கொடுத்தபோது இந்த கைத்தடியையும் கொடுத்தார்கள். இந்த கைத்தடியை இருளில் வெளியில் எடுத்துக் கொண்டு வந்தால் இதிலிருந்து இரண்டு கிரணங்கள் தோன்றிப் பிரகாசிக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தண்ணீர் தேவையிருந்தால் அந்த கைத்தடியைக் கொண்டு கல்லில் அடிப்பார்கள். தண்ணீர் அதிலிருந்து ஒலித்தோடும். பிறகு அவர்களுக்குத் தண்ணீர் போதுமென்றால் மீண்டும் அந்த கைத்தடியைக் கொண்டு அக்கல்லில் அடிப்பார்கள். தண்ணீர் நின்றுபோகும் என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

قَدْ عَلِمَ كُلُّ أُنَاسٍ مَّشْرَبَهُمْ ''மனிதர்கள் யாவரும் தாங்கள் தண்ணீர் அருந்துந் துறையை (குடிக்குமிடத்தை) அறிந்து கொண்டார்கள்'' என்பதற்கு ஹளரத் யாகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 12 புதல்வர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு புதல்வருக்கும் சந்ததியுண்டாகி தனித்தனிக் கூட்டத்தாராக இருந்தார்கள். இதனால் பனீ இஸ்ராயீல்கள்

12 கூட்டத்தாராக ஏற்பட்டனர். இப்பின்னிரண்டு கூட்டத்தாருக்காகவே 12 ஊற்றுக்கண்கள் உண்டாயின. ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்களுக்கென ஒரு ஊற்றுக் கண்ணைத் தெரிந்தெடுத்துக் கொண்டு, தங்கள் மிருகங்களுக்குத் தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்தனர். இந்தப் பன்னிரண்டு கூட்டத்தார்களும் மொத்தத்தில் 6 லட்சம் பேர் 12 மைல் தூரம் வரை இவர்கள் பரவி இருந்தார்கள்.

கைத்தடியைக் கொண்டு கடலின் மீது அடிக்காமலே கடலைப் பிளக்கும்படி செய்யவும், கைத்தடியைக் கொண்டு கல்லின் மீது அடிக்காமலே கல்லிலிருந்து நீர் ஒலித்தோடும்படி செய்யவும் அல்லாஹு தஆலாவுக்கு முடியும். அவன் சர்வ வல்லமையுள்ளவன். ஆனால் அவன் அப்படிச் செய்யாமல் ஹளரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மூலமாக இப்படிச் செய்தது காரணங்களையும் காரணங்களினால் ஏற்படும் காரியங்களையும் இணைக்கவே அவன் இப்படிச் செய்தான். இதில் அவன் பல நன்மைகளை ஏற்படுத்தி இருக்கிறான். அடியார்கள் தங்கள் நாட்டங்களை அடைவதற்கு ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதை கற்றுக் கொடுப்பது அவனது நாட்டமாக இருந்தது. இன்னும் இவ்வாறான காரணங்களால் அடியார்கள் மீது மறு உலகில் நன்மையை அல்லது தீமையை ஏற்படுத்த வேண்டியதுமிருக்கிறது. எனவே, இதுபோன்ற முஃஜிஸாக்களை மறுப்பவர்கள் அல்லாஹு தஆலாவின் ஹிக்மத்தைக் கொஞ்சமும் அறியாதவர்களே யாவார்கள். இன்னும் இப்படி மறுப்பது அல்லாஹு தஆலாவின் செய்கையிலுள்ள அற்புதங்களை அவர்கள் பகுத்தறியாத குறையினாலுமே யாகும்.

நிற்க, கல்லிலிருந்து தண்ணீர் ஒலித்தோடுவது இயற்கையாகும். இதனை பலர் பார்த்தும் இருக்கிறார்கள். ஆனால் சதையிலிருந்தும் ரத்தத்திலிருந்தும் தண்ணீர் ஒலித்தோடுவதை ஒருவரும் பார்த்திருக்க மாட்டார்கள். அப்படி ஒலித்தோடுவது நூதனமான காரியமும் ஆகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது கை விரலிலிருந்து தண்ணீர் ஒலித்தோடும்படி செய்திருக்கிறார்கள். ஆதலால், இது பெரிய முஃஜிஸாவாகும் என்று இமாம்கள் சொல்லி இருக்கிறார்கள்.

كُلُوْا وَاشْرَبُوْا مِنْ رِّزْقِ اللّٰهِ **அல்லாஹு தஆலா அளித்ததில் இருந்து நீங்கள் புசியுங்கள்; இன்னும் குடியுங்கள்** என்று இறைவன் கூறி இருப்பதிலிருந்து அல்லாஹு தஆலாவே நேரில் அவர்களுக்கு இந்தக் கட்டளையை அனுப்பாமல் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலமாக இக்கட்டளையை ஏவி இருக்கிறான் என்பதாக அறிவிக்கிறது.

وَلَا تَعْثَوْا **தஃதவ்** என்பது **அதா** என்ற பதத்திலிருந்து பிறந்திருக்கிறது. **அதா** என்பது கடுமையாக விஷமம் செய்தான் என்பது கருத்து. தவிரவும், வரம்பு மீறுவதற்கும் **அல்அதா** என்று சொல்லப் படுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்தின் மேன்மை இந்த ஆயத்திலிருந்து நன்கு தெரியவருகிறது. பனீ இஸ்ராயீல்களுக்கு தண்ணீர் தேவையானவுடன் அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இதனைக் குறித்துக் கேட்கச் சென்றார்கள். இன்னும், அவர்களுக்கு கீரை, வெங்காயம், முதலிய உணவுப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் தேவைப்பட்டு அவர்கள் அதனையே கேட்கும்படி செய்தார்கள். ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்து களுக்கு தேவைப்பட்ட அனைத்தையும் கேட்க அல்லாஹு தஆலாவே வலிய அனுமதி கொடுத்திருந்தான். **இன்னும் அல்லாஹ் விடத்தில் அவனுடைய கிருபையிலிருந்து நீங்கள் கேளுங்கள்** (சூரத்துன்னிஸா 32) என்றும், **என்னிடத்தில் நீங்கள் கேளுங்கள் உங்களுடைய தேவையை நிறைவேற்றுவதன் மூலம் உங்களுக்கு நான் பதில் கூறுகிறேன்** (சூரத்துல்முஃமின் 60) என்றும் அல்லாஹு தஆலா தெரிவித்திருக்கிறான். இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகளுக்கு மிகப் பெரிய நன்மாராயமாகும்.

தவிரவும், ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களுடைய உம்மத்துகளின் வேண்டுகோளின்படி தங்கள் உம்மத்துகளுக்காக இறைவனிடம் தண்ணீரைக் கேட்டார்கள். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் உம்மத்துகளின் வேண்டுகோளின்படி இறைவனிடம் மாயிதாவை இறக்கும்படி துஆச்

செய்தார்கள். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி நமக்கு (முகுபிரத் என்னும்) பிழை பொறுக்குதலை இறைவனிடம் கேட்டார்கள். **"நபியே! உம்முடைய பாவத்திற்காகவும் மூமின்களுக்காகவும் நீர் பிழைபொறுக்கத் தேடும்"** (சூரத்து முஹம்மது 19) என்று அல்லாஹு தஆலா கூறி இருக்கிறான்.

ஆரிஃபீன்கள் இந்த ஆயத்திலிருந்து அநேகம் சமிக்ஞைகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அறிந்துகொள், கல்பு (இருதயம்) என்ற ஆலத்தில் (உலகில்) மனித ஆத்மாவும் (ரூஹே இன்ஸானியும்) அதனுடைய ஸிஃபாத்துகளென்னும் தன்மைகளும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடையவும் அவருடைய கூட்டத்தாருடையவும் அந்தஸ்திலிருந்து கொண்டிருக்கின்றன. ஹிக்மத் மஅரிஃபத் (விவேகம் ஞானம்) என்பதிலிருந்து தங்களுக்குக் குடிப்பிக்க வேண்டும் என்று ரூஹே இன்ஸானி கேட்கிறது. ஆகவே, **லா இலாஹ இல்லல்லாஹு** என்ற அஸாவினால் அடிக்கும்படி அந்த ரூஹே இன்ஸானி ஏவப்படுகிறது. **லா இலாஹ இல்லல்லாஹு** என்ற அந்த அஸாவுக்கு இரண்டு பிரகாசங்கள் இருக்கின்றன. அவைதான் நபியும், இதுபாத்தும். அதாவது தெய்வம் இல்லை என்பதும், அல்லாஹு ஒருவன்தான் உண்டு என்பதுமாகும். நஃப்ஸுடைய ஸிஃபத்துகள் கல்புக்கு இருளை கொடுக்கும்போது இந்தப் பிரகாசங்களிலிருந்து வெளிச்சம் கொடுக்கப்படுகிறது. தவிரவும் **லாஇலாஹ இல்லல்லாஹு** என்ற இந்த அஸா அல்லாஹு **கண்ணியம்** என்ற சுவர்க்கத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கிறது. கல்பு என்ற கல்லின் மீது இந்த கைத்தடியைக் கொண்டு அடிக்கப்படுகிறது. ஆகவே, அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுக் கண்கள் உண்டாகி ஹிக்மத் என்ற தண்ணீர் ஒலித்தோடுகிறது. லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவுக்கு 12 அட்சரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு அட்சரமும் ஒரு ஊற்றுக் கண்ணாக இருக்கிறது. பனீ இஸ்ராயீல்களில் 12 கூட்டத்தார் இருப்பது போல மனிதனுடைய தன்மைகளும் 12 வகைகளாக இருக்கின்றன. அதாவது வெளிரங்கமான அறிவுகள் ஐந்து, உள் ரங்கமான அறிவுகள் ஐந்து, நஃப்ஸு, கல்பு, 2 ஆக 12 வகை லட்சணங்கள் இருக்கின்றன.

இந்தப் பன்னிரண்டு வகைத் தன்மைகளுக்கும் அந்தக் கலிமாவுடைய பன்னிரண்டு அட்சரங்களான குடிக்கும் தலங்களிலிருந்து கொண்டிருக்கின்றன.

அல்லாஹு தஆலாவின் ஏவலை விடுவது கொண்டும், பாவத்தைச் செய்வது கொண்டும், இந்த உலகுக்காக மார்க்கத்தை விற்பது கொண்டும் இம்மையைப் பெரிதென மதித்து மறுமையை அலட்சியம் செய்வது கொண்டும், பூமியில் அக்கிரமம் செய்யாதீர்கள் என்பதாக இந்த ஆயத்தில் பல சமிக்ஞைகள் இருப்பதாக **தாவீலாத்துன் நஜமிய்யா** என்ற கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது.

وَاِذْ قُلْتُمْ يٰمُوْسٰى لَنْ نَّصْبِرَ عَلٰى طَعَامٍ وَّاحِدٍ فَادْعُ
لَنَا رَبَّكَ يُخْرِجْ لَنَا مِمَّا تُنْۢبِتُ الْاَرْضُ مِنْۢ بَقْلِهَا
وَقِثَّآئِهَا وَفُوْمِهَا وَعَدَسِهَا وَبَصَلِهَا ۗ قَالَ اَتَسْتَبْدِلُوْنَ
الَّذِىْ هُوَ اَدْنٰى بِالَّذِىْ هُوَ خَيْرٌ ۗ اِهْبِطُوْا مِصْرًا فَاِنَّ
لَكُمْ مَّا سَاَلْتُمْ ۗ وَضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ وَالْمَسْكَنَةُ
وَبَآءُوْ بِغَضَبٍ مِّنَ اللّٰهِ ۗ ذٰلِكَ بِاَنَّهُمْ كَانُوْا يَكْفُرُوْنَ
بِاٰيٰتِ اللّٰهِ وَيَقْتُلُوْنَ النَّبِيّٖنَ بِغَيْرِ الْحَقِّ ۗ ذٰلِكَ بِمَا
عَصَوْا وَّكَانُوْا يَعْتَدُوْنَ ۝

61. ஆனால், நீங்கள் (அவரை நோக்கி) "மூஸாவே ஒரே (விதமான) உணவி(னைச் சாப்பிடுவதின் மீது நாங்கள் பொறுமையுடனிருக்க முடியாது. ஆதலால் உம்முடைய 'ரப்' பிடத்தில் பூமி முளைப்பிக்கின்ற கீரை, வெள்ளரிக்காய், கோதுமை, பருப்பு, வெங்காயம் (முதலியவை)களை எங்களுக்காக வெளிப்படுத்தும்படி நீர் கேளும்;" என்று நீங்கள் கூறிய நாளை (எண்ணிப் பாருங்கள்.

அதற்கு அவர்) மேலான ஒன்றுக்குப் பதிலாகக் கீழான ஒன்றை மாற்றுகிறீர்களா? என்று கேட்டார். (அதன் பின்பும் அவர்கள் ஒரேவிதமான உணவை உட்கொள்ள முடியாதெனக் கூறியதால் மூஸா நபி இறைவனிடம் பிரார்த்தனை புரிந்தார். அதற்கிறைவன்) நீங்கள் (ஏதேனுமொரு) நகருக்குச் செல்லுங்கள் (அங்கு) நீங்கள் கேட்டது உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் (என்று மூஸா நபி அவர்களுக்குக் கூறினான்) மேலும் அவர்களுக்கு இழிவும் வறுமையும் விதிக்கப்பட்டுவிட்டன; இன்னும் அல்லாஹ்வின் கோபத்திற்கும் ஆளாகி விட்டனர். இதுவாகிறது, அவர்கள் அல்லாஹ்வின் (வேத) வசனங்களை நிச்சயமாக மறுத்துக் கொண்டிருந்ததனாலும், நியாயமின்றி நபிமார்களைக் கொலை செய்ததனாலுமேயாகும். (இன்னும்) இது, அவர்கள் பாவஞ் செய்ததனாலும் (கட்டளைகளை) மீறிக் கொண்டிருந்த தனாலுமேயாகும்.

அல்லாஹு தஆலா அளித்த அருட்கொடைகளுக்கு பனீ இஸ்ராயீல்கள் நன்றி செலுத்தாமல், அவனுக்கு நன்றி கெட்ட தன்மையாக நடந்து கொண்டதைப்பற்றி இந்த ஆயத்தில் அவன் சொல்லிக் காண்பித்திருக்கிறான்.

நன்றி கெட்ட தன்மையுடன் நடந்து கொண்டது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் மதீனாவிலிருந்த யூதர்களின் மூதாதையரேயாகும். ஆயினும், அவர்களுக்கும் அவர்களுடைய மூதாதையருக்கும் ஒன்று போலுள்ள தன்மை இருந்தபடியால் அவர்களை அவர்களின் மூதாதையரின் ஸ்தானத்தில் வைத்து அவர்களை முன்னோக்கி கூறி இருக்கிறான்.

பனீ இஸ்ராயீல்கள் தீஹில் இருந்து கொண்டு மன்னு, ஸல்வா என்ற உணவை அருந்திக் கொண்டிருந்த காலத்தின்தான் அவர்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இம்மாதிரி கூறினார்கள். தவிரவும், பனீ இஸ்ராயீல்கள் ஒரே உணவை மட்டும் சாப்பிட்டுக் கொண்டிருக்கவில்லை. மன்னு, ஸல்வா ஆகிய இரண்டு விதமான உணவைத்தான் அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

எனினும், அவர்கள் **ஒரே உணவின் மீது நாங்கள் பொறுமையாக இருக்கமாட்டோம்** என்று கூறியதானது **ஒரேவிதமான உணவின் மீது நாங்கள் பொறுமையாக இருக்க மாட்டோம்** என்று சொன்னார்கள் என்பதாகவே கருத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவர்கள் மன்னு ஸல்வா, ஆகிய இரண்டு வகை உணவைத் தவிர வேறு விதமான உணவைச் சாப்பிடவில்லை. இவ்விரண்டு வகை உணவுகளும் மாற்றப்படாமல் தினந்தோறும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தன. ஒரு மனிதருடைய உணவில் பல வகைப் பதார்த்தங்கள் இருந்தபோதினும், அந்தப் பல வகைப் பதார்த்தங்கள் வேளைக்கொன்றாக மாற்றப்படாமல் தினந்தோறும் அவைகள் எல்லாவற்றையுமே அவர் அருந்திக் கொண்டு வருவாராயின் அவர் ஒரே உணவைத் தவிர வேறு எதையும் உண்ண மாட்டார் என்று கூறுவது வழக்கம்.

தவிரவும், அவர்கள் மன்னு ஸல்வா ஆகிய இரண்டையும் ஏக காலத்தில் உண்ணாமல் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை அதாவது ஒரு வேளை மன்னு என்ற உணவையும் ஒருவேளை ஸல்வா என்ற உணவையும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஆகவே, அவர்கள் இரண்டு விதமான உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் உண்மையில் அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தது ஒரு உணவுதான். ஆகவே, அவர்கள் ஒரு உணவு என்று கூறியது தினந்தோறும் மாற்றப்படாமல் ஒரேவிதமான உணவு என்பதாகக் கொள்ள வேண்டும்.

مِمَّا تُنْۢبِتُ الْاَرْضُ **"பூமி முளைப்பிக்கின்றவற்றிலிருந்து"** என்று கூறப்பட்டு இருப்பதில் "பூமியிலிருந்து உற்பத்தியானவைகள்" என்று கொள்ள வேண்டும். ஏனெனில் சகலத்தையும் உற்பத்தி செய்து, காப்பாற்றுபவன் அல்லாஹு தஆலா ஒருவனேயாகும். பூமியிலிருந்து உண்டாகும் புற்பூண்டுகள், மரம் செடிகள் முதலிய சகலத்தையும் முளைக்கும் படி செய்வதும் அந்த ஏக வல்லோன் ஒருவனேயாவன். ஆயினும், மரம் செடிகள் பூமியிலிருந்து முளைப்பதால் அவற்றை பூமி முளைப்பிக்கின்றவைகள் என்று சொல்வது அறபிகளின் வழக்கத்தில் இருந்து வருகிறது. இந்தக் கருத்தின்படிதான் இந்த இடத்தில் **"பூமி முளைப்பிக்கின்றவற்றிலிருந்து"** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

مِنْ بَقْلِهَا **மின் பக்லிஹா** என்ற வாக்கியத்திலுள்ள **மின்** என்பது தமிழ் இலக்கணத்திலுள்ள ஏழாம் வேற்றுமையின் உருப்புகளின் கருத்தில் அறபிப் பாஷையில் உபயோகிக்கப்படுகிறது. ஆயினும், முன்னர் கூறப்பட்ட ஒன்றை பின்னர் விபரித்துக் கூறுமிடத்திலும் **மின்** என்ற எழுத்தை அறபியர்கள் உபயோகிப்பதுண்டு. ஆகவே, இந்த இடத்தில் பூமி முளைப்பிக்கின்றவை என்று பொதுவாகக் கூறப்பட்டிருப்பதை விபரித்துக் கூறுவதற்காக இந்த எழுத்து உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்று கொள்ள வேண்டும்.

ஃபூம் என்பது கோதுமை, வெள்ளைப்பூண்டு என்பதாகவும் ஒரு அர்த்தமுண்டு.

آيَاتِ اللّٰهِ **அல்லாஹ்வின் ஆயத்துகள்** என்றது ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களால் வெளியான முஃஜிஸாத்துகள் என்றுங் கருத்துக் கொள்ளலாம். திருக்குர்ஆனையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் யூதர்கள் பொய்ப்பித்து தவ்ராத் வேதத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப்பற்றி வந்துள்ள வசனங்களையும் மறுத்திருக் கிறார்கள். இன்னும் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் இன்ஜீல் வேதத்தையும் மறுத்திருக்கிறார்கள். ஆதலின், ஆயாத் என்ற பதத்திற்கு இந்த இடத்தில் வேத வசனங்கள் என்றும் கருத்துக் கொள்ளலாம்.

وَيَقْتُلُونَ النَّبِيِّينَ நபிமார்களை அநியாயமாக அவர்கள் கொன்றார்கள் என்பது ஹளரத் ஷுஐப், ஜக்கரியா, யஹ்யா அலைஹிஸ் ஸலாம் முதலிய நபிமார்களை யூதர்கள் கொன்றதைக் குறித்துச் சொல்லப்பட்டது.

மூமினானவர்களில் அல்லாஹு தஆலாவின் சன்மார்க்கத் திற்காக கொல்லப்படுபவர்களுக்கு மறு உலகில் விசேஷமான சங்கையும் அந்தஸ்து மிருப்பதுபோல நபிமார்களில் இவ்வண்ணம் உயிர்த்தியாகஞ் செய்தவர்களுக்கு அல்லாஹு தஆலா சங்கையை ஏற்படுத்தி இருக்கிறான். தவிரவும், அப்படி உயிர்த்தியாகஞ் செய்த நபிமார்களை அல்லாஹு தஆலா காப்பாற்ற முடியாமல் கைவிட்டு

விட்டான் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. ஏனெனில், அந்த நபிமார்கள் தங்களது சத்தியப் பிரசாரத்திலிருந்து கடைசிவரை பின்வாங்காமல் இருந்தனர் என்பதையும், சத்தியத்தை நிலைநிறுத்தும் விஷயத்தில் அவர்களுக்கு அல்லாஹு தஆலா மனத்தளர்ச்சி யுண்டாகா வண்ணம் அவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு உதவி புரிந்தான் என்பதையுமே அவர்கள் உயிர்த்தியாகஞ் செய்த சம்பவம் அறிவிக்கிறது. இவ்விதமான கருத்தைத்தான் ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா, ஹஸன் ரலியல்லாஹுதஆலா அன்ஹு ஆகியவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். ஒரே நாளில் அவர்கள் 70 நபிமார்களைக் கொலை செய்திருப்பதாகவும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ذٰلِكَ بِمَا عَصَوا وَّكَانُوا يَعْتَدُونَ **இது அவர்கள் பாவஞ் செய்ததனாலும் (கட்டளைகளை) மீறிக் கொண்டிருந்த தனாலுமேயாகும்** என்பதற்கு அந்த யூதர்கள் அல்லாஹு தஆலாவால் அளிக்கப்பட்டிருந்த பெரும் பெரும் முஃஜிஸாத்துகளை மறுத்துக் கொண்டும், நபிமார்களைக் கொலை செய்து கொண்டும், பெரும்பாவங்களை கூசாமல் செய்து கொண்டும் இருந்ததற்குக் காரணம் அவர்கள் எனது கட்டளையை மீறி எனது விலக்கல்களையும், நான் ஹராமாக்கி வைத்தவைகளையும் செய்து கொண்டிருந்தார்கள் என்று கூறப்பட்டது. அல்லாஹு தஆலாவுக்கு மாறு செய்து கொண்டும், அதனையே திரும்பச் செய்து கொண்டும் இருந்ததுதான் பெரும்பாவங் களையும் பாதகங்களையும் செய்யும்படி அவர்களைத் தூண்டிவிட்டது. இலேசான வணக்கங்களையும் சிறுசிறு நல்ல காரியங்களையும் வழக்கமாகச் செய்வது பெரிய இபாதத்து களையும் நல்ல காரியங்களையும் செய்யும்படி தூண்டி விடுவது போல சிறு பாவங்களை வழக்கமாகச் செய்வது பெரும்பாவங்களையும் பாதகங்களையும் செய்யும்படி தூண்டி விடுகிறது என்ற விஷயம் இந்த ஆயத்திலிருந்து தெரியவருகிறது. இன்னும் அல்லாஹு தஆலாவின் ஞாபகத்தை மறந்துவிடுவதன் மூலம் இருதயத்துக்கு ஏற்படுகிற வியாதி ஈமானுடைய இன்பங்களையும் ருசிகளையும் பெற்றுக் கொள்வதை விட்டு அவர்களை விலக்கி விடுகிறது.

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَادُوا وَالنَّصَارَىٰ
وَالصَّابِئِينَ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَعَمِلَ
صَالِحًا فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ
عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ۝

62. நிச்சயமாக (நாவினால் மட்டும்) விசுவாசங் கொண்டவர்களும், யூதர்களாகி விட்டார்களே அவர்களும், கிறிஸ்தவர்களும் ஸாபியீன்களும் (இவர்களில்) எவர் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றி) அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்து நன்மையைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு அவர்களின் கூலி அவர்களின் ரப்பிடமிருக்கிறது. மேலும், (மறுமையில்) அவர்களுக்கு (எவ்வித) பயமும் கிடையாது; அவர்கள் கவலைப்படவுமாட்டார்கள்.

إِنَّ الَّذِينَ آمَنُوا **நிச்சயமாக (வாயினால் மட்டும்) ஈமான் கொண்டவர்களும்** என்பதற்கு முனாஃபிக்குகளைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிது. முனாஃபிக்குகள் தாங்கள் ஈமான் கொண்டிருப்பதாக நாவினால் மட்டும் கூறிவிட்டு நிராகரிப்பாளர்களுடன் இரகசியமாக உறவாடி இஸ்லாத்திற்கு விரோதமாக சதியாலோசனை செய்தவர்கள். இவர்களை **முனாஃபிக்குகள்** என்று கூறாமல் **ஈமான் கொண்டவர்கள்** என்று கூறியது அவர்கள் தற்போதிருந்து வரும் நயவஞ்சகமான நிலைமையை **ஈமான்** என்று அவர்கள் வாயினால் சொல்லிக் கொண்டாலும் அது அவர்களுக்குப் பிரயோஜனத்தைக் கொடுக்கவும் மாட்டாது. குஃப்ரு என்ற அழுக்கை விட்டு அவர்களைச் சுத்தப்படுத்தவும் மாட்டாது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கேயாகும்.

وَالَّذِينَ هَادُوا **இன்னும் யூதர்களாகி விட்டார்களே அவர்கள்** என்ற வார்த்தை யூதர்களின் மதத்தில் சேர்ந்திருப்பவர்

களைக் குறிக்கும் **யஹூத்** என்ற வார்த்தையை அறபி வார்த்தை அதாவது **ஹாத** என்ற அறபி வார்த்தையிலிருந்து உற்பத்தியானது என்றும் கூறலாம். இவர்கள் காளைமாட்டின் உருவத்தை வணங்குவதை விட்டுத் தவ்பாச் செய்து நேர்வழியில் திரும்பியதால் இவர்கள் **யஹூது** நேர்வழி பெற்றவர்கள் என்ற அர்த்தத்தில் இவர்களுக்குச் சொல்லப்படுகிறது. உருவ வணக்கத்தை விட்டு தவ்பாச் செய்தவர்கள் எத்தனையோ விதமானவர்களிருக்க இவர்களுக்கு மட்டும் இந்தப் பெயர் வந்தது இவர்களுடைய "தவ்பா" மிகப் பயங்கரமானதாக இருந்தது என்பதனாலேயாகும்.

இந்தப் பதம் பிறமொழியிலிருந்து அறபிப் பாஷைக்குக் கொண்டு வரப்பட்டது. **முஅர்றப்** என்றும் கொள்ளலாம். ஹளரத் யாகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மூத்த புதல்வருடைய பெயர் **யஹூதா** என்பதாகும். இந்தப் பெயரைக் கொண்டு அந்த மதத்தார்களுக்குப் பெயர் வைக்கப்பட்டது என்றும் கொள்ளலாம். ஒரு நபியோ அல்லது ஒரு ரசூலோ அவர்களிடம் வந்தால் அவர்கள் தங்கள் தேசத்திற்கு அவர்களை அழைத்துக் கொண்டு போய் அவர்களைக் கொலை செய்து விடுவார்கள். இதனைக் கவனித்து அவர்களுக்கு இந்தப் பெயர் வந்தது என்றும் கொள்ளலாம்.

நஸாராக்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு ஈமான் கொண்டவர்களைக் குறிக்கும். இது நஸ்ரான் என்ற வார்த்தைக்குப் பன்மைச் சொல்லாகும். இவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு உதவி செய்தார்கள். ஆதலால், இவர்களுக்குப் பெயர் வந்தது அல்லது இவர்கள் நாஸிரத்து என்னும் ஊரில் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் இருந்தனர். ஆதலால், இந்தப் பெயர் வந்தது. (நாஸிரத்து என்ற வார்த்தையை நமது தமிழ் நாட்டிலுள்ள கிறிஸ்துவர்கள் நாஸரேத்து என்று கூறுகிறார்கள்).

ஸாபியீன என்பது **ஸபஉன்** என்பதிலிருந்து பிறந்தது. மார்க்கத்தை விட்டு ஒருவன் வெளியேறி விட்டான் என்று கூறுவார்கள். இவர்கள் யூதமதம் கிறிஸ்து மதத்திலிருந்து வெளியேறிய ஒரு

கூட்டத்தார்கள். இவர்கள் நட்சத்திரங்களையும், மலக்குகளையும் வணங்கிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் ஜபூர் வேதத்தை ஓதிக் கொண்டிருந்தார்கள். ஆயினும், இவர்களால் அறுக்கப்பட்ட பிராணிகளைச் சாப்பிடவும் கூடாது. இவர்களிலுள்ள பெண்களை திருமணம் செய்யவும் கூடாது. இவர்கள் விக்கிரக தொழும்பர்களைப் போன்றவர்களேயாவர்.

ஸாலிஹன் என்பதற்கு நன்மையான காரியம் அதாவது அல்லாஹு தஆலாவுக்குப் பொருத்தமான கிரியை என்பது கருத்து.

எவர்கள் விசுவாசித்து (ஈமான் கொண்டு) அல்லாஹு தஆலாவுக்குப் பொருத்தமான கிரியைகளைச் செய்கிறார்களோ அவர்கள் அதற்கு முன் செய்த பாவமான கிரியைகளுக்காகவோ அல்லது அவர்களுடைய மூதாதையர்கள் செய்த கிரியைகளுக் காகவோ குற்றம் பிடிக்கப்பட மாட்டார்கள் என்பதும், இவர்கள் ஈமான் கொண்டு, அல்லாஹு தஆலாவுக்குப் பொருத்தமான காரியங்களைச் செய்ததற்காக இவர்களுக்குக் கிடைக்கவேண்டிய மறுமைப்பயன்கள் குறைக்கப்பட மாட்டாது என்பதும் இந்த ஆயத்தில் விளக்கப் பட்டிருக்கின்றன.

مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ **அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசித்து** என்ற வாக்கியத்திலிருந்து இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவ வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. முஸ்லிம்கள் ஈமான் கொள்ள வேண்டிய முக்கிய ஷர்த்துகளில் முதலாவது அல்லாஹு தஆலாவைக் கொண்டு ஈமான் கொள்வதும், கடைசியானது மறுமை நாளைக் கொண்டு ஈமான் கொள்வதுமாகும். இதுதவிர மலக்குகளையும், நபிமார்களையும் வேதங்களையும் கொண்டு ஈமான் கொள்தல் முதலிய காரியங்கள் இவ்விரண்டிற்கும் மத்தியில் இருப்பதால் முதலாவதையும் கடைசி யையும் கூறிவிடுவதால் மட்டுமே ஈமானிலுள்ள மற்றைய எல்லா ருக்னுகளையும் ஈமான் கொள்ள வேண்டும் என்பது தானாக வந்து விடுகிறது.

தவிர, அல்லாஹு தஆலாவை விசுவாசங் கொள்தல் என்ற வார்த்தைகளுக்குள்ளாகவே மலக்குகள், வேதங்கள், நபிமார்கள்

ஆகியவர்களைக் கொண்டு விசுவாசங் கொள்வதும் வந்து விடுகிறது. நபிமார்கள், மலக்குகள், வேதங்கள் ஆகியவற்றை விசுவாசிக்காமல் அல்லாஹு தஆலாவை மட்டும் என்று ஒருவர் கூறுவாராயின் அவர் கூறுவதற்கு அர்த்தமே இல்லை. ஏனெனில் அல்லாஹு தஆலாவை விசுவாசிப்பதற்குள்ள முழு அம்சங்களும் மற்றவைகளையும் விசுவாசம் கொண்டால்தான் நிறைவேறும். மற்றவைகளைக் கொண்டு விசுவாசங் கொள்ளாமல் அல்லாஹ்வை மட்டும் விசுவாசங் கொள்வது என்பது முழு அம்சத்துடனும் அல்லாஹ்வை விசுவாசித்ததாக இல்லை.

இதுபோல், இறுதி நாளையும் விசுவாசித்தவர்கள் என்ற விஷயத்திற்குள் இறந்தவர்கள் கேள்வி கணக்குக் கேட்கப்படுவதற்காக எழுப்பப்படுதல், மஹ்ஷர் மைதானத்தில் நிற்குதல், சுவர்க்க நரகம் புகுதல் முதலியவைகளெல்லாம் அடங்கி இருக்கின்றன. ஆகவே, அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசித்தல் என்ற இரண்டு விஷயங்களுக்குள் ஈமானிலுள்ள மற்ற எல்லா ருக்னுகளும் அடங்கி இருக்கின்றன.

وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَكُمْ وَرَفَعْنَا فَوْقَكُمُ الطُّوْرَؕ خُذُوْا مَآ اٰتَيْنٰكُمْ بِقُوَّةٍ وَّاذْكُرُوْا مَا فِيْهِ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ۝

63. இன்னும், உங்களிடத்தில் நாம் வாக்குறுதி வாங்கி, உங்களுக்கு மேலில் "தூரை" உயர்த்திய வேளையை (எண்ணிப் பாருங்கள்) உங்களுக்கு நாம் கொடுத்ததை பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; இன்னும் நீங்கள் பயபக்தியுள்ளவர்களாவதற்காக அதிலுள்ளதை ஞாபகம் செய்து கொள்ளுங்கள் (என்றுங் கூறினோம்).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த யூதர்களின் முன்னோர்களிடம் இறைவன் வாக்குறுதி வாங்கிய விபரத்தை இந்த ஆயத்தில் சுட்டிக்காட்டி இருக்கிறான். இது பனீ இஸ்ராயீல்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் எகிப்தை விட்டு வெளியேறிக் கடல் கடந்து ஃபிர்அவ்ன் கடலில் மூழ்கி

மாண்ட பின்னர், அவர்கள் தீஹ் என்ற வனாந்தரத்திற்கு வருவதற்கு முன் நடைபெற்ற சம்பவமாகும்.

சுர்யானிப் பாஷையில் "**தூர்**" என்பதற்கு மலை என்று அர்த்தம். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூர்ஸீனாவிற்கு (சீனாய் மலைக்கு)ச் சென்று இறைவனிடமிருந்து தவ்ராத் வேதம் எழுதப்பட்ட லௌஹு (பலகை)களைக் கொண்டு வந்தபோது, அதில் சொல்லப்பட்ட கட்டளைகள் மிகவும் கஷ்டமான வைகளாக இருக்கின்றன என்று பனீ இஸ்ராயீல்கள் கருதி அதனை ஒப்புக் கொள்ள மறுத்தனர். அப்பொழுது அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மலையை வேருடன் பிடுங்கி அவர்களது தலைக்கு மேலில் உயர்த்தினார்கள். இன்னும் அந்த மலை அவர்களுக்கு மேலில் நிழலிட்டுக் கொண்டு மிருந்தது. அப்பொழுது ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனீ இஸ்ராயீல்களை நோக்கி "நீங்கள் இதனை ஒப்புக் கொள்ளுங்கள், இல்லையேல் உங்கள் மீது இது போடப்படும்" என்று கூறினார்கள். பனீ இஸ்ராயீல்கள் தப்பிச் செல்ல வழி யில்லை என்பதை உணர்ந்து அதனை ஒப்புக் கொண்டு அல்லாஹு தஆலாவுக்கு சுஜூது செய்தார்கள். ஆனால் அவர்கள் சுஜூது செய்து கொண்டிருக்கும் போதே தலையைக் கொஞ்சம் நிமிர்த்தி மலையையும் பார்த்துக் கொள்பவர்களாக இருந்தனர். இதிலிருந்து யூதர்கள் சுஜூது செய்தால் அவர்கள் தங்கள் முகத்தில் பாதியைத்தான் பூமியில் படும்படி சுஜூது செய்வார்கள். இது அவர்களில் ஒரு வழக்கமாகவே ஏற்பட்டு விட்டது. இம்மாதிரியான சுஜூதினால்தான் எங்களை விட்டு வேதனை அகற்றப்பட்டது என்று யூதர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

ذْكُرُوْا مَا فِيْهِ **அதிலுள்ளதை ஞாபகம் செய்து கொள்ளுங்கள்** என்பதற்கு அந்தத் தவ்ராத் வேதத்திலுள்ளதை மனனம் செய்து கொள்ளுங்கள், மறந்து விடாதீர்கள் என்பது கருத்து. மனனம் செய்து கொள்வது என்றால் மனனஞ் செய்து கொள்வது என்பது மட்டும் பொருளல்ல. அதிலுள்ள கட்டளையின்படி நடக்க

வேண்டும் என்பதுதான் கருத்து. வேதத்தின் கட்டளைகளில் மிகப் பிரதானமானது அவ்வேதத்தில் சொல்லப்பட்ட கட்டளையின்படி நடப்பதேயாகும். கட்டளையின்படி நடக்காமல் நாவினால் மட்டும் அதனை ஓதுவது சிலாக்கியமில்லை. ஆனால், வேதத்திலுள்ள கட்டளையின்படி நடந்து கொள்வதுடன் அதனை மனனம் செய்து கொள்வது மிகவும் சிறந்தது. இதுபோல திருக்குர்ஆனிலுள்ள சட்ட திட்டங்களின்படி நடக்காமல் வாயால் மட்டும் அதனைத் திரும்பத் திரும்ப ஓதுவது மட்டும் அவ்வளவு பிரயோஜனமாக இல்லை. குர்ஆன் ஷரீஃபில் சொல்லப்பட்ட கட்டளைகளின்படி நடப்பதும், அவைகள் மறந்து போகாமல் ஞாபகப்படுத்திக் கொள்வதும்தான் மிகச் சிறந்ததாகும்.

ثُمَّ تَوَلَّيْتُمْ مِّنْۢ بَعْدِ ذٰلِكَ ۚ فَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ لَكُنْتُمْ مِّنَ الْخٰسِرِيْنَ ۝٦٤

64. பின்பு, நீங்கள் அதன் பிறகும் (வேதக் கட்டளைப்படி நடக்காமல்) புறக்கணித்து விட்டீர்கள். ஆயினும் உங்கள்பால் அல்லாஹ்வின் கிருபையும் அவனின் கருணையும் இல்லாதிருப்பின் நீங்கள் நஷ்டமடைந்தவர்களிலாகி இருப்பீர்கள்.

تَوَلَّيْتُمْ **நீங்கள் புறக்கணித்து விட்டீர்கள்** என்பதற்கு நீங்கள் அந்த வாக்குறுதியின்படி நடக்காமல் பின்வாங்கி விட்டீர்கள், நீங்கள் செய்த வாக்குறுதியின்படி தொடர்ந்து நடக்கவில்லை என்பது கருத்து.

அல்லாஹு தஆலாவுக்கு பனீ இஸ்ராயீல்கள் செய்த வாக்குறுதிக்கு மாறாக அவர்கள் நடந்தபோது உடனே அவர்களுக்கு அவன் வேதனையை அனுப்பாமல் தாமதம் செய்து, அவர்கள் திரும்பவும் ஒழுங்காக நடந்து கொள்வதற்குத் தவணையும் கொடுத்தான். இவ்வாறு தாமதம் செய்து தவணை கொடுத்ததை இறைவன் இந்த இடத்தில் அல்லாஹ்வின் கருணை என்றும் அவனது கிருபை என்றும் கூறி இருக்கிறான்.

الْخَـٰسِرِينَ **காஸிரீன்** என்பது **குஸ்ரான்** என்பதிலிருந்து உண்டானது. குஸ்ரான் என்பது அசல் மூலதனம் ஒழிந்து போவதற்குச் சொல்லப்படுகிறது. அதாவது வியாபாரத்தில் போட்ட முதலீடு குறைந்து, இல்லாமல் போவதற்கு குஸ்ரான் என்று பெயர். ஆனால், இவ்விடத்தில் நஃப்ஸு (உடலும் உயிரும் உள்ள ஜீவன்) அழிந்து போகுதல் என்பதற்கு இப்பதம் சொல்லப்பட்டிருக்கிறது.

தவிர, அல்லாஹு தஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்திற்கு இவ்விஷயத்தில் பெரும் கிருபை செய்திருக்கிறான். எவ்வாறெனில் உம்மத்தே முஹம்மதிய்யாவிடம் எல்லா ஃபர்லுகளையும் விலக்கல்களையும் ஒரே சமயத்தில் விதியாக்காமல் ஒன்றன்பின் ஒன்றாகவே விதியாக்கினான். ஒரு ஃபர்லை முதலில் விதித்து அதனை நமது உம்மத்துகள் கடைப்பிடித்து ஒழுகும்படி செய்தபின் மற்றொரு ஃபர்லை விதித்தான். இவ்விதமாகவே இஸ்லாம் மார்க்கத்திலுள்ள ஃபர்லுகள் ஒன்றன்பின் ஒன்றாக ஆதியில் விதிக்கப்பட்டன. ஆனால் பனீ இஸ்ராயீல்களுக்கு அவ்வாறில்லை. அவர்கள் மீது எல்லா ஏவல் விலக்கல்களையும் ஒரே முறையில் விதித்தான். இதனால் அவர்களுக்கு அவைகள் கஷ்டமாகத் தோன்றி அதனை ஒப்புக் கொள்ள மறுத்தார்கள். அதன் காரணமாக அவர்களின் தலைக்கு மேலில் மலையை உயர்த்தி அவர்கள் ஒப்புக் கொள்ளும்படி செய்ய வேண்டியதாயிற்று.

وَلَقَدْ عَلِمْتُمُ الَّذِينَ اعْتَدَوْا مِنكُمْ فِي السَّبْتِ
فَقُلْنَا لَهُمْ كُونُوا قِرَدَةً خَاسِئِينَ ﴿٦٥﴾

65. மேலும், உங்களில் (ஓய்வு நாளாகிய) சனிக்கிழமையில் (எவ்வித வேலையும் செய்யலாகாதென்ற வரம்பை) மீறியவர்களை நிச்சயமாக அறிந்தே இருக்கிறீர்கள். எனவே "சிறுமைப்பட்ட நிலைமையில் குரங்குகளாகி விடுங்கள்" என்று அவர்களுக்கு நாம் கூறினோம்.

وَلَقَدْ عَلِمْتُمْ **"மேலும் நீங்கள் அறிந்தே இருக்கிறீர்கள்"** என்று கூறியிருப்பது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலுள்ள யூதர்களை நோக்கிச் சொன்னதாகும்.

ஸப்து என்பது சனிக்கிழமை. தூக்கத்தில் மனிதரின் சுயேச்சையான செய்கைகளெல்லாம் நின்று விடுவதால் தூக்கத்திற்கும் **ஸுபாத்** என்று பெயர் இதுபோல சனிக்கிழமையன்று வேலைகள் செய்யாமல் அல்லாஹு தஆலாவின் வணக்கத்தில் ஈடுபடவேண்டும் என்று யூதர்கள் ஏவப்பட்டிருந்தனர். ஆதலால், சனிக்கிழமைக்கு **யௌமுஸ்ஸப்த்** என்ற பெயர் வந்தது. (யூதர்கள் சனிக்கிழமையை ஓய்வுநாள் என்று சொல்வார்கள்).

கிரதத் என்பது **கிரத்** என்ற வார்த்தைக்குப் பன்மைச் சொல். **கிரத்** என்பதற்கு "குரங்கு" என்பது பொருள்.

ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் **ஈலா** என்ற ஒரு ஊரில் சில பனீ இஸ்ராயீல்கள் வசித்துக் கொண்டிருந்தனர். இந்த ஊர் செங்கடலின் கரையில் மதீனமா நகருக்கும் ஷாம் தேசத்திற்கும் இடையில் இருந்தது. சனிக்கிழமையன்று மீன் பிடிக்கக் கூடாது என்று இங்கிருந்த யூதர்களுக்கு அல்லாஹு தஆலா கட்டளை யிட்டிருந்தான். ஆனால், சனிக்கிழமையன்று கடலிலுள்ள மீன்கள் தங்கள் மூஞ்சிகளை தண்ணீருக்கு மேல் நீட்டிக் கொண்டு வெளியில் தோன்றுவதும், சனிக்கிழமை நேரம் தீர்ந்தவுடன் அவைகளெல்லாம் தண்ணீருக்குள் போய் மறைந்து விடுவதும் வழக்கமாக இருந்தது. ஆகவே, ஷைத்தான் அவர்களில் வஸ்வாஸை உண்டாக்கி விட்டான். ஆதலின் அவர்கள் கடற் கரை ஓரத்தில் சிறு சிறு குட்டைகள் வெட்டி வைத்திருந்தனர். சனிக்கிழமையன்று அவற்றின் மூலமாக அந்த மீன்கள் அந்தக் குட்டைகளில் வந்து விழும். அப்படி விழுந்தவுடன் அவர்கள் அவற்றின் கால்வாய்களை அடைத்து வைத்துக்கொண்டு ஞாயிற்றுக்கிழமையன்று அவற்றைப் பிடித்துக் கொள்வர். இவர்கள் இவ்விதம் செய்ததால் செல்வந்தர்களாகி விட்டனர். இவ்விதமாக அவர்கள் 40 வருட காலம் செய்து கொண்டிருந்தனர் என்றும் 70 வருட காலம் செய்து கொண்டிருந்தனர் என்றும் சொல்லப்படுகிறது. இவர்கள்

இப்படிச் செய்ததற்காக இவர்கள் மீது வேதனை இறங்கவில்லை. ஆனாலும் இவர்கள் தங்களுக்கு வேதனை வந்துவிடுமோ வென்று பயந்து கொண்டிருந்தனர். எனவே, தங்களுக்கு வேதனை வராததால் "தங்களுக்கு சனிக்கிழமையிலும் மீன்பிடிக்க அல்லாஹு தஆலா ஹலாலாக்கி (அனுமதித்து) விட்டான்" என்று கூறி சனிக்கிழமையன்று மீன் பிடிக்கத் தொடங்கினர். இவர்கள் இப்படிச் செய்ததைப் பார்த்த அந்த ஊரிலுள்ள யூதர்களில் சிலர் அவர்களைத் தடுத்தனர். வேறு சிலர் அவர்கள் செய்யும் காரியம் இறைவன் கட்டளைக்கு மீறியது என்று கருதினாலும் அவர்களைத் தடுக்காமல் சும்மா இருந்தனர். இவர்கள் இப்படி மீறிப் பாவம் செய்ததைப் பற்றி ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் இவர்களை சபித்தார்கள். அல்லாஹு தஆலா இவர்களுடைய பிடிவாதமான இந்தச் செய்கைக்காக இவர்களைக் குரங்குகளாக மாற்றிவிட்டான்.

மறுநாட் காலையில் விழித்தபோது மீன் பிடித்தவர்கள் குரங்குகளாக மாறிவிட்டதால் அவர்களது வீடுகள் திறக்கப்படாமல் இருந்தன. இவர்களை மீன் பிடிக்கவேண்டாமென்று தடுத்தவர்கள் இதனைச் சந்தேகித்து அவர்கள் வீடுகளின் சுவர்களை ஏறிக்குதித்து உள்ளே சென்று பார்க்கும் போது அவர்கள் வால் முளைத்த குரங்குகளாக உருவம் மாற்றப் பட்டிருந்தனர். அதிலும் வாலிபமாக இருந்தவர்கள் குரங்குகளாகவும், வயோதிகமாக இருந்தவர்கள் பன்றிகளாகவும் மாறி இருந்தனர். உள்ளே சென்ற பார்த்த மனிதர்கள் அந்தக் குரங்குகளை இன்னார் என்று அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால், அந்தக் குரங்குகள் தங்கள் இனத்தார்களை அடையாளம் கண்டு பிடித்துக் கொண்டன. ஆகவே, அந்தக் குரங்குகள் தங்களுடைய உறவினர்களிடம் வந்து அவர்களுடைய துணியைப் பிடித்து முகர்ந்து அழுதன. அதாவது அவற்றின் கண்களிலிருந்து தண்ணீர் ஓடின. அப்பொழுது அவர்கள் நாங்கள் உங்களை அப்படிச் செய்ய வேண்டாம் என்று தடுக்க வில்லையா? என்று கூறினர். அக்குரங்குகள் "ஆம்" என்று ஒப்புக்கொள்வதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தன. இப்படி மூன்று நாட்கள் வரை அவர்கள் உருவம் மாறி இருந்து இறந்து போயினர். இவர்கள் உருவத்தில்தான்

குரங்குகளாக இருந்தனரே யன்றி அறிவிலும் விளக்கத்திலும் குரங்குகளாக மாற்றப்படாமலிருந்தனர். ஆதலாற்றான் அவர்கள் தங்கள் இனத்தார்களிடம் வந்து அழுதார்கள். தவிர இப்பொழுது உலகில் இருக்கிற குரங்குகள் இந்தக் குரங்குளைச் சேர்ந்தவைகளல்ல. இப்பொழுதிருக்கிற குரங்குகள் இவர்கள் குரங்குகளாக மாற்றப் படுவதற்கு முன்னரும் இருந்தவைகளின் வம்சமேயாகும். பனீ இஸ்ராயீல்கள் குரங்குகளாக மாற்றப்பட்டபின் மூன்று நாட்கள்தான் இருந்தார்கள். ஆதலின் அவர்களுக்கு குரங்குச் சந்ததியினர் இல்லை.

இவர்களை மீன்பிடிக்க வேண்டாம் என்று தடுத்த பனீ இஸ்ராயீல்கள் 12 ஆயிரம் பேர். ஈலா என்ற அந்த ஊரில் இருந்த பனீ இஸ்ராயீல்கள் மொத்தத்தில் 70 ஆயிரம் பேரேயாவர்.

فَجَعَلْنٰهَا نَكَالًا لِّمَا بَيْنَ يَدَيْهَا وَمَا خَلْفَهَا وَمَوْعِظَةً لِّلْمُتَّقِيْنَ ۝

66. எனவே அ(வர்களை உருவம் மாற்றிய)தை அதற்கு முன்னிலையில் இருந்தவர்களுக்கும் அதற்குப் பின்னால் உள்ளவர்களுக்கும் ஒரு படிப்பினையாகவும் பயபக்தியுள்ள வர்களுக்கு நற்போதனையாகவும் அதையமைத்தோம்.

لِّمَا بَيْنَ يَدَيْهَا **"அதற்கு முன்னிலையில் இருந்தவர் களுக்கும்"** என்பதற்கு அந்தச் சம்பவம் நடக்கும் போதிருந்த கூட்டத்திற்கு, வர்க்கத்திற்கு என்பது கருத்து. **மா** என்ற ஹர்ஃபு (எழுத்து) அரபிப் பாஷையில் அஃறிணைக்கு உபயோகிக்கப்பட்டு வருகிறது. **மன்** என்ற ஹர்ஃபு (எழுத்து) உயர்திணைக்கு உபயோகிக்கப்பட்டு வருகிறது. இந்த இடத்தில் **மா** என்ற ஹர்ஃபு (எழுத்து) உபயோகிக்கப்பட்டிருப்பதால் கூட்டம் வர்க்கம் என்று பொருள் கொள்ள வேண்டும்.

தவிரவும், பனீ இஸ்ராயீல்களில் சிலர் உருவம் மாற்றப்பட்டு, தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட இந்தச் சம்பவம் நடந்தபோது இருந்தவர்களுக்கும், அதற்குப் பிற்காலத்திலிருந்தவர்களுக்கும்

இந்தச் சம்பவத்தைப் படிப்பினையாக்கப் பட்டிருப்பதாலும் இந்தச் சம்பவமும் முற்காலத்திலுள்ளவர்களின் நூற்களிலும் சொல்லப் பட்டிருப்பதாலும் لِمَا بَيْنَ يَدَيْهَا **லிமா பைன எதைஹா** என்பதற்கு இறந்த காலம் என்றும், وَمَا خَلْفَهَا **வம கல்ஃபஹா** என்பதற்கு எதிர்காலம் என்றும் கொள்ளலாம்.

அறிந்துகொள்:- பனீ இஸ்ராயீல்களில் ஒரு ஊரிலிருந்த ஒரு பகுதியினருக்கு ஏற்பட்ட இந்த வேதனையும் நஷ்டமும் அவர்கள் (இஹ்ஸானை) நன்றியை உதவியை மதிக்காமலும், அருட்கொடை கொடுத்தவனுக்குப் பிரதியாகக் குஃப்ரான காரியத்தைச் செய்த தற்காகவும் ஏற்பட்டது. முற்காலத்திலிருந்த உம்மத்துகளுக்கு உருவம் மாற்றுவதன் மூலம் தண்டனை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், இந்த உம்மத்துகளுக்கும் இந்தத் தண்டனை இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆயினும், வெளி உருவத்தில் அவ்வாறு மாற்றுவதில்லை. இந்த உம்மத்துகளின் இருதயங்கள் மாற்றப் படுகின்றன. புற உருவத்தை மாற்றுவதைப் பார்க்கினும் இருதயங்களை மாற்றுவது மிகவும் கடுமையான தண்டனை யாகும். இதனைக் குறித்து இறைவன் **மேலும் 'நாம் அவர்களுடைய இருதயங்களையும் அவர்களுடைய பார்வைகளையும் மாற்றிவிடுவோம்** (சூரத்துல் அன்ஆம் 110) என்று கூறி இருக்கிறான்.

இருதயம் பன்றியைப்போல் மாற்றப்பட்டது என்பதற்கு அடையாளம் அசுத்தமானவைகளைப் புசிப்பதுதான். ஆகவே, எவர் ஹராமானவற்றைப் புசிக்கிறாரோ அவருடைய இருதயம் மாற்றப்பட்டு விட்டது என்று கொள்ள வேண்டும். கல்பு என்னும் இருதயம் மாற்றப்பட்டது என்பதற்கு மூன்று அடையாளங்கள் சொல்லப் படுகின்றன. 1. வணக்கம் புரிவதில் அவன் இன்பத்தைக் காண மாட்டான். 2. பாவம் செய்வதற்கு அஞ்சமாட்டான். 3. ஒருவருடைய மரணத்தைக் கொண்டு அகம் தெளியாமல், இம்மையின் பால் அதிகம் பிரியமுள்ளவனாக இருப்பான் என்று **ஜஹ்ரத்துர்ரியால்** என்ற கிரந்தத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- நல்லோர்கள் தங்களில் ஒருவருக்கொருவர்

மூன்று வாக்கியங்களை உபதேசமாக எழுதிக் கொண்டிருந்தார்கள்.

1. எவன் தனது மறு உலகத்திற்காக வணக்கம் செய்கிறானோ அவனுடைய இவ்வுலகத்திய காரியத்திற்கு அல்லாஹு தஆலா போதுமானவனாக இருக்கிறான்.

2. எவன் தனக்கும் அல்லாஹு தஆலாவுக்குமிடையில் இணக்கம் செய்து கொள்கிறானோ அவனுக்கும் மற்றவர்களுக்கு மிடையில் அல்லாஹு தஆலா இணக்கத்தை ஏற்படுத்துகிறான்.

3. எவன் தனது அகத்தைச் சீர்திருத்திக் கொள்கிறானோ அவனுடைய புறத்தை அல்லாஹு தஆலா சீர்திருத்தி விடுகிறான் என்று அவ்ஃப்னு அப்துல்லாஹ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

وَإِذْ قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ إِنَّ اللَّهَ يَأْمُرُكُمْ أَنْ تَذْبَحُوا بَقَرَةً ۖ قَالُوا أَتَتَّخِذُنَا هُزُوًا ۖ قَالَ أَعُوذُ بِاللَّهِ أَنْ أَكُونَ مِنَ الْجَاهِلِينَ ۝

67. மேலும், "நீங்கள் ஒரு மாட்டை அறுக்க வேண்டுமென நிச்சயமாக அல்லாஹ் உங்களை ஏவுகிறான்" என்று மூஸா தன் சமூகத்தாருக்குக் கூறியநாளை (எண்ணிப் பாருங்கள் அதற்கு அவர்கள்) "தாங்கள் எங்களைப் பரிகசிக்கின்றீர்களோ" என்றார்கள். (அதற்கு மூஸா) "நான் (பரிகாசம் செய்யும்) அறிவீனர்களில் ஒருவனாக ஆகுவதை விட்டு அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்" என்றார்.

பனீ இஸ்ராயீல்கள் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலத்தில் செய்த மற்றொரு அக்கிரமத்தையும், அதனால் அவர்கள் அடைந்த கஷ்டத்தையும் பற்றி இந்த ஆயத்திலும் இதற்கடுத்த ஆயத்துகளிலும் இறைவன் சொல்லிக் காண்பிக்கிறான்.

பகரத் என்பது காளை மாட்டின் இனத்தில் ஒருமைப் பாலாகும் இது ஆண்பால் பெண்பால் ஆகிய இருபாலுக்கும் பொதுவானது. ஆகவே, **பகரத்** என்ற இந்தப் பதத்திற்கு **காளைமாடு** என்றும் **பசு** என்றும் பொருள் கொள்ளலாம். இன்னும் தவ்ரு என்ற மாட்டின் இனத்தில் **பகரத்** என்பது பெண்பாலை (அதாவது பசு இனத்தையும் குறிக்கும்.

இன்னும் **பகர்** என்ற பதத்திற்கு பிளத்தல் என்றும் ஒரு பொருள் உண்டு. இது உழவில் பூமியைப் பிளப்பதால் இதற்கு **பகர்** என்ற பெயர் வந்தது.

பனீ இஸ்ராயீல்களில் செல்வந்தரான ஒரு வயோதிகர் இருந்தார். அவருடைய சிறிய தந்தையின் புதல்வர்கள் அவரது சொத்துக்கு அனந்தரபாத்தியம் கொண்டாடி அந்தச் சொத்துக்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையின் மேலீட்டால் அவரைக் கொலை செய்து அந்த ஊரின் தலைவாயிலில் பிரேதத்தை போட்டு விட்டனர். பிறகு அவருடைய கொலைக்காக தியத்து (நஷ்டஈடு) கொடுக்க வேண்டும் என்று புகார் செய்து, சிலர் மீது கொலைக் குற்றமும் சுமத்தினர். ஆனால், அவர்கள் கொலை செய்ததை ஒப்புக் கொள்ளாமல் மறுத்து விட்டனர். ஆகவே, ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கொலை செய்யப்பட்டவரைப் பற்றிய காரியம் இன்னதென்று (யார் கொலை செய்தார்கள் என்று) தெரியவில்லை. ஆனாலும், அவர்கள் அவரது கொலையின் மர்மத்தைப் பற்றி தங்களுக்கு அறிவிக்க வேண்டுமென அல்லாஹூ தஆலாவிடம் துஆச் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கிணங்க ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆச் செய்தார்கள். இதற்கு மறுமொழியாக "அவர்கள் மாட்டை அறுத்து அதனுடைய ஒரு அவயவத்தைக் கொண்டு கொலை செய்யப்பட்ட மனிதன் மீது அடித்தால், கொலை செய்யப்பட்டவன் தன்னைக் கொன்றவனை இன்னான் என்று அறிவிப்பான்" என்பதாக இறைவன் கூறினான். அந்த விபரத்தை ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மேற்கண்டவாறு பனீ இஸ்ராயீல்களுக்கு அறிவித்தார்கள்.

அப்பொழுது அவர்கள் நாம் கொலை செய்தவனை இன்னான் என்று அறிவிக்கும்படி கேட்க அதற்கு மாட்டை அறுக்கும்படி சொல்வது பொருத்தமான மறுமொழியாக இல்லை என்று எண்ணி ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி "எங்களை நீங்கள் பரிகசிக்கிறீர்களோ?" என்று வினவினார்கள். அதற்கு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் **அறிவீனர்களில் ஒருவனாக ஆகுவதை விட்டு அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்** என்று கூறினார்கள். ஏனெனில் அல்லாஹூ தஆலாவுடைய கட்டளையை அறிவிக்கும் விஷயத்தில் பரிகாசஞ் செய்வது அறியாமையும் முட்டாள் தனமுமாகும். ஆதலால், அல்லாஹூ தஆலாவின் கட்டளை என்று ஒரு விஷயத்தைக் கூறும்போது அதனைப் பரிகாசம் என்று இவர்கள் கருதியதால் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்விதம் கூறி மார்க்க விஷயத்தைக் கொண்டு பரிகாசம் செய்வது பெரும்பாவம் என்பதை அவர்களுக்கு மறைமுகமாக அறிவித்தார்கள். இவ்விதமாகவே, முஸ்லிம்களைப் பரிகசிப்பதும், மரியாதை செய்வதற்குத் தகுதியானவர்களை, மரியாதை செய்யக் கடமைப் பட்டவர்கள் பரிகசிப்பதும் பெரும்பாவமும், அறியாமையுமாகும். இப்படிப் பரிகசிப்பவர்கள் கண்டனம் செய்யப்படத் தகுந்தவர்களாகி விடுகின்றனர். ஆனால், நகைச்சுவையாகப் பேசுவதும் ஒருவரை ஏளனமாக எண்ணிப் பரிகசிப்பதும் ஒன்றல்ல. நகைச்சுவையாகப் பேசுவது குற்றமல்ல.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆயத்தில் கண்டவாறு அவர்களுக்குப் பதில் கூறியபோது தங்களுக்கு அல்லாஹூ தஆலா உண்மையாகவே கட்டளையிட்டிருக்கிறான் என்பதை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். ஆகவே, அவர்கள் ஏதேனும் ஒரு மாட்டைப் பிடித்து அறுத்திருந்தால் விஷயம் மிகச் சுலபமாக முடிந்திருக்கும். அனால், அவர்கள் அப்படிச் செய்யாமல் அந்த மாட்டின் அடையாளங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளக் கேள்விகளைக் கேட்கலானார்கள்.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّن لَّنَا مَا هِيَ ۚ قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا

بَقَرَةٌ لَّا فَارِضٌ وَّلَا بِكْرٌ عَوَانٌ بَيْنَ ذَٰلِكَ فَافْعَلُوا
مَا تُؤْمَرُونَ ﴿٦٨﴾

68. (அதற்கு பனீ இஸ்ராயீல்கள் மூஸாவே) என்ன (மாடு) அது என்று எங்களுக்கு அறிவிக்கும்படி உங்கள் ரப்பிடம் எங்களுக்காகக் கேளும் என்று கூறினர். (அதற்கு மூஸா) நிச்சயமாக அது கிழமுமல்ல கன்றுமல்ல இதற்கு மத்தியப் பருவத்திலுள்ள மாடு என நிச்சயமாக அவன் கூறுகிறான்; ஆகவே, நீங்கள் (உங்களுக்கு) ஏவப்பட்டதைச் செய்யுங்கள் என்று கூறினார்.

மாஹியவிலுள்ள **மா** என்ற பதம் இந்த இடத்தில் அந்த மாட்டின் தன்மையையும் நிலைமையையும் பற்றிக் கேள்வியாக வந்திருக்கிறது. அதாவது, அதனுடைய வயது என்ன? அதனுடைய அடையாளம் என்ன? என்பது கருத்து.

ஃபாரில் கடமைகளை விட்டு நீங்கியது அதாவது கடமைகளைச் செய்து முடித்தது என்பதும் அந்த மாடு தனது வயதைக் கடந்து அதன் கடைசி எல்லையை அடைந்தது அதாவது கிழமானது என்பதும் கருத்து.

பிக்ர் என்பது சிறியது, வயது சொற்பமானது என்பது பொருள்.

பிக்ர் ஃபாரிலு என்ற இரண்டு பதங்களையும் **ஃபாரிலத்துன் பிக்ரத்துன்** என்று பெண்பாலை அறிவிக்கக் கூடிய (தே) த் என்ற அட்சரத்துடன் உபயோகிக்கவில்லை. பகரத்துன் என்பதற்கு மாடு என்ற அர்த்தமிருப்பதால் அது ஆண்பாலாக இருந்தாலும், அந்தப் பதத்தில்(தே) சேர்த்து உபயோகிக்கப்பட்டிருப்பதால் அதன் அடையாளத்தைப் பற்றி விபரிக்கும் சொற்களிலும்(தே) சேர்த்தே உபயோகிக்க வேண்டியது முறை. எனினும் **பிக்ருன் ஃபாரிலுன்** என்ற பதங்கள் ஆண்பாலுக்கு உபயோகிக்கப்படுவதே இல்லை. இவை பெண்பாலுக்கு மட்டுமே சொந்தமானவை. எவ்விதமெனில், மாதவிடாய் பெண்களுக்கு மட்டும்தான் சொந்தமாக இருக்கிறது. ஆடவர்களுக்கு மாதவிடாய் வருவதில்லை. ஆதலின் **ஹாயில்** என்ற

பதத்தைக் கூறினால் மாதவிடாய் வந்திருக்கிற பெண் என்றுதான் பொருள் செய்யப்படும். மாதவிடாய் வந்திருக்கிற ஆடவன் என்று எவரும் பொருள் செய்வதில்லை. இதுபோல **ஃபாரிலுன் பிக்ருன்** என்ற பதங்களும் பெண் இனத்தையே குறிப்பிடும். ஆதலின் இவற்றில் **பிக்ரத்துன் ஃபாரிலத்துன்** என்று (தே)த் சேர்த்து இவற்றை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّن لَّنَا مَا لَوْنُهَا ۚ قَالَ إِنَّهُ
يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ صَفْرَاءُ فَاقِعٌ لَّوْنُهَا تَسُرُّ
النَّاظِرِينَ ﴿٦٩﴾

69. (பின்னும்) அவர்கள் (மூஸாவிடம்) அதன் நிறம் என்ன என்பதை எங்களுக்கு விவரிக்கும்படி உமது ரப்பிடம் எங்களுக்காகக் கேளும் என்று கூறினார்கள். (அதற்கு) நிச்சயமாக அது பார்ப்பவர்களைச் சந்தோஷப்படுத்தக் கூடிய கெட்டியான மஞ்சள் நிறமுள்ள மாடு என்று அவன் கூறுகிறான் என்று (அவர்) சொன்னார்.

சஃப்ராஉ என்ற பதம் **சஃப்ரத்** என்ற பதத்தின் அடியாய் பிறந்தது. **சஃப்ரத்** என்பது கருப்புக்கும் வெள்ளைக்கு மிடையிலுள்ள நிறம். **கஅன்னஹூ ஜமாலதுன் சுஃபர்** என்ற வாக்கியத்தில் சுஃபர் என்பதற்கு கரு நிறம் என்பதாக அர்த்தம் செய்யப்படுகிறது. **"ஆனால் இந்த இடத்தில் கருப்புநிறம்"** என்பதாகக் கருத்துக் கொள்ளப் படவில்லை.

ஃபாக்கிஉன் என்பது **ஃபுக்கூஉன்** என்ற பதத்தினடியாய்ப் பிறந்தது. கலப்பற்ற மஞ்சள் சுத்தமான மஞ்சள் என்பது கருத்து. எனவே, அந்த மாட்டைக் குறித்து **ஃபாக்கிஉன் லவ்னிஹா** என்ற வார்த்தையும் வந்திருப்பதால், அந்த மாட்டின் நிறம் சுத்தமான கலப்பற்ற மஞ்சள் நிறம் என்பதாகக் கருத்துக் கொள்ள வேண்டும். அதிலும் அந்த மாட்டின் குழம்புகள், கொம்புகள் ஆகியவைகளும்

மஞ்சள் நிறமாக இருக்க வேண்டும் என்பதாகவும் சிலர் கூறி இருக்கிறார்கள்.

تَسُرُّ النَّاظِرِينَ "பார்ப்பவர்களைச் சந்தோஷப்படுத்தும்" என்பதிலுள்ள **தஸிர்ருன்** என்ற வார்த்தை **ஸுருருன்** என்ற வார்த்தையிலிருந்து பிறந்தது. **ஸுருருன்** என்பது லாபம் கிடைக்கும் போது அல்லது லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும்போது இருதயத்தில் உண்டாகும் இன்பமாகும்.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّن لَّنَا مَا هِيَ إِنَّ الْبَقَرَ تَشَابَهَ عَلَيْنَا وَإِنَّا إِن شَاءَ اللَّهُ لَمُهْتَدُونَ ۝

70. ஆனால், அவர்கள் (மஞ்சள் நிற மாடுகள் ஏராளமாக இருப்பதால்) அது எது என்பதை அவன் எங்களுக்கு அறிவிக்கும்படி உமது ரப்பிடம் எங்களுக்காக கேளும். நிச்சயமாக அந்த மாடு எங்களைத் தடுமாறச் செய்கிறது. இன்னும் அல்லாஹ் நாடினால் (அது இன்னதுதானென அறிந்து கொள்வதில்) நாங்கள் நிச்சயமாக நேர்வழி பெற்றவர்களாவோம் என்று கூறினர்.

மாஹிய என்று இந்த இடத்தில் மீண்டும் பனீ இஸ்ராயீல்கள் வினவி இருக்கிறார்கள். இந்தக் கேள்விக்கு அதனுடைய அடையாளம் என்ன? என்பதுதான் கருத்து. அதாவது அந்த மாடு வேலை செய்ததா? அல்லது வேலை செய்யாததா? என்பது கருத்து.

"நான் ஒரு ஆட்டை இன்னாருக்குக் கொடு என்பதாக உனக்குக் கட்டளையிடும் போது "அது தும்பை ஆடா? அல்லது பள்ளை ஆடா?" என்று என்னிடம் வினவுகின்றாய். அதனைப் பற்றி நான் உனக்கு விபரித்தேனாயின் அது ஆணா? பெண்ணா? என்று நீ கேட்கின்றாய். அதனைப் பற்றியும் உனக்கு அறிவித்தேனாயின் "அது கருப்பு ஆடா? வெள்ளை ஆடா?" என்று வினவுகிறாய். எனவே, ஒரு காரியத்தைப் பற்றி உன்னை நான் ஏவுவேனாயின் அதனைப் பற்றி என்னிடம் மீண்டும் மீண்டும் கேட்க வேண்டாம்" என்று ஹஸரத்

உமருப்னு அப்துல் அஜீஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஹதீஸ்:- "ஹராமாக்கப்படாத ஒரு பொருளைப் பற்றி ஒருவன் கேட்க, அவனுடைய கேள்வியின் காரணமாக அது ஹராமாக்கப் பட்டதே அவன் குற்றவாளிகளில் மிகப் பெரியவனாக இருக்கிறான்" என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

எனவே, இந்த ஹதீஸிலிருந்தும் ரிவாயத்திலிருந்தும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருப்பது கூடாது என்பது தெரிய வருகிறது.

தஷாபஹ என்ற வார்த்தைக்கு ஒன்றுக்கொன்று ஒப்பாக இருப்பது என்பது கருத்து. மஞ்சள் நிறமுள்ள மாட்டை அறுக்கும்படி மேற்கண்ட ஆயத்தில் அல்லாஹு தஆலா கட்டளையிட்ட பின்னும் பனீ இஸ்ராயீல்கள் மஞ்சள் நிறமுள்ள மாடுகள் ஏராளமாக இருக்கின்றனவே அவற்றில் எந்த மாட்டை அறுக்க வேண்டும் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. ஆதலின், அது வேலை செய்த மாடா? அல்லது வேலை செய்யாமல் இருக்கிற மாடா? என்பதைப் பற்றி எங்களுக்கு விபரிக்க வேண்டும் என்பதாக அவர்கள் மீண்டும் கேட்டிருக்கிறார்கள். இதனைப் பற்றி இறைவன் இந்த ஆயத்தில் கூறி இருக்கிறான்.

وَإِنَّا إِن شَاءَ اللَّهُ لَمُهْتَدُونَ **இன்னும் அல்லாஹ் நாடினால்** (நாங்கள் அறுக்க வேண்டும் என்று ஏவப்பட்ட மாடு இன்னது என்பதைக்) கண்டு பிடித்துக் கொள்வோம் என்று பனீ இஸ்ராயீல்கள் கூறியதில் "இன்ஷா அல்லாஹ் (அல்லாஹ் நாடினால்)" என்று அவர்கள் கூறாமலிருந் திருந்தால் அவர்களுக்கு அது கடைசி வரை விளக்கப்பட்டிருக்காது என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ لَّا ذَلُولٌ تُثِيرُ الْأَرْضَ وَلَا تَسْقِي الْحَرْثَ مُسَلَّمَةٌ لَّا شِيَةَ فِيهَا قَالُوا

ٱلۡـَٔـٰنَ جِئۡتَ بِٱلۡحَقِّۚ فَذَبَحُوهَا وَمَا كَادُواْ يَفۡعَلُونَ ۝٧١

71. நிச்சயமாக அது பூமியை உழுது மெலிந்து போகாததும் பயிருக்குத் தண்ணீர் இறைக்காததும் ஒச்சமற்றதும் அதி(ன் நிறத்தில் கலப்பு நிறமில்லாததுமான மாடு என நிச்சயமாக அவன் கூறுகிறான் என்று சொன்னார். (அதற்கு அவர்கள்) இப்பொழுதுதான் சரியான விவரம் கொண்டு வந்தீர் என்று கூறினார்கள். ஆயினும் அவர்கள் (சுலபமாகச்) செய்யமுடியாத நிலைமையில் அதை அறுத்தனர்.

முஸல்லமத்துன் என்பது குற்றங் குறையில்லாமல் சுத்தமானது என்றும், வேலை செய்யாதது என்றும், வேறு நிறங்கள் கலப்பில்லாதது என்றும் பொருள் கொள்ளலாம். இந்த இடத்தில் இம்மூன்று கருத்துக்களும் பொருந்தி இருக்கின்றன.

உழவில் பிடித்தல், தண்ணீர் இறைத்தல் ஆகிய காரியங் களுக்குப் பெரும்பாலும் காளைமாடுகளையே உபயோகிப்பது வழக்கமாக இருப்பதால், மேலே கண்ட ஆயத்தில் அல்லாஹு தஆலா பகரத்தை அறுக்கும்படி கூறியது "காளை மாட்டைத்தான்" என்று தெரியவருகிறது.

பகரத் என்ற பதத்தை காளை மாட்டிற்கும் பசுவிற்கும் உபயோகிக்கலாம் என்றிருந்தாலும், இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட மாட்டின் அடையாளங்கள் காளைமாட்டின் அடையாளங்களாக இருப்பதால் காளைமாட்டைத்தான் அறுக்கும்படி அவர்கள் கட்டளையிடப் பட்டார்கள் என்பது தெரியவருகிறது. ஆனால், அக்காலத்தில் அதாவது ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலத்தில் அந்த நாட்டில் பசுக்களையும் வேலையில் பிடித்து உழவடித்தல், கமலை யிறைத்தல் முதலிய வேலைகளைச் செய்விக்கும் வழக்கமிருக்கும் பட்சத்தில் ஆயத்தில் குறிப்பிட்ட பகரத்துன் என்ற பதத்திற்குக் காளை மாடுதான் என்று குறிப்பாக அர்த்தம் செய்ய முடியாது. பசு என்று அர்த்தம் செய்யவும் இடமேற்படுகிறது. ஆகவே, ஒரு கூட்டத்தார் பகரத்துன் என்ற பதத்தைக்

கூறியிருப்பதிலிருந்து ஒரு காளை மாடு என்று கூறி இருக்கிறார்கள். ஆனால் ஹளரத் அபூ யூசுஃப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அக்காலத்தில் பசுக்களைக் கொண்டு உழவடித்தல் கமலையிறைத்தல் ஆகிய வேலைகள் செய்வதும் வழக்கமாக இருக்குமாயின் **பகரத்** என்ற இந்தப் பதத்திற்குப் "பசு" என்றும் கருத்துக் கொள்ளலாம் என்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

فَذَبَحُوهَا ஃபதபஹூஹா **"ஆகவே, அதனை அவர்கள் அறுத்தார்கள்"** என்பதில் ஆயத்தில் சொல்லப்பட்ட அடையாளங்கள் உள்ள மாட்டைக் கண்டு பிடித்து அவர்கள் அறுத்தார்கள் என்பது கருத்து. ஆனால் அந்த அடையாளமுள்ள மாட்டைக் கண்டு பிடித்து அறுக்க 40 வருடங்கள் சென்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயத்தில் சொல்லப்பட்ட அடையாளமுள்ள மாடு ஒரு வாலிபரிடமிருந்தது. ஏராளமான தொகையைக் கொடுத்து அந்த மாட்டை அவர்கள் வாங்கினார்.

அல்லாஹு தஆலாவுக்குக் கீழ்ப்படியும் விஷயத்தில் மிகத் தீவிரமாக இருப்பதும், ஒரு காரியத்தைச் செய்யும்படி இறைவன் ஏவினால் அதனுடைய அந்தரங்க விஷயம் என்ன? எதற்காக இறைவன் இப்படிக் கட்டளையிட்டான்? என்ற விசாரணையில் ஈடுபடாமல் அதனைச் செய்ய முற்படுவதுதான் புத்திசாலிகளின் வேலையாகும் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்கிறோம்.

இனி, அவர்கள் அறுத்த மாட்டின் சம்பவத்தைப் பற்றி இங்கு சுருக்கமாகக் கூறுகிறோம்.

பனீ இஸ்ராயீல்களில் ஸாலிஹான ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு புதல்வனும் ஒரு காளைமாடும் இருந்தது. அவர் அந்த மாட்டைக் காட்டில் கொண்டுபோய், "இறைவா! என் மகன் பருவ வயதை அடையும் வரை இந்த மாடு உனது காவலில் இருக்கட்டும்" என்று கூறி அதனை விட்டுவிட்டுக் காலம் சென்று விட்டார். அந்த மாடு ஒருவருக்கும் பிடி கொடாமல் காட்டில் வளர்ந்து கொண்டிருந்தது. பின்பு, அந்த ஸாலிஹான மனிதரின் புதல்வர் பருவ வயதை அடைந்து அவருடைய தாயாருக்கு நன்றி செய்து கொண்டிருந்தார். அதாவது,

இரவில் ஒரு பாகத்தைத் தொழுவதற்காகவும், ஒரு பாகத்தை உறங்குவதற்காகவும், ஒரு பாகத்தைத் தாய்க்கு பணிவிடை செய்வதற்காகவும் என்று பிரித்து வைத்து அப்படிச் செய்வதும், பகற்காலங்களில் காட்டுக்குச் சென்று விறகு எடுத்து வந்து விற்று, கிரயத் தொகையில் ஒரு பாகத்தைத் தனது உணவுக்காகவும், ஒரு பாகத்தைத் தாய்க்கும், ஒரு பாகத்தைத் தர்மத்திற்கும் கொடுத்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அவரது தாயார் தன் மகனிடம் "மகனே! உனது தந்தை உனக்காக ஒரு மாட்டை அல்லாஹு தஆலாவின் பக்கலில் ஒப்புவித்துக் காட்டில் விட்டிருக்கிறார். நீ அந்தக் காட்டிற்குச் சென்று இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம், இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம், இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், யாக்கூபு அலைஹிஸ்ஸலாம் ஆகியவர்களின் இறைவன் பெயரைச் சொல்லி அந்த மாட்டைக் கூப்பிடு" எனக் கட்டளையிட்டு "அந்த மாட்டின் தலையில் சூரியனுடைய சுடரைப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும். இதுதான் அதனுடைய அடையாளம்" என்று கூறி அனுப்பி வைத்தாள். அந்த மாடு மிகவும் அழகாக இருந்ததால் அதனை அக்காலத்திலுள்ளவர்கள் தங்கம் பதித்த மாடு என்று சொல்லி வந்தனர்.

எனவே, தாயின் கட்டளைப்படி அவ்வாலிபர் காட்டுக்குச் சென்று அந்த மாட்டை அடையாளம் கண்டு அவரது தாயாரின் கட்டளைப்படி இறைவன் மீது சத்தியம் செய்து அதனை அழைத்தார். அந்த மாடு வந்தது. ஆகவே, அதன் கழுத்தைப் பிடித்து அதனை இழுத்துக் கொண்டு வந்தார். அல்லாஹு தஆலாவுடைய கட்டளைப்படி அந்த மாடு அவ்வாலிபரை நோக்கி "தாய்க்கு நன்றி செய்யும் வாலிபரே! என்மீது ஏறிக்கொள்" என்று கூறிற்று. அதற்கு அவ்வாலிபர் "என் தாய் எனக்கு அப்படிக் கட்டளையிடவில்லை. கழுத்தைப் பிடித்து இழுத்து வரும்படிதான் சொன்னாள்" என்று பதில் கூறினார். அப்பொழுது அந்த மாடு அவ்வாலிபரை நோக்கி "பனீ இஸ்ராயீல்களினுடைய இறைவன் மீது சத்தியமாக நீர் என் மீது ஏறி இருப்பீராயின் ஒருபோதும் என்னை நீர் கைவசப்படுத்திக் கொள்ளவே

மாட்டீர். நீர் உமது தாய்க்கு நன்றி செய்த காரணத்தினால் நீர் மலையைப் பார்த்து வேருடன் பிடுங்கி வா என்று கூறினாலும் அது உம்முடன் அப்படியே வரும்" என்று கூறிற்று.

பிறகு, அவ்வாலிபர் அக்காளை மாட்டுடன் தமது தாயாரிடம் வந்தார். அவ்வாலிபரை நோக்கி அவருடைய தாயார் "நீர் ஏழை, உம்மிடம் பணமில்லை. பகற் காலங்களில் விறகு கொண்டு வந்து விற்பனை செய்வதும், இரவு நேரங்களில் தூக்கத்தைக் குறைத்து வணங்குவதும் உனக்குக் கஷ்டமாக இருக்கும். ஆதலின், இந்த மாட்டைக் கொண்டுபோய் விற்று விட்டுவா" என்று கூறினாள். அதற்கவ்வாலிபர் "எத்தனை ரூபாய்க்கு இதனை நான் விற்க வேண்டும்" என்று கேட்டார். அதற்கவள் "மூன்று தீனாருக்கு இதனை விற்றுவிடலாம். என்றாலும், என்னுடன் கலந்து ஆலோசனை செய்யாமல் இதனை விற்று விடாதே" என்று கூறினாள். அக்காலத்தில் காளைமாட்டு விலை மூன்று தீனார்களாக இருந்தது.

ஆகவே, அவர் கடைத்தெருவுக்கு மாட்டை ஓட்டிக் கொண்டு சென்றார். அல்லாஹுதஆலா தனது ஆற்றலைத் தனது சிருஷ்டிகளுக்குக் காண்பிப்பதற்காகவும், அவ்வாலிபர் தனது தாய்க்கு எவ்விதம் நன்றி செய்தார் என்பதை உணர்த்துவதற்காகவும் ஒரு மலக்கை அனுப்பினான். அந்த மலக்கு அவ்வாலிபரிடம் வந்து "இந்த மாட்டை எத்தனை ரூபாய்க்கு விற்பனை செய்கிறீர்?" என்று விலைபேசினார். அதற்கவ்வாலிபர் "மூன்று தீனார்" என்று கூறி, "ஆனால் என் தாய்க்குச் சம்மதம் இருந்தால்தான் விலைக்குக் கொடுப்பேன்" என்று நிபந்தனையும் கூறினார். அதற்கந்த மலக்கு "இதற்கு நான் ஆறு தீனார்கள் தருகிறேன். ஆனால் நீர் உமது தாயாரிடம் அனுமதி பெறக்கூடாது" என்று கூறினார். அதற்கவ்வாலிபர் "இந்த மாட்டின் எடைக்குச் சமமாகத் தங்கத்தைக் கொடுத்தாலும் என் தாய் சம்மதமின்றி அதனை நான் வாங்க மாட்டேன்" என்று கூறி, அந்த மாட்டைத் தனது தாயாரிடம் திரும்பக் கொண்டு வந்து அதற்கு ஏற்பட்ட விலையைப் பற்றித் தனது தாயாரிடம் அறிவித்தார். அப்பொழுது அவள் "நீ திரும்பச் சென்று ஆறு தீனாருக்கு எனது

சம்மதத்தின் பேரில் விற்பனை செய்துவிடு'' என்று கூறினாள். ஆகவே, அவர் கடைத்தெருவிற்கு அந்த மாட்டை ஓட்டிக் கொண்டு சென்றார். மறுபடியும் அந்த மலக்கு அவரிடம் வந்து "உமது தாயிடம் நீ அனுமதி பெற்றுக் கொண்டாயா?'' என்று கேட்டார். ஆறு தீனாருக்கு நான் குறைக்கக் கூடா தென்றும் அப்படி விற்கும் போது தன்னிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் எனது தாயார் எனக்கு கட்டளையிட்டிருக்கிறாள்'' என்று கூறினார். அதற்கு அம்மலக்கு "நீர் உமது தாயிடம் அனுமதி பெறாமல் எனக்குக் கொடுப்பதாயின் இதற்கு நான் பன்னிரண்டு தீனார் தருகிறேன்'' என்று கூறினார். அவ்வாலிபர் அதற்குச் சம்மதிக்காமல் தனது தாயிடம் வந்து நடந்த விபரத்தைக் கூறினார்.

அப்பொழுது அவள் "உன்னிடம் வருபவர் மனிதரைப் போல் வருபவர் உண்மையில் மனிதராக இருக்க முடியாது, அவர் மலக்காகத்தான் இருப்பார். ஆதலின், அவர் மறுபடியும் வந்தால் இந்த மாட்டை நாங்கள் விற்பனை செய்யலாமா? வேண்டாமா? என்பதைத் தெரிவியுங்கள் என்று கேட்டுக் கொள்'' என்று கட்டளையிட்டு அனுப்பினாள். மறுபடியும் அவ்வாலிபர் கடைத் தெருவுக்குச் சென்று தனது தாயார் கட்டளைப்படி வினவினார். அப்பொழுது அந்த மலக்கு "இந்த மாட்டை நீங்கள் விற்காமல் வைத்திருக்க வேண்டும். இம்ரானுடைய புதல்வரான மூஸா என்பவர் பனீ இஸ்ராயீல்களில் கொலை செய்யப்பட்ட ஒருவனுக்காக இதனை விலைக்கு வாங்க வருவார். அப்பொழுது இந்த மாட்டினுடைய தோல் நிறம்பத் தங்கம் வாங்கிக் கொண்டு இதனை நீங்கள் அவரிடம் விற்று விடுங்கள், என்று உமது தாயிடம் நீர் போய்ச் சொல்லிவிடும்'' என்று கூறினார். எனவே, அல்லாஹு தஆலா இந்த மாட்டைபே அறுக்கும்படி பனீ இஸ்ராயீல்களின் மீது ஏற்படுத்தி விட்டான். ஆகவே, அவர்கள் மேற்கண்ட ஆயத்தில் கூறியவாறு அந்த மாட்டின் அடையாளத்தைப் பற்றிக் கேட்கும் போதெல்லாம் இந்த மாட்டின் அடையாளங்களே அவர்களிடம் கூறப்பட்டன. அவர்கள் அந்த மாட்டின் தொலி நிறம்பத் தங்கம் கொடுத்து விலைக்கு வாங்கி அறுத்தார்கள்.

தவிரவும், உலகில் பல விதமான மிருகங்கள் இருக்க மாட்டை அறுக்கும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டதற்குக் காரணம் "அவர்கள் மாட்டை வணங்கிக் கொண்டிருந்தனர். பிறகு, அவர்கள் தவ்பாச் செய்து அல்லாஹு தஆலாவை வணங்க ஈடுபட்டனர். ஆகவே, அவர்களுக்கு மாட்டின் மீது ஒரு விதமான பிரியம் ஏற்பட்டிருந்தது. ஆதலின், மாட்டின் மீது ஏற்பட்ட அந்தப் பிரியத்தைச் சோதிப்பதற் காகவே இறைவன் மாட்டை அறுக்கும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டான்'' என்றும் இமாம்கள் கூறுகின்றனர்.

وَإِذْ قَتَلْتُمْ نَفْسًا فَادَّٰرَءْتُمْ فِيهَا ۖ وَاللَّهُ مُخْرِجٌ مَّا كُنتُمْ تَكْتُمُونَ ۝

72. மேலும் நீங்கள் ஒருவனைக் கொலை செய்து விட்டு அதில், (ஏற்படும் குற்றத்தை மற்றவர் மீது) சாட்டிவிட முயன்ற வேளையை (எண்ணிப் பாருங்கள்) ஆனால் நீங்கள் மறைத்து வைத்திருந்ததை அல்லாஹ் வெளிப்படுத்துபவனாக இருந்தான்.

فَادَّٰرَءْتُمْ **இத்தாரஃதும்** என்ற சொல் **தரஅ** என்பதை அடியாகக் கொண்டு பிறந்தது. இதனுடைய அஸல் **ததாரஃத்தும்** என்பதாகும். **தர்உன்** என்பதற்கு விலக்குதல் என்பது பொருள். எனவே, (கொலைக் குற்றம் உங்கள் மீது வராமல்) நீங்கள் விலக்கிக் கொண்டீர்கள். அது விஷயமாகச் சச்சரவிட்டுக் கொண்டீர்கள் என்பது கருத்து. ஏனெனில், சச்சரவிட்டுக் கொள்பவர் ஒவ்வொருவரும் தன்மீது குற்றம் வராமல் தடுத்துக் கொள்வதற்காகத் தனது எதிரிகளின் மீது அதனை சுமத்துகின்றனர். ஆகவே இதன்படி **ஃபத்தாரஃதும்** என்ற வாக்கியத்திற்குக் கொலை செய்யப்பட்டவர் விஷயத்தில் நீங்கள் சச்சரவிட்டுக் கொண்டு பிறர் மீது குற்றத்தைச் சுமத்தினீர்கள் என்பது கருத்து.

இந்த ஆயத்து வார்த்தையளவில் பிந்திச் சொல்லப்பட்டது. என்றாலும் கருத்தில் முந்தியதாகவே இருக்கிறது. ஏனெனில் இந்த

ஆயத்து இதற்கு முன் சொல்லப்பட்ட ஆயத்துகளுடன் சம்மந்தப்பட்டதே யாகும். அதாவது நீங்கள் ஒருவரைக் கொலை செய்து விட்டு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து இறைவனிடம் துஆச் செய்யும்படி அவரைக் கேட்டுக் கொண்டீர்கள். அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவனிடம் துஆச் செய்து அவன் கூறியதை உங்களிடம் அறிவித்தார் என்பதுதான் இதிலுள்ள முக்கிய விஷயம்.

இந்த ஆயத்தை முந்திக் கூறாமல் இதைப் பிற்படுத்திக் கூறியதற்குக் காரணம், மேலே சொல்லப்பட்ட கொலைச் சம்பவத்தில் கொலை செய்தவர் யார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக **மாட்டை அறுப்பதுதான்** இந்த ஆயத்துகளில் முக்கிய விஷயமாகும். ஆகவே, அவர்கள் ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்திக் கொண்ட விஷயம் இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலின் பிரதானமாகவுள்ள விஷயம் முந்திய ஆயத்துகளில் சொல்லப்பட்டது. பாக்கியுள்ள விஷயம் இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் கொலையைச் செய்தவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்திலிருந்த யூதர்களல்ல. அப்படி இருந்தும் 'நீங்கள் கொன்றீர்கள்' என்று இறைவன் கூறி இருப்பதற்குக் காரணம் அந்த ஜனங்கள் இந்தக் கொலைச் செய்கையைப் பொருந்திக் கொண்டிருந்தார்கள். ஆதலால்தான் "நீங்கள் கொன்றீர்கள்" என்று கொலைச் செய்கையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த யூதர்களிடம் சம்மந்தப்படுத்திக் கூறி இருக்கிறான்.

தவிரவும், பணத்தாசையால் கொலை செய்தவர்கள் சிலராக இருக்க இந்தக் கொலைக் குற்றத்தை அந்த வகுப்பு முழுவதின் மீதிலுமே சாட்டி இருப்பதற்குக் காரணம், அந்தக் கொலை அவ்வகுப்பினுக்குள் நிகழ்ந்தது என்பதனால்தான். "பனீ இஸ்ராயீல்களே! உங்களது முன்னோர்கள் ஹராமாக்கப்பட்டிருந்த ஒருவரைக் கொலை செய்த நேரத்தை எண்ணிப் பாருங்கள்" என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும். இப்படிக் கொலை செய்யப்பட்டவர் ஆமீலுப்னு ஷராஹீல் என்பவராவார்.

நஃப்ஸு என்ற பதத்திற்கு மூச்சு, உயிர், உடல், உடலும் உயிரும் சேர்ந்த ஜீவன் என்று பல பொருள்கள் உள்ளன. இந்த இடத்தில் உடலும் உயிரும் சேர்ந்த ஜீவன் என்பது கருத்து. ஆகவே, இந்த இடத்தில் நஃப்ஸு என்பது மனிதர் என்ற பொருளில் வந்திருக்கிறது.

فَقُلْنَا اضْرِبُوهُ بِبَعْضِهَا ۚ كَذَٰلِكَ يُحْيِي اللَّهُ الْمَوْتَىٰ ۙ
وَيُرِيكُمْ آيَاتِهِ لَعَلَّكُمْ تَعْقِلُونَ ۝

73. ஆகவே உங்களால் அறுக்கப் பெற்ற அ(ந்)த (மாட்டி)னுடைய ஒரு பாகத்தைக் கொண்டு (கொலையுண்ட) அவனை அடியுங்கள் என்று நாம் கூறினோம். (அதுபோல் அவர்கள் செய்யவே கொலையுண்டவன் உயிர் பெற்றுக் கொலை செய்தவன் இன்னானெனக் கூறியபின் பிணமாகி விட்டான்) இவ்விதமாகத்தான் அல்லாஹ் மரணித்தவர்களை உயிர்ப்பிப்பான்; மேலும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு, தன்னுடைய அத்தாட்சிகளை உங்களுக்குக் காட்டுகிறான்.

மேலே 72வது ஆயத்திலுள்ள فَادّٰرَءۡتُمۡ **நீங்கள் சாட்டிவிட முயன்றீர்கள்** என்ற வாக்கியத்துடன் 73 வது வாக்கியம் இணைக்கப் பட்டிருக்கிறது. அதாவது **"நீங்கள் ஒருவரைக் கொலை செய்து விட்டு அதில் நீங்கள் (ஒருவருக்கொருவர்) பழி சுமத்திக் கொண்டீர்கள். அப்பொழுது நாம் கூறினோம்"** என்பதாகும். ஆனால் இவ்விரண்டு வாக்கியங்களுக்கு மிடையில் வந்துள்ள **"ஆனால், நீங்கள் மறைத்து வைத்துக் கொண்டிருந்ததை அல்லாஹ் வெளிப்படுத்துபவனாக இருக்கிறான்"** என்ற வாக்கியம் இடையிட்ட வாக்கியமாகும்.

بِبَعۡضِهَا **"அதனுடைய ஒரு பாகத்தைக் கொண்டு"** என்பதற்கு அந்த மாட்டிலுள்ள அவயவங்களில் சிலதைக் கொண்டு என்பதாகும். ஆகவே, அந்த மாட்டினுடைய நாக்கு அல்லது விலா எலும்பைக் கொண்டு கொல்லப்பட்டவரை அடித்தார்கள். அப்படி

அடித்தவுடன் கொல்லப்பட்ட அந்த மனிதர் உயிர்த்தெழும்பி "என்னை எனது சிறிய தந்தையின் மக்களில் இன்னின்னார் கொன்றனர்" என்று கூறி விட்டு மறுபடியும் பிணமாகி விட்டார். ஆகவே, கொலை செய்த இருவரும் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர் இந்த மாதிரி சொல்ல வேண்டும் என்று ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் யுக்தி செய்தார்கள். அல்லது சூனியம் செய்தார்கள் என்று மற்றவர்கள் அவதூறு சுமத்தக் கூடும். ஆதலின் அப்படிப்பட்ட அவதூறு வரக்கூடாது என்பதற்காக ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களே கொல்லப்பட்டவரின் மீது அந்த மாட்டின் அவயவத்தைக் கொண்டு அடிக்காமல், அடிக்கும்படி மற்றவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

كَذَٰلِكَ يُحْيِي اللَّهُ الْمَوْتَىٰ **கதாலிக யுஹ்யில்லாஹுல் மவ்தா "இவ்விதமாகத்தான் அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிப்பான்"** என்ற வாக்கியம் யாரைக் குறித்துச் சொல்லப்பட்டது என்பதில் இரண்டு விதமான அபிப்பிராயமிருக்கிறது. கொலை செய்யப்பட்டவர் திரும்பவும் உயிர்த் தெழும்பி தன்னைக் கொன்றவர் இன்னார் என்று சொன்னபோது அங்கிருந்தவர்களைக் குறித்து இறைவன் இப்படிச் சொன்னதாகவும் கொள்கிறார்கள். இந்தக் கருத்துப்படி "அதனுடைய சிலதைக் கொண்டு அவனை அடியுங்கள், என்று நாம் கூறினோம். அவர்கள் அப்படியே அடித்தார்கள். அவன் உயிருடன் வந்து தன்னைக் கொன்றவனை அறிவித்தான். இம்மாதிரிதான் அல்லாஹ் இறந்தவர்களை கியாமத்து நாளில் உயிர்ப்பிப்பான்" என்றும் கூறினோம் என்பதாக இந்த ஆயத்திற்குப் பொருள் கொள்ள வேண்டும். இப்படிப் பொருள் கொள்வதில் ஒரு ஆட்சேபனை உண்டாக இடமேற்படுகிறது. அதாவது கியாமத்து நாளில் இறந்தவர்களை எழுப்பிக் கேள்வி கணக்குக் கேட்பதை பனீ இஸ்ராயீல்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்க அவர்களுக்கு இந்த வாக்கியத்தைக் கூறவேண்டிய காரணமென்ன என்பதாக ஒரு கேள்வி உண்டாகலாம். அவர்கள் இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் விஷயத்தைப் பற்றிச் சொல்லால் ஒப்புக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு இறைவன் அதனை பிரத்தியட்சமாக ருஜுப்பித்துக் காட்டினான் என்பதாகவும் பதில் கூறலாம்.

தவிரவும், இறந்தவர்கள் கியாமத்து நாளில் உயிர்த்தெழும்பு வார்கள் என்ற விஷயத்தை நம்பாமல் மறுத்துக் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்தவர் களை நோக்கி இறைவன் இப்படிச் சொன்னான் என்பதாகவும் கருத்துக் கொள்ள இடமிருக்கிறது. இந்த ஆயத்திற்கு இப்படிக் கருத்துக் கொண்டால் மேற்கண்ட விதமாக அர்த்தம் செய்ய வேண்டிய அவசியமுமில்லை, ஆட்சேபனையுண்டாக வேண்டிய இடமுமில்லை என்பதாக **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** எழுதப்பட்டிருக்கிறது.

எவ்விதமான துணைக்கருவி இல்லாமலே எல்லாவற்றையும் முதல் முதலாக உயிர்ப்பித்த அல்லாஹு தஆலா கொலை செய்யப்பட்ட இந்த மனிதனை உயிர்ப்பிப்பதற்காக மாட்டை அறுக்க வேண்டும் என்றும் அதனுடைய ஒரு அவயவத்தைக் கொண்டு கொல்லப்பட்டவன் மீது அடிக்க வேண்டும் என்றும் நிபந்தனைகள் ஏற்படுத்தியதற்குக் காரணம் பலியிடுவது அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் நெருக்க மாவதற்குக் காரணமாக இருக்கிறது. இன்னும் அந்த மாட்டை விற்பதன் மூலம் அனாதையான அந்த வாலிபருக்கு லாப மேற்படவேண்டும். அல்லாஹு தஆலாவின் மீது தவக்குல் வைத்து அவனிடம் பொறுப்புச் சாட்டி விடுவதாலும், பிள்ளை குட்டிகள் மீது இரக்கம் வைப்பதாலும் பெற்றோர்களுக்கு நன்றி செய்வதாலும் ஏற்படுகிற பரக்கத்தை பொது மக்களுக்கு எச்சரிக்கை செய்வதுமாகும்.

ثُمَّ قَسَتْ قُلُوبُكُم مِّن بَعْدِ ذَٰلِكَ فَهِيَ كَالْحِجَارَةِ
أَوْ أَشَدُّ قَسْوَةً ۚ وَإِنَّ مِنَ الْحِجَارَةِ لَمَا يَتَفَجَّرُ مِنْهُ
الْأَنْهَارُ ۚ وَإِنَّ مِنْهَا لَمَا يَشَّقَّقُ فَيَخْرُجُ مِنْهُ الْمَاءُ ۚ
وَإِنَّ مِنْهَا لَمَا يَهْبِطُ مِنْ خَشْيَةِ اللَّهِ ۗ وَمَا اللَّهُ
بِغَافِلٍ عَمَّا تَعْمَلُونَ ۝

74. இதற்குப் பின்னும் உங்கள் இருதயங்கள் இருகிவிட்டன. ஆதலால், அவை (கற்) பாறையைப்போல அல்லது (அதைவிட) அதிகக் கடினமானவையாக இருக்கின்றன; மேலும், நிச்சயமாக (அ)க் கற்களில் ஆறுகள் ஒலித்து ஓடக்கூடியதும் உண்டு. இன்னும், அவற்றில் பிளவு உண்டாகி அதிலிருந்து தண்ணீர் வெளிப்படக் கூடியதும் நிச்சயமாக உண்டு; இன்னும் அல்லாஹ்வின் மீதுள்ள பயத்தினால் (உருண்டு) விழக்கூடியதும் நிச்சயமாக அவற்றில் உண்டு; இன்னும் நீங்கள் செய்வதை அல்லாஹ் மறந்தவனாக இல்லை.

ثُمَّ قَسَتْ قُلُوبُكُمْ **"பின்னர் உங்களுடைய இருதயங்கள் இருகிவிட்டன"** என்ற வாக்கியத்தில் கூறப்பட்டுள்ள **"உங்களுடைய"** என்ற பதம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலிருந்த யூதப் பாதிரிமார்களான அஹ்பார்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கொலை செய்யப்பட்டவனை உயிர்ப்பித்தது, குரங்குகளாகவும் பன்றிகளாகவும் மாற்றப்பட்டது, மலையை உயர்த்தியது முதலிய சம்பவங்களைக் கேட்டு அவர்கள் மனம் இளக வேண்டும். அப்படி இளகாமல் இருந்ததால் இந்த இடத்தில் இறைவன் "பின்னர்" என்ற வார்த்தையைக் கூறி மேற்கண்டவாறு கூறி இருக்கிறான்.

கஸ்வத் கஸாவத் என்பது கல்லில் இருப்பது போல திண்ணமாகுதல் கடினமாகுதல் ஆகியவற்றிற்குச் சொல்லப்படுகிறது. இருதயமானது படிப்பினைக்குரியவைகளைக் கேட்டு அதனை அங்கீகரிப்பதை விட்டு விலகி, அவற்றிற்குக் கூறப்படும் உபதேசங்கள் பயன் படவில்லையாயின் அப்பொழுது "இருதயம் கல்லாகி விட்டது. திண்ணமாகி விட்டது" என்று சொல்லப்படுகிறது.

கல்லில் கடினமும் திண்ணமும் இருப்பதால் கடின சித்தமுள்ள இருதயத்தைக் கல்லுக்கு ஒப்பிடப்படுகிறது. **அவ்** "அல்லது" என்று சொல்லி இருப்பது அந்த இருதயம் கல்லைப் போலிருக்கிறதோ அல்லது திண்ணத்தில் (அதனைப் பார்க்கினும்) மிகக் கடினமாக இருக்கிறதோ என்று சந்தேகமாகக் கூறியதன்று. அல்லாஹு தஆலாவுக்குச் சந்தேகம் ஐயம் ஆகியவைகள் உண்டாகுவதில்லை.

இது அவனுக்கு நிகழ்வது முஹாலான காரியமாகும். ஆகவே அந்த இருதயத்தைக் கல்லுக்குச் சமமாக வைத்துக் கொள்ளுங்கள் அல்லது உங்களுக்கு இஷ்டமானால் அதனைப் பார்க்கினும் மிகக் கடினமானதாகவும் வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியதாகும். தவிரவும், **அவ்** என்ற இந்தப் பதத்திற்கு "மேலும்" என்ற பொருள் கொடுக்கவும் செய்யலாம். ஆகவே, **அவ்** என்ற பதம் சந்தேகத்திற் காகவே ஆதியில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் வேறு பொருள்களிலும் அதனை உபயோகிப்பதுண்டு. இந்த இடத்தில் அந்தப் பதம் சந்தேகத்திற்காக உபயோகிக்கப்படவில்லை.

கடின உலோகங்களாகிய இரும்பு, பித்தளை போன்ற பல உலோகங்கள் இருக்க இருதயத்தைக் கல்லுக்கு ஒப்பிட்டதற்கு காரணம், இரும்பு பித்தளை போன்றவைகள் கடினமான உலோகங்களாக இருந்தாலும் அவைகள் நெருப்பில் உருகக் கூடியனவாக இருக்கின்றன. அவற்றை உருக்கிப் பல பொருட்கள் செய்யப்படுகின்றன. ஆனால், கல் எதற்கும் உருகுவதில்லை. இதனால்தான் அல்லாஹு தஆலா காஃபிர்களின் இருதயத்தைக் கல்லுக்கு ஒப்பிட்டுக் கூறினான்.

மேலும், கல்லைப் பார்க்கினும் இவர்களுடைய இருதயம் கடின சித்தத்தில் மேம்பட்டு இருக்கிறது என்பதை ருஜுப்பிப்பதற்காக கல்லிலிருந்து நதியோடுவதையும், ஊற்றுக்கள் கிளம்புவதையும், அல்லாஹு தஆலாவுக்கு அவைகள் பயந்து மேலிருந்து கீழே உருளுவதையும் ஒன்றன்பின் ஒன்றாக விபரித்திருக்கிறான்.

எனவே, காஃபிரின் இருதயம் கடின சித்தத்தில் கல்லைப் பார்க்கினும் திண்ணமாக இருக்கிறது. கல்லுக்குக் கல்வி படிப்பு ஆகியவைகள் கிடையாது. ஆதலின், அவற்றிற்கு ஏவல் விலக்கல் களைப் பற்றிய கட்டளையும் கிடையாது. அப்படியிருந்தும் அது அல்லாஹு தஆலாவுக்குக் கீழ்படிந்து பிளந்து விடுகிறது. இதனைக் குறித்துத்தான் இறைவன்,

இந்தக் குர்ஆனை ஒரு மலையின் மீதிறக்கி இருப்போமானால் அது தழுமையானதாகவும் அல்லாஹ்வைப்

பயப்பட்டதால் பிளந்ததாகவும் இருக்க நீர் கண்டிருப்பீர் என்பதாக சூரத்துல் ஹஷ்ர் 21 வது ஆயத்தில் கூறி இருக்கிறான். ஆனால், காஃபிர்களின் (கல்புகளென்னும்) இருதயங்களுக்கு விளக்கம், அறிவு, ஒப்புக் கொள்ளும் தன்மை ஆகியவைகள் இருந்தும் அவைகள் தழுமையாகுவதுமில்லை, இளகுவதுமில்லை.

கற்கள் தாதுவர்க்கத்தைச் சேர்ந்தனவாக இருந்தாலும் அவற்றிற்கு அல்லாஹுதஆலா விளக்கத்தைக் கொடுக்கிறான். இன்னும் விஷயத்தை அறிவிக்கிறான் என்பது சுன்னத்து வல்ஜமாஅத்தினரின் கருத்தாகும். அவற்றிற்கும் தொழுகை, தஸ்பீஹு, பயம் ஆகியவைகள் இருக்கின்றன. இதனைக் குறித்து அல்லாஹு தஆலா **மேலும், அவனுடைய புகழைக் கொண்டு துதி செய்யாமல் (பிரபஞ்சத்தின்) எந்த பொருளும் இல்லை** (சூரத்துல் இஸ்ரா 44) என்று கூறி இருக்கிறான் ஆகவே, ஒவ்வொருவரும் இதனை நம்புவது அவசியமாகும்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துபைர் என்னும் மலையில் இருந்து கொண்டிருந்த பொழுது காஃபிர்கள் தேடிக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அந்த மலை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் “தாங்கள் என்னை விட்டு இறங்கி விடுங்கள். ஏனெனில், தாங்கள் என் மீது இருக்கும் போது தாங்கள் பிடிக்கப்பட்டால் அதற்காக அல்லாஹு தஆலா என்னை வேதனை செய்வான் என்பதை அஞ்சுகிறேன்” என்று கூறிற்று. அப்பொழுது ஹிரா மலை “என்னிடம் வந்து விடுங்கள். என்னிடம் வந்து விடுங்கள்” என்று அழைத்துக் கொண்டது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குத்பா ஓதும் போது பேரீத்த மரக்கட்டை ஒன்றில் சாய்ந்து கொண்டு குத்பா ஓதிக் கொண்டிருந்தார்கள். பிறகு, மின்பர் தயாராகி விடவே, அதில் சாய்வதை விட்டு விட்டு, மின்பரின் மீது குத்பா ஓத ஆரம்பித்தார்கள். அப்பொழுது பேரீத்த மரத்துக் கட்டையான அந்தத் தூண் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பிரிவிற்காக மிக வருந்தி ஒட்டகம் முனுமுணுப்பது போல் முனுமுணுத்து அழுதது.

அதன் சப்தத்தை மஸ்ஜிதிலிருந்தவர்கள் அனைவரும் கேட்டனர். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மின்பரிலிருந்து இறங்கி வந்து அதனைக் கட்டித் தழுவினார்கள். அப்பொழுதுதான் அந்தச் சப்தம் ஒடுங்கிற்று.

பிறகு உங்களுடைய இருதயங்கள் இருகி விட்டன என்பதற்கு **பிறகு உங்களுடைய கல்புகள் காய்ந்துவிட்டன** என்பது பொருளாகும் என்று ஹுக்கமாக்களிற் சிலர் கூறி இருக்கிறார்கள். கல்பு காய்ந்து விட்டது என்பது இரண்டு விதமான தண்ணீர்கள் இல்லாமல் காய்ந்து விடுவதாகும்.

1. அல்லாஹு தஆலாவை அஞ்சுதல் என்கிற தண்ணீர் ஒருவகை.

2. சிருஷ்டிப் பொருள்களின் மீது இரக்கம் வைத்தல் என்ற தண்ணீர் மற்றொரு வகை.

ஆகவே, அல்லாஹு தஆலாவைப் பற்றிய பயமும், சிருஷ்டிப் பொருள்களின் மீது இரக்கம் வைத்தலும் இல்லாத இருதயம் ஒவ்வொன்றும் கல்லைப் போன்றும், இன்னும் அதனைப் பார்க்ினும் அதிகக் கடினமாகவும் இருக்கிறது என்பது கருத்தாகும்.

“அல்லாஹு தஆலாவுடைய திக்ரு இல்லாமல் (வீணான) பேச்சை மட்டும் நீங்கள் அதிகமாக்க வேண்டாம். ஏனெனில், அல்லாஹு தஆலாவுடைய திக்ரு இல்லாமல் (வீணாண) பேச்சை மட்டும் அதிகமாக்குவது கல்புக்குக் கஸ்வத்தாக (கடின சித்தமுள்ளதாக) இருக்கிறது. இன்னும் நிச்சயமாக ஜனங்களில் அல்லாஹு தஆலாவை விட்டு அதிக தூரமாகவுள்ளவர்கள் கடின சித்தமுள்ள இதயம் உடையவர்கள்தான்” என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

أَفَتَطْمَعُونَ أَن يُؤْمِنُوا لَكُمْ وَقَدْ كَانَ فَرِيقٌ
مِّنْهُمْ يَسْمَعُونَ كَلَامَ اللَّهِ ثُمَّ يُحَرِّفُونَهُ مِن بَعْدِ مَا

عَقَلُوْهُ وَهُمْ يَعْلَمُوْنَ ۝

75. (விசுவாசிகளே!) உங்களை அவர்கள் விசுவாசிப் பார்கள் என்று ஆசை வைக்கிறீர்களா? இவர்களின் முன்னோர் களில் ஒரு பிரிவினரிர் அல்லாஹ்வின் வாக்கியத்தைச் செவியேற்று, பிறகு அதனை நன்கு விளங்கிய பின்னரும், அதை அவர்கள் அறிந்தவர் களாயிருக்கும் நிலையிலும் அதை மாற்றி விட்டனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனங்களை இஸ்லாத்தில் அழைக்கும் விஷயத்தில் மிகவும் தீவிரமாக இருந்தார்கள். இன்னும் ஜனங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு ஈமான் கொள்ள வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார்கள். ஆனால் அவர்கள் வேண்டுமென்றே மனமுரண்டாக ஈமான் கொள்ளாமல் இருந்ததால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மனவருத்தமுண்டாகிக் கொண்டிருந்தது. ஆதலின், பனீ இஸ்ராயீல்கள் பெரும் பெரும் அத்தாட்சிகளை எல்லாம் பார்த்தும் அவர்கள் மனமுரண்டாக இருந்த சம்பவத்தை அல்லாஹு தஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கின்றான்.

أَفَتَطْمَعُوْنَ **"நீங்கள் விரும்புகின்றீர்களோ"** என்ற வாக்கியத்திலுள்ள "நீங்கள்" என்ற பதம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் மூமின்களையும் குறித்துச் சொன்னதாகும்.

தவிரவும் "விரும்புகிறீர்களோ?" என்ற கேள்வி விஷயத்தை உணர்ந்து கொள்வதற்காகக் கேட்ட கேள்வியல்ல. "நீங்கள் விரும்ப வேண்டாம்" என்பதை அறிவிப்பதற்காகவே அந்த முறையில் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.

كَلَامَ اللّٰهِ **"அல்லாஹ்வின் வசனம்"** என்றது இந்த இடத்தில் தவ்ராத் வேதத்தைக் குறிப்பிட்டுச் சொன்னதாகும்.

يُحَرِّفُوْنَهٗ **"அதை அவர்கள் மாற்றி விட்டார்கள்"** என்பது தவ்ராத் வேதத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிக் கூறப் பட்டிருந்த வர்ணனைகளையும் இதர சில விஷயங்களையும் மாற்றிவிட்டார்கள் என்பது கருத்து.

தவிர தவ்ராத் வேதத்தை வாங்கி வருவதற்காக ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் தூர்சீனா மலைக்குச் சென்றிருந்த 40 தலைவர்களும் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் அல்லாஹு தஆலா பேசியதையும், அவன் கூறிய ஏவல் விலக்கல் களையும் கேட்டுக் கொண்டிருந்தனர். பிறகு அவர்கள் பனீ இஸ்ராயீல்களிடம் வந்து "நாங்கள் அல்லாஹு தஆலாவின் வசனத்தைக் கேட்டோம். ஆனால், அவன் இந்த ஏவல் விலக்கல் களைக் கூறிக் கடைசியாக 'இந்தக் காரியத்தைச் செய்ய உங்களுக்குச் சக்தி இருந்தால் செய்யுங்கள், நீங்கள் இவற்றைச் செய்யாமலிருக்க வேண்டுமென்று விரும்பினாலும் அப்படிச் செய்யாமலிருந்து விடுவதில் குற்றமில்லை' என்றும் கூறினான்" என்பதாகக் கூறினார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால், **தைஸீருஸ்ஸஹீஹ்** என்ற கிரந்தத்தில் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் சென்ற தலைவர்கள் நேருக்கு நேராக அல்லாஹு தஆலாவின் வசனத்தைக் கேட்க வில்லை. இந்த உலகில் நேருக்கு நேராக அல்லாஹ்வின் வசனத்தைக் கேட்பதில் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் வேறு யாரும் கூட்டாக இருக்கவில்லை. ஆகவே அல்லாஹ்வின் வாக்கியத்தை அவர்கள் கேட்டுக் கொண்டார்கள் என்பதற்கு "ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தவ்ராத்திலிருந்து ஓதியதன் மூலம் அதனைக் கேட்டுக் கொண்டார்கள் என்பதுதான் கருத்தாகும்".

وَإِذَا لَقُوا الَّذِيْنَ اٰمَنُوْا قَالُوْٓا اٰمَنَّا ۚ وَإِذَا خَلَا بَعْضُهُمْ إِلٰى
بَعْضٍ قَالُوْٓا اَتُحَدِّثُوْنَهُمْ بِمَا فَتَحَ اللّٰهُ عَلَيْكُمْ لِيُحَآجُّوْكُمْ
بِهٖ عِنْدَ رَبِّكُمْ ۗ اَفَلَا تَعْقِلُوْنَ ۝

76. மேலும் அவர்கள் (யூதர்களிலுள்ள முனாஃபிக்குகள்) விசுவாசிகளைச் சந்திக்கும் போது 'நாங்களும் விசுவாசிக்கின்றோம்' என்று கூறுகின்றனர்; ஆனால், அவர்களிற் சிலர் (வேறு) சிலருடன் தனித்தால் (விசுவாசிகளாகிய) அவர்கள் (நியாயத் தீர்ப்பு நாளில்) உங்கள் மீது உங்களுடைய 'ரப்'பிடம் தர்க்கம் செய்வதற்காகவா அல்லாஹ் உங்கள் மீது (துவ்ராத் வேதத்தில்) வெளியாக்கி யிருப்பதை அவர்களுக்குக் கூறுகின்றீர்கள். (அவர்கள் உங்களிடத்தில் தர்க்கம் செய்வார்களென்பதை) நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா என்று கூறுகின்றார்கள்.

فَتَحَ اللَّهُ **"அல்லாஹ் உங்கள் மீது வெளியாக்கி இருப்பதை"** என்பதற்கு அல்லாஹு தஆலா தவ்ராத் வேதத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துச் சொல்லியுள்ள வர்ணிப்புகள்" என்பதாகும்.

அல்லாஹுவுடைய வேதத்தில் இப்படி இருக்கிறது என்று சொல்வதற்கு **ஹுவ இன்தல்லாஹி கதா** என்று அறபிகள் சொல்வது வழக்கம். அதுபோல உங்களுடைய றப்பின் வேதத்தில் அவனது கட்டளையில் என்பதற்கு عِنْدَ رَبِّكُمْ "உங்களுடைய றப்பிடம்" என்று இந்த இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

أَوَلَا يَعْلَمُونَ أَنَّ اللَّهَ يَعْلَمُ مَا يُسِرُّونَ وَمَا يُعْلِنُونَ ۝

77. (ஆனால்) அவர்கள் (பிறருக்குச் சொல்லாமல்) மறைத்துக் கொண்டதையும் அவர்கள் வெளிப்படுத்துவதையும், நிச்சயமாக அல்லாஹ் (நன்கு) அறிவான் என்பதை அவர்கள் அறிய மாட்டார்களா?

அவர்கள் ஈமான் கொண்டுள்ளதாக வெளிக்குச் சொல்லிக் கொண்டாலும் அவர்கள் காஃபிர்களாகத்தான் இருக்கிறார்கள் என்ற விஷயத்தை அல்லாஹ் அறிந்துதான் இருக்கிறான். ஆகவே, அவர்கள்

மறைத்து வைத்திருக்கின்றவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவிக்கும் வஹியின் மூலமாக அல்லாஹு தஆலா மூமின்களுக்கு அறிவித்து விடுகிறான். ஆதலின், யூதர்களுக்கும் மூமின்களுக்கும் தர்க்கம் நடந்து கொண்டுதான் இருக்கும். யூதர்கள் மூமின்களிடம் பேசி மிகைத்து விடமுடியாது. ஆகவே, தங்களிலுள்ள முனாஃபிக்குகளை யூதர்கள் கண்டிப்பதால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படப்போவதில்லை என்பதை இந்த ஆயத்தில் இறைவன் அறிவித்திருக்கிறான்.

وَمِنْهُمْ أُمِّيُّونَ لَا يَعْلَمُونَ الْكِتَابَ إِلَّا أَمَانِيَّ وَإِنْ هُمْ إِلَّا يَظُنُّونَ ۝

78. மேலும், (யூதர்களாகிய) அவர்களில் உம்மீகளும் இருக்கின்றனர். அவர்கள் (துங்கள் தலைவர்களால் சொல்லப்படுகின்ற சில) பொய்களைத் தவிர (தவ்ராத்) வேதத்தை அறிய மாட்டார்கள். இன்னும் அவர்கள் (உறுதியில்லாத வெறும் நினைப்புகளை) எண்ணுகிறார்களே தவிர (வேறு) இல்லை.

உம்மீ என்பது ஆதியில் **"உம்மத்துல் அறப்"** என்ற வார்த்தைகளிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது. பிறகு, எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு உம்மீ என்ற இந்தப் பெயர் இரவல் வாங்கப்பட்டது. ஆகவே, இதன்படி وَمِنْهُمْ أُمِّيُّونَ **வமின்ஹும் உம்மிய்யூன** என்ற வாக்கியத்திற்கு "அந்த யூதர்களில் எழுதப் படிக்காதவர்களும் இருக்கிறார்கள்" என்பது கருத்து.

அல்கித்தாப் என்பதற்கு இந்த இடத்தில் தவ்ராத் வேதம் என்பது கருத்து. எழுதப்படிக்கத் தெரியாத அந்தப் பாமரர்கள் தவ்ராத் வேதத்தைப் படித்து அதிலுள்ள விஷயங்களை உணர்ந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆதலின் அவர்கள் இவ்வேதத்தில் சொல்லப்பட்ட நபித்துவத்தின் ஆதாரங்களைத் தெரிந்து எங்ஙனம் ஈமான் கொள்ள முடியும் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

அமானீ என்பது **அம்னியத்** என்பதற்குப் பன்மைச் சொல்லாகும். இது **தமன்னா** என்பதிலிருந்து பிறந்தது. தாங்களாக மனதில் எண்ணிக் கொண்டு பொய்யாக இட்டுக் கட்டுபவற்றிற்கு **தமன்னீ** என்று பெயர்.

யூதர்களிலுள்ள பாமரர்கள் தவ்ராத் வேதத்தை நேரடியாகப் படித்து உணர்ந்து கொள்ள முடியாமலிருந்ததால் அவர்களிலுள்ள தலைவர்கள் தவ்ராத் வேதத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிக் கூறப்பட்டவைகளை மறைத்து விட்டுப் பொய்யாக இட்டுக் கட்டியவற்றையே நம்பிக் கொண்டிருக்கின்றனர். அதிலும் அவர்களுக்குள்ள ஈமான் உறுதியான ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. அப்படி இருக்க உறுதியான கல்வியை அடித்தளமாகக் கொண்டுள்ள ஈமானை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது என்பதாக இறைவன் இந்த ஆயத்தில் அறிவித்துள்ளான்.

فَوَيْلٌ لِّلَّذِينَ يَكْتُبُونَ الْكِتَابَ بِأَيْدِيهِمْ ثُمَّ يَقُولُونَ هَٰذَا مِنْ عِندِ اللَّهِ لِيَشْتَرُوا بِهِ ثَمَنًا قَلِيلًا ۖ فَوَيْلٌ لَّهُم مِّمَّا كَتَبَتْ أَيْدِيهِمْ وَوَيْلٌ لَّهُم مِّمَّا يَكْسِبُونَ ﴿٧٩﴾

79. எனவே, தங்கள் கைகளால் (மாற்றப்பட்ட), வேதத்தை எழுதி, பின்பு அதற்கு ஈடாக அற்பக் கிரயத்தைப் பெறும் பொருட்டு இது அல்லாஹ்விடமிருந்து வந்த (உண்மையான தவ்ராத்) தென்று கூறுகின்றவர்களுக்கு "வைல்" உண்டாவதாக! இன்னும் அவர்களுடைய கைகள் எழுதியதாலும் அவர்களுக்கு "வைல்" உண்டாவதாக! மேலும், (அதனால்) அவர்கள் சம்பாத்தியம் செய்ததனாலும் அவர்களுக்கு "வைல்" உண்டாவதாக.

வைல் என்பதற்குப் பெரும் வேதனை என்று பொருள். "வைல் என்பது நரகத்தில் உள்ள ஒரு ஓடை. நிராகரிப்பாளர்கள் நரகத்தின் பாதாளத்திற்குப் போய் சேருவதற்கு முன் வைல் என்னும் இந்த

ஓடையில் நாற்பது வருடகாலம் கிடப்பார்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"வைல் என்பது நரகத்திலுள்ள ஒரு ஓடை; இந்த உலகத்திலுள்ள மலைகளை எல்லாம் அதில் கொண்டு போய் போட்டாலும் அதிலுள்ள கடுமையான உஷ்ணத்தினால் அந்த மலைகள் உருகி விடும்" என்பதாக ஸயீதுப்னுல் முஸய்யப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

எனவே, விபத்தைக் கொடுக்கக் கூடிய ஒவ்வொரு சம்பவத்திற்கும் "வைல்" என்று சொல்லப்படுகிறது.

هَٰذَا مِنْ عِندِ اللَّهِ **"இது அல்லாஹ்விடமிருந்து வந்தது"** என்ற வாக்கியத்திலுள்ள "இது" என்ற பதம் யூதர்கள் தாங்களாக எழுதிக் கொண்டதைச் சுட்டிக் காட்டுகிறது.

யூதர்களிடமிருந்து அவர்களுடைய பாதிரிமார்கள் வாங்குகிற பணம், காசு, வெகுமதி முதலியவைகள் அழிந்து விடக் கூடியனவாகும். இதனால் இவர்களுக்கு (தவாஃபு என்னும்) நன்மையும் இல்லை, இவர்கள் வாங்குகிற இந்தப் பணங்கள் ஹராமானவைகளாகும். ஆகவே, ஹராமானவற்றில் பரக்கத்து இல்லை. அவை அல்லாஹு தஆலாவிடத்தில் வளர்வனவாகவுமில்லை என்பதற்காகவே "அற்ப கிரயத்தை" என்று சொல்லப்பட்டது.

ரிவாயத்து:- "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்குப் போனபோது யூத உலமாக்கள் தங்களது தலைமைப் பொறுப்பும், பொது மக்கள் தங்களுக்குக் கொடுத்து வரும் வருமானமும் தங்களுக்குக் கிடைக்காமல் போய் விடும் என்று நினைத்து யூதர்களிலுள்ள பொது மக்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஈமான் கொள்ள விடாமல் தடுத்து விடுவதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் களுடைய அடையாளங்களைப் பற்றி தவ்ராத்தில் "அழகான முகத்தை யுடையவர், சுர்மா வரைந்த கண்ணுள்ளவர், நடுத்தரமானவர்" என்று இருந்ததை மாற்றி "நெட்டையர், நீலக்கண்ணுள்ளவர்" என்று எழுதி

அவர்களிலுள்ள பாமரர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அடையாளத்தைக் குறித்து அவர்களிடம் கேட்கும் போது அவர்கள் மாற்றி எழுதி வைத்திருப்பதை ஓதிக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கூறிய அடையாளம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இல்லாதிருப்பதைக் கண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அப்பாமரர்கள் பொய்ப்பித்துக் கொண்டிருந்தார்கள்''.

وَقَالُوا لَنْ تَمَسَّنَا النَّارُ إِلَّا أَيَّامًا مَعْدُودَةً ۚ قُلْ أَتَّخَذْتُمْ
عِنْدَ اللَّهِ عَهْدًا فَلَنْ يُخْلِفَ اللَّهُ عَهْدَهُ ۖ أَمْ تَقُولُونَ
عَلَى اللَّهِ مَا لَا تَعْلَمُونَ ﴿٨٠﴾

80. இன்னும், எண்ணப்பட்ட சில நாட்களைத் தவிர்த்து (நீண்ட நாள், நரக) நெருப்பு எங்களைத் தீண்டவே செய்யாதென்று (யூதர்களாகிய) அவர்கள் கூறுகின்றனர். நீங்கள் அல்லாஹ்விடம் (இத்தகைய) ஒரு வாக்குறுதியைப் பெற்றிருக்கின்றீர்களா? (அவ்வாறு) அல்லாஹ் (வாக்குறுதி அளித்திருந்தால்) தன்னுடைய வாக்குறுதியை மீறவே மாட்டான். அல்லது நீங்கள் அறியாததை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுகின்றீர்களா என்று (நபியே) நீர் (அவர்களைக்) கேளும்.

நம்முடைய மூதாதையர்கள் காளைமாட்டை வணங்கிய 40 நாட்களுக்குத்தான் நமக்கு வேதனையுண்டாகும். அதற்கு மேல் அதிகமாக வேதனை செய்யப்பட மாட்டோம் என்று யூதர்கள் சொன்னார்கள் என்பதாகச் சொல்லப்படுகிறது. தவிர, உலகத்திற்கு மொத்தம் வயது ஏழு ஆயிரம்தான். ஆகவே, ஒரு ஆயிரம் வருடத்திற்குப் பதிலாக ஒரு நாள் வீதம் நாங்கள் ஏழு நாட்களுக்குத்தான் வேதனை செய்யப்படுவோம் என்று அவர்கள் சொன்னார்கள் என்றும் ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

ரிவாயத்து:- அந்த யூதர்கள் நரகத்தில் கிடக்கும் போது அவர்கள் சொன்ன நாட்கெடுவு தீர்ந்து விட்ட பின்னர் நரகத்திலுள்ள ஜபானிய்யாக்கள் அவர்களை நோக்கி ''அல்லாஹு தஆலாவின் பகைவர்களே! நீங்கள் சொன்ன தவணை கடந்து விட்டது. ஊழி காலம் நரகத்தில் கிடக்க வேண்டுமென்பதை நீங்கள் இப்பொழுதேனும் நம்புங்கள்'' என்று கூறுவார்கள் என்பதாக ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

بَلَىٰ مَنْ كَسَبَ سَيِّئَةً وَأَحَاطَتْ بِهِ خَطِيئَتُهُ فَأُولَٰئِكَ أَصْحَابُ
النَّارِ ۖ هُمْ فِيهَا خَالِدُونَ ﴿٨١﴾

81. உண்மையே! எவர்கள் தீமையைச் சம்பாதித்து அவர்களுடைய தீமை அவர்களைச் சூழ்ந்து கொண்டதோ அவர்கள் நரகவாசிகளே! அதில் அவர்கள் என்றென்றுமே தங்கி விடுவார்கள்.

ஆகவே, அவர்கள் எண்ணிக் கொண்டிருப்பது போல் ஏழு நாள் அல்லது நாற்பது நாட்களுக்குப் பின் அவர்களுக்கு வேதனை எங்கே நீங்கப் போகிறது. ஒரு போதும் நீங்காது.

وَالَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ أُولَٰئِكَ أَصْحَابُ الْجَنَّةِ ۖ
هُمْ فِيهَا خَالِدُونَ ﴿٨٢﴾

82. இன்னும், எவர்கள் (குர்ஆனையும் ரசூலையும்) விசுவாசித்து நற்செயல்களையும் செய்கின்றனரோ அவர்கள் சுவர்க்கவாசிகளே! அதில் அவர்கள் என்றென்றுமே தங்கி விடுவார்கள்.

சுவர்க்கவாதிகள் சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றப்படவும் மாட்டார்கள். அங்கு அவர்கள் மரணமடையவும் மாட்டார்கள். அங்கு ஊழி காலம் தரிபட்டிருப்பார்கள். இந்த ஆயத்தில் சுவர்க்கவாதிகளைப்

பற்றியும், இதற்கு முந்திய ஆயத்தில் நரகவாதிகளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. அடியார்களுக்கு நற்புத்தி புகட்டும் விஷயத்தில் நயமும் பயமும் கூறுவதுதான் (சரியான முறையாக அதாவது) அல்லாஹு தஆலாவின் சுன்னத்தாக இருந்து வருகிறது. இந்த முறைக்கேற்ப இறைவன் இந்த இடத்திலும் நரகத்தைப் பற்றி அச்சுறுத்தியும் சுவர்க்கத்தைப் பற்றி ஆசையூட்டியும் இரண்டு விஷயங்களைச் சேர்த்துக் கூறி இருக்கிறான். இவ்விதமாக நயம் பயம் ஆகிய இரண்டில்தான் மனிதன் கமாலிய்யத்திற்கும் பரிபூரணத் துவத்திற்கும் முன்னேறுகின்றான். இன்னும் ஜலால் ஜமால் ஆகியவற்றிற்குரியவைகளைக் கொண்டும் இன்பம் பெறுகின்றான்.

وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَ بَنِيْٓ اِسْرَآءِيْلَ لَا تَعْبُدُوْنَ اِلَّا اللّٰهَ
وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا وَّذِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ
وَقُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا وَّاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ ؕ
ثُمَّ تَوَلَّيْتُمْ اِلَّا قَلِيْلًا مِّنْكُمْ وَاَنْتُمْ مُّعْرِضُوْنَ ۝٨٣

83. மேலும் "அல்லாஹ்வைத் தவிர (வேறு எதையும்) நீங்கள் வணங்காதீர்கள்" இன்னும் "பெற்றோர்களுக்கும், உறவினர் களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்யுங்கள்;" மேலும் ஜனங்களுக்கு நல்ல (வார்த்)தை கூறுங்கள்; இன்னும் தொழுகையை நிறைவேற்றுங்கள்; இன்னும் 'ஜகாத்'தைக் கொடுங்கள் என்று நாம் (தவ்ராத்தின் மூலமாக) இஸ்ராயீலின் சந்ததி (களாகிய உங்)களிடம் வாக்குறுதி வாங்கிய நாளை (நீங்கள் எண்ணிப் பாருங்கள்). பின்பு உங்களிற் சிலரைத் தவிர (மற்றையோர்) புறக்கணித்து விட்டீர்கள்; மேலும் (உங்கள் மூதாதையரில் சிலரைப் போலவே) நீங்களும் புறக்கணிப்பவர்களாக இருகின்றீர்கள்.

மீதாக்கு என்பது வாக்குறுதி. இது இரண்டு வகைப்படும்.

1. ஆதியில் ரோஸே மீதாக்கில் வாங்கிய வாக்குறுதி ஒன்று.

2. நுபுவ்வத்துடையவும் ரிஸாலத்தினுடையவும் வாக்குறுதி மற்றொன்று. இது வேதத்தில் இடப்படும் கட்டளைகளாகும்.

இந்த இடத்தில் சொல்லப்பட்ட வாக்குறுதி இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்ததாகும்.

இந்த ஆயத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் மூமின்களையும் முன்னோக்கிச் சொல்லப்பட்டது. ஏனெனில், அக்காலத்திலிருந்த யூதர்களின் முன்னோர்களது செய்கைகள் ஈமான் போய் விடக்கூடிய அளவிற்கு அவ்வளவு மோசமானவைகளாக இருந்தன. அப்படியுள்ளவர்களின் சந்ததியினர் எல்லோரும் ஈமான் கொண்டுவிட வேண்டும் என்று ஆசை வைப்பதை விட்டு விட வேண்டும் என்பதற்காக, அவர்களுடைய நிலைமைகளைப் பற்றி இவ்விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

அறிந்து கொள்:- இந்த ஆயத்தில் பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கவனித்து நடந்து கொள்வது எல்லோர் மீதும் கடமையாகும்.

1. வணக்கம்:- அல்லாஹு தஆலாவை மட்டும்தான் அடியான் வணங்க வேண்டும் என்று இதற்கு நிபந்தனை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. எனவே, ஒருவன் இவ்வணக்கத்தில் சிருஷ்டிப் பொருளைக் கவனித்தோ அல்லது இம்மை மறுமையிலுள்ள பாக்கியங்களில் ஏதேனும் ஒரு பாக்கியம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவோ அல்லது ஏதேனும் ஒரு காரணத்திற்காக அந்த வணக்கத்துடன் ஒன்றைக் கலந்தோ வணக்கம் புரிவானாயின் அவன் (இக்லாஸாக) கலப்பற்ற முறையில் அல்லாஹு தஆலாவுக்கு வழிப்பட்டவன் என்ற அந்தஸ்திலிருந்து நீங்கி விடுகிறான்.

2. பெற்றோர்களுக்கு அதாவது தாய் தந்தைக்கு நன்றி செய்தல்:- பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை இறைவன் தனக்குச் செய்ய வேண்டிய கடமையுடன் சேர்த்துக் கூறி இருப்பதால் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் மிகவும் முக்கியமானவைகள் என்று தெரிந்து கொள்கிறோம். ஏனெனில்,

மனிதனுடைய முதல் உற்பத்தி அல்லாஹு தஆலாவிடத்திலிருக்கிறது. இரண்டாவது உற்பத்தி அதாவது மனிதர்களை இறைவன் பரிபாலித்தது பெற்றோர்களின் மூலமாக இருக்கிறது.

பெற்றோர்களுக்கு நன்றி செய்தல் என்பது அவ்விருவருடன் நல்லவிதமாக சேர்ந்து உறவு கொண்டாடுவதும், அவ்விருவருக்கும் பணிந்து அவர்களது கட்டளைக்குக் கீழ்ப்படிதலும், அவ்விருவருக்கும் நேசமானவர்களுடன் நேசமாக இருப்பதும், அவ்விருவம் மரணித்து விட்ட பின்னர் அவர்களது பாவ மன்னிப்புக்காக அல்லாஹு தஆலாவிடம் துஆச் செய்வதுமாகும்.

"பெற்றோர்களுக்கு நன்றியை (ச் செய்யுங்கள்)" என்ற இந்த ஆயத்தில் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள்தான் எல்லாச் சிருஷ்டி களிலும் சிறந்தவர்கள் என்பதைச் சமிக்ஞையாக அறிவிக்கப் பட்டிருக்கிறது என்று **தாவீலாத்துன்னஜ்மிய்யா** என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஏனெனில், இவர்கள்தான் மக்களுடைய வெளிரங்கமான உஜூதுக்கு (தோற்றத்துக்கு)க் காரணமாக இருப்பவர்கள். ஆனால், அல்லாஹு தஆலாவுடைய வணக்கத்திற்குப் பிறகு, அதற்கு அடுத்தபடியில் இருப்பது அவ்விருவருக்கும் நன்றி செய்வதேயாகும். ஏனெனில், அல்லாஹு தஆலாதான் அவ்வடியானுடைய பெற்றோர் களையும் உற்பத்தி செய்தான். ஆகவே, அல்லாஹு தஆலாவுடைய வணக்கத்தை விட்டு விட்டுப் பெற்றோர் களுக்கு நன்றி செய்வதை முதன்மையாக எடுத்துக் கொள்ளக் கூடாது (அதாவது அல்லாஹு தஆலாவுடைய கட்டளைக்கு மாறு செய்யும்படி அல்லது பாவமான காரியத்தைச் செய்யும்படி பெற்றோர்கள் கூறுவார்களாயின் பெற்றோர்கள் சொல்லை மதிக்கக் கூடாது என்பதும், அல்லாஹு தஆலாவுக்கு மாறு செய்யும் விஷயத்தில் பெற்றோர்களின் சொல்லைக் கேட்காமல் இருப்பதுடன் இறைவனின் கட்டளையையே முக்கியமாக நிறைவேற்ற வேண்டும் என்பதும் இதன் கருத்தாகும்).

3. அனாதைகளுக்கு நன்றி செய்தல்:- "முஸ்லிம்களிலுள்ள அனாதையை அல்லாஹு தஆலா சீமானாக ஆக்கும் வரை எவனொருவன் அவனைத் தனது உணவிலும் குடிப்பிலும் சேர்த்துக் கொள்கிறானோ அவனுடைய பாவங்கள் நிச்சயமாக மன்னிக்கப் படுகின்றன. ஆனால், அவன் பிழை பொறுக்க முடியாத காரியத்தைச் செய்யாமலிருக்க வேண்டும்" என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

4. ஏழைகளுக்கு நன்றி செய்தல்:- "விதவைகளுக்காகவும் ஏழைகளுக்காகவும் முயற்சி செய்பவன் அல்லாஹ்வுடைய பாதையில் ஜிஹாது செய்பவனைப் போலிருக்கிறான்" என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

5. நல்ல வார்த்தை சொல்லுதல்:- அல்லாஹு தஆலாவைத் தேடக் கூடியவன் அவனுடைய வணக்கத்தின் பொறுப்பை நிறை வேற்றிய பின், பெற்றோர்களிடத்திலும் மேலே சொல்லப்பட்ட மற்ற இரு வகையினரிடத்திலும் கருணையையும் இரக்கத்தையும் காண்பித்த பிறகு, அவன் ஜனங்களுக்கு நல்லதைச் சொல்ல வேண்டும். அதாவது ஜனங்களுக்கு நன்மையை ஏவித் தீயதை விலக்க வேண்டும். இன்னும் அவர்களை நல்லுபதேசத்தின் மூலமாக, அல்லாஹு தஆலாவின் பால் அழைக்க வேண்டும். இன்னும் அவர்களுக்கு அல்லாஹு தஆலாவுடைய பாதையைக் காண்பிக்க வேண்டும். அழகிய நற்குணத்துடன் அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும். அவனுடைய வார்த்தை மென்மையாகவும் அவனுடைய முகம் மலர்ந்ததாகவும் இருக்க வேண்டும். இதில் நல்லோர், கெட்டோர், பிது அத்துக்காரர், மார்க்க பக்தர் என்று பாகுபாடு செய்யக்கூடாது. ஆனால், தீயோரும், கெட்டோரும், பிது அத்துக்காரர்களும் தங்களுடைய கொள்கையை இவர் பொருந்திக் கொண்டிருக்கிறார் என்று எண்ணிக் கொள்ளத்தக்க விதமாகவும் பேசக்கூடாது.

وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ لَا تَسْفِكُونَ دِمَاءَكُمْ وَلَا تُخْرِجُونَ
أَنفُسَكُم مِّن دِيَارِكُمْ ثُمَّ أَقْرَرْتُمْ وَأَنتُمْ تَشْهَدُونَ ۝

84. இன்னும் (யூதர்களே தவ்ராத்தில்) உங்களிடம் வாக்குறுதி வாங்கிய நேரத்தை (எண்ணிப் பாருங்கள்) உங்களுடைய